AR

619

உரை நடையா? குறை நடையா?

ஏகம் பதிப்பகம்
சென்னை

மா.நன்னன்

நூல் மதிப்புரைக்காக.....

உரை நடையா?
குறை நடையா?

பேராசிரியர்

புலவர் **மா. நன்னன்** எம்.ஏ., பிஎச்.டி.,

ஏகம் பதிப்பகம்

தபால் பெட்டி எண் : 2964

3, பிள்ளையார் கோயில் 2ஆம் சந்து, முதல் மாடி,

திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

✆ 28529194, 31169283

உரிமை © மாணிக்கம் நன்னன் (1923)

நூலின் பெயர் : **உரை நடையா? குறை நடையா?**

ஆசிரியர் : **பேராசிரியர் மா. நன்னன் புலவர், எம்.ஏ., பிஎச்.டி.**

முதற் பதிப்பு : தி.வ.ஆ. 2035 மேழம்
கி.பி. 2004 சூலை

தாளின் தன்மை : 11.6 கி.கி.

நூலின் அளவு : கிரௌன்

எழுத்தின் அளவு : 11 புள்ளி

பக்கங்கள் : 160

விலை : **ரூ. 50**

ஒளியச்சுக் கோவை : **ஏகம் கணினி,**
சென்னை - 600 005.
✆ 28529194

அச்சாக்கம் : **அன்னை ஆப்செட்,**
சென்னை - 600 014.

நூலின் கட்டுமானம் : தையல்

வெளியிட்டோர் : **ஏகம் பதிப்பகம்,**
த.பெ. எண் 2964,
3, பிள்ளையார் கோயில் தெரு,
2ஆம் சந்து, முதல் மாடி,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

ஏகம் வெளியீட்டு எண் : 17

1. உள்ளுறை

வரிசை எண் — பக்க எண்

1. உள்ளுறை 3
2. முகவுரை 4
3. சொல்லியல் 7
4. இடவியல் 28
5. உரிமையியல் 38
6. விளக்கவியல் 55
7. தொடரியல் 85
8. வேற்றுமை மயங்கியல் 148
9. முதற்குறிப்பு விளக்கம் 153
10. குறிப்புகள் 154

2. முகவுரை

இக் காலத் தமிழ் உரை நடைபற்றிய எமது அய்ந்தாம் நூலாக ''உரை நடையா? குறை நடையா?'' என்னும் இது வெளிவருகிறது. ''தமிழ் உரை நடை போகிற போக்கு...'' என்னும் இப் பொருள் பற்றிய எமது நான்காம் நூலின் முகவுரையில் அய்ந்தாம் நூல் உருவாவதைத் தெரிவித்திருந்தோம்; அவ்வாறே இவ் வைந்தாம் நூல் அச்சிடப்படும் இப்போது எம் ஆறாம் நூல் உருவாகிக் கொண்டுள்ளது என்பதை உவகையுடன் அறிவிக்கிறோம். இவ் வகை நூல் வரிசை மேலும் தொடரும் என்னும் கருத்தில் மாற்றமேது மின்று என்பதையும் தெரிவிக்க விரும்புகிறோம்.

படித்த இன்றைய தமிழர்கள் பொதுவாகவும், இளைஞர்கள் சிறப்பாகவும் தம் தமிழ்ப் பேச்சு, எழுத்து ஆகியவற்றில் பெரிதும் பிழைபடுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுளெல்லாம் தலையாய தாக யாம் எண்ணுவது இக் காலக் கல்வியில் உள்ள குறைபாடேயாம்.

தமிழாசிரியர் தவிர்த்த பிற ஆசிரியர்கள் தத் தம் பாடப் பொருளறிவை மட்டுமே கருத்துட் கொண்டு பணி புரிகின்றனரே யன்றித் தம் துறைத் தமிழறிவைப் பற்றிச் சிறிதும் கவலைப் படுவதில்லை.

தொடக்கக் கல்வி, பள்ளிக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி ஆகிய எந் நிலையிலும் இன்று படிப்பு, பேச்சு ஆகியவற்றுக்கு இன்றி அமையாத பயிற்சிகள் தரப்படுவதோ தந்து உற்றுழி உதவுவதோ அறவே இல்லை என்று தான் கூற முடிகிறது. மாணவர் வகுப்பில் படிப்பதற்கோ, பேசுவதற்கோ வாய்ப்பே அளிக்கப்படுவ தில்லை. பாடங்களை எழுதச் செய்துத் திருத்திச் செம்மைப் படுத்துதல் முற்றிலும் கைவிடப்பட்டு விட்டது. கட்டுரை வகுப்புகளும் முற்றிலும் கைவிடப்பட்டு விட்டன. பார்த்து எழுதுதல், சொல்வதைக் கேட்டு எழுதுதல், தம் சொந்த சொல் முதலியவற்றால் தாமே எழுதுதல் ஆகியன அறவே நடை பெறுவதில்லை. உரையாடல், நாடகம் போன்றனவும் நடை பெறுவதில்லை. வகுப்புத் தேர்வு, காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகள் ஆகியவை எந்த அளவு முறையாக நடைபெறுகின்றன? நடைபெறும் தேர்வுகளின் விடைத்தாள்கள் மதிப்பிடப் படுகின்றனவே யன்றிப் பிழை திருத்தப் படுவதில்லையே.

இவை தவிர ஆங்கிலம் முதலிய பிற மொழிக் காமம், அவற்றின் தாக்கம், தமிழை நம் விருப்பப்படி எப்படி வேண்டுமானாலும் எழுதலாம் என்னும் மிதப்பான வன்போக்கு, புதுமை எனும் பொல்லாங்கு, மயக்கம் போன்ற பிற பலவும் தங்கு தடையின்றிக் களிநடம் புரிவதால் தமிழ் உரை நடை சீர் பெற வழியே இல்லை.

ஆயினும், பயன் எந்த அளவு விளையும் என்பதைப் பொருட் படுத்தாமல் அறம் உரைப்பதைத் தம் கடமையாகக் கொண்டு தொண்டாற்றிய அறவணரைப் பின்பற்றி யாம் இப் பணியைத் தொடர்ந்து செய்கிறோம். ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்னும் அப்பரடிகளும் எம்மை ஊக்குகிறாராதலால் எம் இப் பணி தொடர்கிறது.

ஞாயிறு பதிப்பகம் எனும் எமது பதிப்பகத்தின் வாயிலாக எம் நூல்களை வெளியிட்டு வந்த யாம், அஃது இப்போது எமக்கு ஒவ்வாத தாயிற்றாதலின் ஏகம் பதிப்பக உரிமையாளரும் எம் இனிய நண்பருமாகிய திரு. இலட்சுமணன் அவர்களின் துணையை நாடினோம். அவரும் இதை உவப்புடன் ஏற்றுச் சிறப்புறச் செய்கிறார். அவருக்கு எம் நன்றி உரியதாகுக. வழக்கப்படி எம் வாழ்க்கைத் துணைவர்க்கும் எம் தனி நன்றி உரியதாகுக.

மா. நன்னன்

சென்னை
25.12.2003

3. சொல்லியல்

உரை நடை எழுதுவோர் தாம் ஆளும் சொற்களின் திறத்தையும் அறிந்தோரா யிருத்தல் இன்றியமையாதது. தக்க இடத்தில், தக்க சொல்லைப் பெய்து எழுதுவதைப் பொருத்தே உரை நடையின் பயன், தரம் போன்றன விளங்கும். தக்க சொல்லைத் தேர்ந்தெடுப்பதற்குச் சொற்களின் இயல் தெரிந்திருக்க வேண்டும். கடலுள் மூழ்கி முத்தெடுப்பது போல் சொல்லுட் குடைந்து சென்று அதன் பொருள் நுட்பமும் சுவை நலமும் காண வல்லாரே அத் தகு சொற்களை ஆள்வதில் மேம்பட்டுத் தோன்ற முடியும். அந் நோக்கில் இங்குச் சில சொற்களின் இயல் நோக்கப்படுகிறது.

3.1 செம்மை

செம்மை என்பது பொதுவாகச் சிவப்பு நிறத்தைக் குறிக்கும். அதிலிருந்து உண்டாகிய சொற்களே சிவன், சிவம், சைவம் ஆகியவை. ''அப்பா செம்மையாக இருக்கிறாரா?'' என்னும் பழைய நலம் கேட்கும் வழக்கில் உள்ள செம்மைக்கு நலம் என்பது பொருள். செம்மையாக (செமத்தியாக) உதைத்தான் என்னுமிடத்தில் கடுமை, வலிமை போன்றன பொருள். செவ்விய தன்மை, சீருடைமை போன்ற பல்வேறு பொருள்களிலும் தாராளமாக ஆளப்படும் ஒரு செவ்விய சொல்லே இச் செம்மை.

3.2. முருக்கு

முருகல் என்பதன் பிறவினையே முருக்கல். முருக்கி அமைக்கப்படும் கயிறு போல், முருக்குக் கம்பியும் வந்து விட்டது. முருக்கு என ஒரு தின்பண்டமும் உள்ளது. அம் முருக்கில் பல

வகை உண்டு. தேந்தலை, மகிடம்பூ, ஓமப்பொடி, கை முருக்கு போன்றன அவற்றுட் சில. கை முருக்கு எனப்படுவது கையால் முருக்கிச் செய்யப்படுவதாதலின் அஃது அப் பெயர் பெற்றது. பிற, அச்சுகளின் உதவியால் பிழிந்து அமைக்கப்படுவனவாகும். முதன் முதலில் கையால் முருக்கி அமைத்ததைப் பிறகு கருவி (அச்சு) ஒன்றின் உதவியால் அமைத்திருப்பராதலின் கை முருக்கை முருக்குகளின் தாய் எனலாமா?

3.3 மதிலும், சுவரும்

இவை யிரண்டும் ஓரினப் பொருளைத் தருவன வாயினும், ஒரே பொருளைத் தருவன அல்ல. இக் காலத்தில் பலர் மதில் என்பதை அறவே மறந்து இவ் விரு வகைப் பொருளையும் சுவர் என்னும் ஒரே சொல்லால் குறிப்பிடுவதைக் காணலாம். சுவர், மதில் என்பன இரண்டும் பிறவற்றைத் தடுத்து நிறுத்தி அகப் பகுதியைக் காப்பன வாயினும் சுவர் கட்டட மொன்றின் அக உறுப்பாக அமைந்து மேற் கூரை முதலியவற்றைத் தாங்கி நிற்கும். மதில் என்பது கட்டடத்தின் புற உறுப்பா யமைந்து தன் மேல் எதையும் தாங்கி நில்லாதது. இதனைச் சுற்று என்றும் சுற்று மதில் என்றும் கூறுவர். மதில், கோட்டை முதலியவற்றுக்கு ஓர் அரணாகவும் அமைந்திருக்கும். கோவில்களுக்கும் மதில் அரண் செய்வதுண்டு. இதனை மதிற்சுவர் என்பது பொருத்தமற்றது.

3.4

அ	ஆ
மறக்காமல்	மறவாமல்
பறக்காமல்	பறவாமல்
கறக்காமல்	கறவாமல்
படிக்காமல்	படியாமல்
ஒடிக்காமல்	ஒடியாமல்
செழிக்காமல்	செழியாமல்

அழிக்காமல்	அழியாமல்
வளைக்காமல்	வளையாமல்

மேற்காட்டப்பட்டுள்ள இரு வகைச் சொற்களைப் போன்றே மேலும் பற் பல இணைகளை நாம் அறிவோம். இவ் வினைச் சொற்கள் பெரும்பாலும் ஒரே பொருளில்தான் ஆளப் பெறுகின்றன. மறக்காமல் என்றும் மறவாமல் என்றும் பொருள் வேறுபாடின்றிப்பலர் ஆள்கின்றனர். தமிழ் நாட்டின் சில பகுதிகளில் ஒன்றையும், வேறு சில பகுதிகளில் பிறிதொன்றையும் ஆள்வதையும் காணலாம். ஆனால் சில தன் வினையும் பிற வினையுமாய் வேறுபட்ட பொருள்களைத் தருதலும் உண்டு. ஆனால் மடியாமல், மடிக்காமல் என்னும் இவை யிரண்டும், 'அவன் செத்து மடியாமல் போய் விடுவானா?', 'துணியை மடிக்காமல் வைத்தான்;' எனத் தன் வினையும் பிற வினையுமாய்ப் பொருள் தருகின்றன. இத் தகைய சொற்கள் தம்முட் பொதிந்து வைத்துள்ள பொருள் நுணுக்கங்களை நாம் குடைந்து நோக்கிக் குறித்துக் கொள்ள வேண்டும்.

3.5 அதாவது

அது என்னும் சுட்டுப் பெயரே ஆவது என்பதோடு சேர்ந்து அது+ஆவது = அதாவது என்றாயிற்று. அவ்வாறே அஃது என்பதோடு ஆவது என்பது சேர்ந்து அஃதாவது என்றாகும். பொருளில் எவ் வேறுபாடுமின்றி இவை நீண்டுள்ளன. நாளாவட்டத்தில் இது பெரு வழக்காகிப் பல்கி விட்டது. கால நீட்சியால் அதாவது என்பதற்கு அது எங்ஙனம் ஏற்பட்டது?, அஃது எவ்வாறு உருவாயிற்று, என்றாங்குப் பொருளிலும் சிறிது நீட்சி ஏற்பட்டுவிட்டது. பண்டைய நாடகம் முதலியவற்றில் ''அதாகப்பட்டது'' என்று உரையாடலில் அடிக்கடி ஆளப் பெற்ற சொல்லும் இத்தகையதே. மற்றும் மரமானது சாய்ந்தது; மனிதனானவன் கெட்டு விட்டான் என்பன போன்ற வழக்கங்களும் ஏற்பட்டு ஆனது, ஆனவன் போன்றவற்றை உருபற்றதாகக் கூறப்பட்ட முதல் வேற்றுமைக்கு உருபுகளாகக் கூறும் வழக்கமும்

ஏற்பட்டுவிட்டது. அவ் வழக்கமும், அப் போக்கும் இன்று மறைந்து விட்டமை மகிழத் தக்கது.

3.6 கற்பு

கற்பு என்பதற்குக் கல்வி என்றும் பொருள் கொள்ளலாம். கல்வி என்னுஞ் சொல் தன்வினை. ஆசிரியர் தந்து மாணவர் பெறுவதன்று கல்வி. மாணவர் தாமே ஆற்றுவதே அது. ஆசிரியர் அதற்கு உதவுவார்; அவ்வளவே. பால் பருகுவது குழந்தை தானே செய்து கொள்ளுந் தொழிலே. தாயனையோர் அதற்கு உதவக் கூடும். அவ்வாறே பெண்மையோடு (பின்னர் ஆண்மை யோடும்) இணைத்துப் பேசப்படும் கற்பு என்பதும் தன் வினையே என்றாகும். ''சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்'' என்னும் குறட் கருத்தும் இங்குக் கருதத் தக்கது.

3.7 பட்டி தொட்டிகள்

சிற்றூரினுஞ் சிறிய ஊர்ப் பகுதிகளைப் பட்டி தொட்டிகள் என் கின்றனர். ஆடுகளை அடைத்து வைக்கும் சிறு இடம் ஆட்டுப் பட்டி எனப்படுகிறது. அது தொட்டி போன்ற அமைப்புடையதாதலின் பட்டி தொட்டி என்று மக்களின் வாழ்விடத்தையும் குறிக்கலாயிற்று. தொட்டிக்கட்டு வீடு என்பதும் இங்கு நோக்கத் தக்கது. பட்டி என்று முடியும் பற்பல ஊர்ப் பெயர்கள் இருப்பதையும் இங்கு நினைத்துப் பார்க்க வேண்டும். விருதுப்பட்டி, கல்லுப்பட்டி போன்றன பலவும் காண்க.

3.8 கொள்ளை

கொள் என்பதனடியாகத் தோன்றியதே கொள்ளை கொள்ளல் என்பதே அதன் பொருள். பிறகு அது கொள்ளப்பட்ட பொருளையும் குறிப்பதாக ஆகிவிட்டது. பின்னர் அது கொள்ளை கொள்ளல் என ஒரே பொருளைக் குறிக்கும் இரு வேறுபட்ட ஒரு சொல்லாகவும் உயர்ந்து விட்டது. முறையாகக் கொள்வதைக் குறிக்க வந்த அச் சொல் முறையற்றுக் கொள்வதையும் குறிக்கும்

சொல்லாகித் திருடல்; திருடப்பட்ட பொருள் ஆகியவற்றையும் குறிப்பதாகி விட்டது.

கொள்கை என்பது குறிக்கோள் (குறி+கோள்) என்பதைத் தழுவலாயிற்று. கைக் கொண்ட ஒழுக்கம், குறிக்கோள் ஆகியவற்றைக் குறிக்க மட்டுமே கொள்கை என்பது ஆளப்பட லாயிற்று. (கை கொள் = கொள்கை) பிறவற்றைக் கொள்ளல் என்னுஞ் சொல்லும், கள்ளப் பொருள்கோளைக் கொள்ளை என்னுஞ் சொல்லுங் குறிக்கலாயின. கொண்டது கொள்கை யானாற் போல் கொள்ளப்படுவது கோட்பாடு என்ன லாயிற்றுப் போலும்.

3.9. கொல்லர்

கொல் என்பத னடியாகப் பிறந்ததே கொலை என்னுஞ் சொல். இரும்பை அடித் தடித்துக் கொல்வதாற் போலும் அத் தொழில் கொல்லுத் தொழில் எனவும், அதனைச் செய்வோர் கொல்லர் எனவும் கூறப்பட்டிருக்கலாம். மரங் கொல் தச்சர் என்னும் வழக்கும் இங்கு நோக்கத் தக்கது.

3.10 களவு

கல் என்பதிலிருந்து கல்வி பிறந்தாற் போல், கள் என்பதிலிருந்து கள்ளம்; கள்ளர்; களவு போன்றன பிறந்தன. முறையாகப் பெறுவதைக் கல்வி கற்பு என்றாற் போல், முறை தவறிக் கொள்வதைக் களவு என்றனர் போலும். அதனாற்றான் அக ஒழுக்கத்தில் பிறர் அறியாததைக் களவு என்றும் வெளிப்படையான முறையானதைக் கற்பு என்றும் நம் முன்னோர் குறித்தனர்.

3.11 பாதி

பகுக்கப்பட்டது பகுதி; பகுக்கப்பட்ட ஒன்றன் கூறும் பகுதி எனப்பட்டது. பகுக்கும் போது கமலாப் பழத்தைச் சமமாகப் பகுப்பது போல், சரிசமமாகப் பகுக்கப் பட்டதைப் பாதி என்றனர். பாத்தூண் என்பதற்குப் பகிர்ந்துண்பது என்னும் பொருள் வழங்கப்படுவதும் காணத்தக்கது. ஆகவே பகுதி என்பதற்கு ஒரு

கூறு எனவும் பாதி என்பதற்குச் சமக்கூறு எனவும் பொருள் கொள்ளலாம். எனவே இவை இரண்டும் இரு வேறு சொற்களாகவே கொள்ளத் தக்கன.

3.12 சோப்ளாங்கி (சோம்பல்)

இது கடலூர் மாவட்டத்தில் ஆட்சியில் உள்ள ஒரு வழக்குச் சொல்லாகும். அது சப்பை; திறமை யற்றவன்; கையாலாகாதவன் எனப் பொருள்படுகிறது. சோணகிரி என்னும் வேறொரு சொல்லும் இப் பொருள்பட வழங்கப்படுகிறது. இவை சோம்பேறி என்னும் பொருளையும் சில வேளைகளில் தருவதுண்டு. சென்னையில் ஆளப்படும் சோமாறி என்பது முற்றிலும் சோம்பேறி என்னும் பொருள் தருவதே.

3.13 காட்டு வெள்ளம்

வெள்ளம் என்பது ஒரு பேரெண்ணுக்குப் பெயராகவும் வழங்கிப் பிறகு அது, மிகுதி என்னும் பொருளில் வழங்கப்பட்டது. போதுமா என்பதற்கு வெள்ளம் என்று விடையளிக்கப்படுதல் காண்க. தேவைக்கும் மேல் கிடைத்து விட்டது என்பதே அங்குக் கருத்து. நீரின் மிகையையும் வெள்ளம் என்கிறோம். மலையாளத்தில் மிகையற்ற நீரையே வெள்ளம் என்கின்றனர். காட்டு வெள்ளத்திற்கும் நாட்டு வெள்ளத்திற்கும் வேறுபாடுண்டு. முறையற்ற வாழ்வு காட்டு வாழ்வு எனவும்; முறையற்ற போக்கு காட்டுப் போக்கு எனவும் கூறப்பட்டாற் போல், முறையற்ற வெள்ளமே காட்டு வெள்ளம் எனப்பட்டது. நாட்டு வெள்ளம் சமமான நிலப்பகுதியிற் செல்வதால் அமைதியாகச் செல்லும்; காட்டு வெள்ளம் சமமற்ற வெளியில் பாய்ந்து செல்வதால் அது அமைதியாகவும் ஒழுங்காகவும் செல்ல முடியாதே.

3.14 எழுந்திரு

எழு என்பதிலிருந்து எழுந்திரு என்னுஞ் சொல் எழுந்திருக்கிறது. அதனை எழுந்து இரு (உட்கார்) எனப் பொருள் கொள்ளக் கூடாது; எழு என்பது தான் பொருள் என்று பலரும் கூறுவதுண்டு.

ஆனால் அதனை ஊடுறுவி நோக்கினால் ஈற்றிலுள்ள இரு என்பது ஆட்டுத் தாடி போல் வீணே அமைந்த தன்று என்பது விளங்கும்.

இங்கேயே உட்கார்ந்திரு என்றால் ''எங்கும் சென்றுவிடாதே; இங்கேயே இரு'' என்பது பொருளானாற்போல், எழுந்திரு என்பதற்கு ''எழுந்து ஓடிவிடாதே; இங்கேயே இரு'' என்று பொருள் கொள்ள முடியாதா? ஆகவே இரு என்பதை அசையாக அசைத்துத் தள்ளாமல் இசைவானதாக ஆக்கிக் கொள்வோமா? பிற்காலத்தில் இது கூர் மழுங்கிச் சிறப்பற்று ஊளைச் சதை போல் உட்கார்ந்து விட்டது போலும்.

3.15 எழுந்திடு

இதில் உள்ள இடு, நடந்திடு, நின்றிடு, கூறிடு என்பன போன்றவற்றுள் இடம் பெற்றுள்ள இடு என்னும் துணைவினை போலவும், செய்து விடு, கொடுத்து விடு, மறந்து விடு என்பன போன்ற இடங்களில் வரும் சிறப்புப் பொருளன போல உறுதி தழுவிய சிறப்புப் பொருள் தருவதாகவும் கொள்ள முடியுமா என்று காண்போமா?

3.16 வாழைப் பயம்

வாழைப்பழம் என்பதைப் பண்படா நாவினர் சிலர் வாழைப் பயம் என்கிறார்களே அஃதன்று இது; வாழையின் பயன் என்னும் பொருளது. வாழையால் நாம் பெறும் பயன்தானே வாழைப்பழம். நிலன், நிலம் எனப்பட்டாற் போல் 'பயன்' பயம் ஆயிற்று. வாழைப்பயன் என்பதே வாழைப் பயமாயிற்று. ஆகவே பயன், பயம், பழம், பலம், பலன் என்பன போன்ற சொற்களைக் கூர்ந்து நோக்கிச் சுவைப் பயம் கொள்ளலாமே. இதைத் தவறுவோர், தாம் தப்பிக்கப் பயன்படுத்தினால் அது தமிழைப் பயப்படுத்திப் (அச்சப்படுத்தி) பாழ்படுத்தி விடும்.

3.17 கிடந்த திருக் கோலம்

திருமாலுக்கு நின்ற திருக் கோலம், இருந்த திருக் கோலம், கிடந்த திருக் கோலம் என மூன்று திருக் கோலங்க ளுண்டென்பர். திருமால் நிற்பது போல் அமைந்துள்ள சிலை முதலியவற்றை நின்ற திருக்கோல மென்றும், உட்கார்ந்திருப்பது போலவும் படுத்திருப்பது போலவும் வடிக்கப்பட்டவற்றை முறையே இருந்த திருக் கோலம், கிடந்த திருக் கோலம் எனவும் கூறுவர். கிடந்த எனில் படுத்துக் கிடந்த என்பது பொருள். படுத்துக் கிடந்த என்பது நடு மய்யம் என்பது போன்றது. படுத்தல் எனினும் கிடத்தல் எனினும் ஒரு பொருளே. கிடத்தலைக் கிடை என்பர். ஆட்டுக் கிடை, மாட்டுக் கிடை என்பன இத் தகையனவே. குழந்தையைக் கிடத்து என்று அது வழங்கப்படுதலும் உண்டு.

3.18 கடைசி

இறுதி அல்லது ஈறு என்பதை இன்று கடைசி என்கிறோம். கட என்பதிலிருந்து கடை வந்திருக்கலாம். கடத்தல் என்பது போன்றதே கடைசி. சி விகுதி யாகும். விற்பனைக் களங்கள் ஊரின் புறத்தே கடைசியில் அமைக்கப் பட்டிருந்தன வாதலால் அவற்றுக்குக் கடை என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம். ''கடை விரித்தோம் கொள்வாரில்லை'' என்னும் வள்ளலார் வழக்குக் காண்க. வீட்டின் முன் பகுதி தலைக் கடை எனப்பட்டது. அதன் புறப்பகுதி புறக் கடை எனப்பட்டுப் பின் அது மருவிப் புழக்கடை என்றாயிற்று. கடையைக் கட்டி விட்டான் என்னும் வழக்கும் இவற்றோடு இணைத்துப் பார்க்கத் தக்கதே.

3.19 புலவாளி

புலவாளி என்னுஞ் சொல் அறிவாளி என்னும் பொருளில் ஆளப்படுகிறது. அறிவை ஆள்பவர் (பயன்படுத்துபவர்) அறிவாளி எனப்பட்டாற் போல், புலமையை ஆள்பவர் புலவாளி எனப்பட்டார். இது சில நேர்வுகளில் குறிப்புப் பொருளில் எதிர்மறையாகவும் பயன்படுத்தப் படுவதுண்டு. ''அவன் பெரிய

புலவாளி; அதனால் அவனிடம் கேட்டாயா?'' என இகழ்ச்சிப் பொருளில் குறிப்பிடப்படும் இடங்களில் அச் சொல்லுக்கு முட்டாள் என்னும் பொருளே கொள்ளப்படும்.

3.20 கூடு

கூ என்பது கூடுதல் எனப் பொருள் பட்டுக் கூடச் செய்வதைக் (கூட அழைப்பதை) கூவல், கூவு என்றனர். கூடும் இடம் கூடு எனப்பட்டு அது கூண்டு என்றும் கூடம், கூட்டு, கூடை, கூடல் என்றாற் போலவும் கூடிக் கொண்டே போகும் அழகைச் சுவைப் போமே.

3.21 துண்டும் துணுக்கும்

துண்டு, துணுக்கு ஆகிய இவ் விரண்டும் ஒரு பொருளன போல் தோன்றினாலும் சற்று நின்று பார்ப்போர்க்கு, அவற்றுக் கிடையே உள்ள நுண்ணிய வேறுபாடு (மாறுபாடன்று) புலப்படாமற் போகாது. கரும்புப் பயிரிடுவோர் முழு நீளக் கரும்பைப் புள்களாகத் துண்டாடுவர். அவ்வாறு அதனைத் துண்டாடும் போது சிதறி விழும் துணுக்குகள் கணு இல்லாமையால் அவற்றை நடவுக்குப் பயன்படுத்த முடியாது. அத்தகைய வற்றைத் துணுக்கு என்பர். துண்டு சற்று நீண்ட தென்றும், துணுக்கு மிகச் சிறிய தென்றும் கூறுவோமே.

3.22 மக்குளித்தல்

இஃது உடலியல் தொடர்பான அரிய தொழில் நுட்பத்தை உணர்த்தும் ஒரு விழுமிய சொல்லாகும். இத் தகைய தொழில் நுட்பச் சொற்கள் பலவற்றைத் தொலைத்து விட்டு, வேற்று மொழிச் சொற்களை வெட்கமின்றி ஆண்டு கொண்டிருக்கும் இழிந்த இனமே தமிழினம்.

கடலூர் மாவட்டத்தில் ஆளப்படுவது இச் சொல். பிற இடங்களிலும் ஆட்சியிலிருக்கக் கூடும். நடக்கும் போதோ,

தாண்டும் போதோ, நிற்கும் போதேயும்கூடவோ ஒருவர் தமது முழங்காலை மடக்க முனையாத போதும், தானேயும், தவறுதலாகவும் முழங்கால் மடங்கிக் கீழே விழ நேரும் போது, ''கால் மக்குளித்து விழுந்து விட்டான்'' என்பர்.

3.23 கோலம்

கோலுதல் என்பதிலிருந்து இச் சொல் உருவாகியிருக்கக் கூடும். பாத்தி அமைத்தலைப் பாத்தி கோலுதல் எனல் காண்க. பாத்தி அமைப்பதைப் போன்றே வீட்டு மனை அமைப்பதையும் மனை கோலுதல் என்பர். அவை போன்றே புள்ளிகளுக் கேற்பக் கோட்டினை வளைத்து அமைப்பதே கோலம் எனப்பட்டது. புள்ளி கோடாகிப் பிறகு அக் கோடு கூடிச் (கூடலிழைத்தல்) சுழியாகும். இவை மொழியின் வரிவடிவத்துக்கும், ஓவியம் முதலியவற்றுக்கும் அடிப்படைகளாகும். அவ்வாறு புள்ளி வைத்து வளைத்தும், சுழித்தும் இடப்பட்ட கோடு அழகாக இருந்ததால், புனையப்படும் அழகும் கோலம் எனப்பட்டு, முறையற்ற கோலம் அலங்கோலம் (அல்+அம்+கோலம்) எனப்பட்டது.

3.24 கலங்கலும், கலக்கலும்

தெளிவடையாத நீரைக் கலங்கல் நீர் என்பர். கலங்கல் நீரில் மண்ணும் பிறவும் கலந்து இருப்பதால் அது கலங்கல் எனப்பட்டது. கலத்தல் முறையற்றதாய்க் கருதப்படும் போது அது கலங்கல் எனப்படுகிறது. முறையானதைக் கலப்பு என்றனர். தானே ஏற்படுவதைக் கலங்கல் என்றும், பிறரால் ஏற்படுத்தப்படுவதைக் கலக்கல் என்றும் கூறினர். புறக் கலங்கலும், கலக்கலும் போன்று அகத்திலும் இக் கலங்கலும், கலக்கலும் ஏற்படுவதுண்டு. உள்ளக் கலக்கலைக் கலக்கம் என்றனர். 'கலங்கினான் இலங்கை வேந்தன்' எனல் காண்க. இதிலும் தன் வினையும், பிறவினையும் இருத்தல் காணலாம். மனம் கலங்கினான், மனத்தைக் கலக்கினான் என்பவை நாம் அறிந்தவையே.

3.25 கையாளலும், கையாடலும்

ஆளல், ஆடல் என்னும் இரண்டும் கை என்னும் சொல்லோடு சேர்ந்து முறையே கை + ஆளல் = கையாளல் என்றும், கை+ஆடல் = கையாடல் என்றும் வளர்ந்து முரண்பட்ட பொருள் விளைக்கும் நேர்த்தி உணர்ந் தின்புறத்தக்கது. ஆளல் என்பதற்கும் ஆடல் என்பதற்கும் உள்ள ள,ட எழுத்து வேறுபாடும் இயல்பானதே. முள் + செடி = முட்செடி என மாறும். தொடர்புடைய எழுத்து வேறுபட்டதோடன்றி மாறுபட்ட பொருளையும் விளைக்கும் நேர்த்தி சுவைக்கத் தக்கதே. கையாளல் பயன்படுத்தல் என்பதையும், கையாடல் முறையற்ற பயன்படுத்தல் என்பதையும் பொருள்களாகத் தரல் அறிக.

3.26 23, 33

ஒருவர் மேலுள்ள இரு எண்களைத் தனித் தனியே படித்தால் அவ் வெண்களைப் பார்க்கும் நிலையில்லா ஒருவர் படிப்பவரின் ஒலியை மட்டும் கேட்டால் அது எப்படியிருக்கும்? இரண்டு மூன்று; மூன்று மூன்று என்று தானே அவர் செவியில் அவை விழும்? இரண்டு மூன்று என்னும் ஒலியைக் கேட்பவர் 23, 33 என்னும் இரு அடுக்குகளில் எதைக் கொள்வார்? இரண்டு மூன்று என்பதற்கு 23, 33 ஆகிய இரண்டும்தானே பொருளாகத் தோன்றும்? ஆகவே அவற்றை முறையே இரண்டு மூன்று; இருமூன்று என்றும்; 333 என்பதை மும் மூன்று என்றும் கூறலாமன்றோ?

3.27 தோப்புக்கரணம்

வலக் கையால் இடக் காதின் கீழ்ப் பகுதியையும், இடக் கையால் வலக் காதின் கீழ்ப் பகுதியையும் தொட்டுக் கொண்டோ பிடித்துக் கொண்டோ, முழங்கால்களை மடக்கி உட்கார்ந்து உட்கார்ந்து எழுந்து எழுந்து தண்டனையை நிறைவேற்றும் மாணாக்கரைப் பண்டு கண்ட துண்டு யாம். சில இடங்களில் முழங்காலை மாற்றி மாற்றித் தரையில் படச் செய்வதும் உண்டு.

இம் முறைக்கும் காதுப் பிடி மாறாது. சிலர் வலக் கையால் வலக் காதையும், இடக் கையால் இடக் காதையும் பிடித்துக் கொள்வதும் உண்டு. பள்ளியில் மட்டுமேயன்றிப் பிள்ளையார் கோவிலிலும் இப்படிச் செய்வர். இதற்குத் தோப்புக் கரணம் என்பது பெயர். தோற்புக் கரணம், தோப்புக் கரணம் என்றாகியிருக்கலாமோ?

3.28 சிறுக்கியும், செருக்கியும்

சிறுக்கி, செருக்கி என்னும் இவ் விரு சொற்களும் வசவுச் சொற்களே; இவை பெண்பாலுக்கு மட்டுமே பயன்படுத்தப் படுகின்றன. இவ் விருவரும் ஒருவர் போலவே தோன்றுகின்றன ராயினும் உற்றுப் பார்த்தால், அவர் தமக்கிடையே உள்ள வேறுபாடு தோன்றும். சிறுமை உடையவள் சிறுக்கியானாள்; செருக் குடையவள் செருக்கியானாள். செருக்கி என்பதை வழூஉச் சொல் எனக் கருதி அதன் திருந்திய வடிவம் சிறுக்கி என்பாரும் உளர். சிறுமைக்கு வல்லினமும், பெருமைக்கு இடையினமும் அமைந்திருக்கும் முரணழகும் இங்கு தென்படுகிறது. தமிழிலுள்ள வசைச் சொற்களையெல்லாம் தொகுத்து ஆய்ந்தால் தமிழரின் பண்பாடு, குறிக்கோள் போன்றன நன்குத் துலங்கும். முனைவர் பட்ட ஆய்வுக்கும் மேலான தகுதி உடையதாக அவ் வாய்வு அமையும்.

3.29 நறூசு

இதுவும் கடலூர் மாவட்டப் பகுதியில் வழக்கில் உள்ள சொல்லே. அஃது இந் நூலாசிரியர் பிறந்து வளர்ந்த மாவட்ட மாதலின், அம் மாவட்ட வழக்காற்றுச் சொற்கள் இங்கு மிகுதியாக எடுத்துக் காட்டப் படுகின்றன. இச் சொல்லுக்குச் சுத்தம், தூய்மை என்பன மட்டுமே யன்றி எஞ்சாமை என்னும் சிறப்புப் பொருளும் உண்டு. வீடு நறூசா இருக்கிறது என்றால், முற்றிலும் தூயதாய் அஃதுள்ளது என்பது பொருளாம். ''நறூசா சாப்பிடு'' என்றால், இலை அல்லது தட்டில் மிச்சம் வைக்காமல் சாப்பிடு என்பது பொருளாம்.

3.30 கூடைப் பந்து

இக் காலத்தில் சற்று உயரத்தில் வட்ட வடிவிற் குட்டை வலை யொன்றைக் கட்டி, அதன் அக வழியாக விழச் செய்யும் பந்தினைக் கூடைப் பந்து என்று கூறுகின்றனர். ஒரு காலத்தில் அங்கு ஒரு கூடையை வைத்து அதனுள் பந்தை அகப்படுத்தி எறியும் பந்தைக் கூடையினுள் விழும் பந்து எனும் பொருளில் அவ்வாறு குறிப்பிட்டிருப்பர். மேலே கூடையில் விழுந்த பந்தை அடுத்த ஆட்டத்துக்காக எடுப்பது போன்ற தொல்லைகளைத் தவிர்க்கப் பிறகு அடியற்ற கூடையை அமைத்திருப்பர். அடியற்ற கூடையைவிட அவ் வடிவிலுள்ள கயிற்று வலை நாட்பட உழைக்குமாதலின் இக் காலத்தது வந்திருக்கும்.

3.31 அச்சாணி

சங்க காலத்தில் வண்டிகளின் அச்சும் மரத்தாலாக்கப் பட்டிருக்கும். இன்றைய கோவில் தேர்களுக்கு மர அச்சே அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அம் மர அச்சு ஒடிய நேர்ந்தால் இக் கால இரும் பச்சைக் கடை திரட்டிப் புதுக்கி மீண்டும் அமைத்துக் கொள்வது போல,' அதனை மீண்டும் பயன்படுத்த முடியாது. ஆதலால் வண்டிகளில் மற்றொரு அச்சையும் கொண்டு செல்லும் வழக்க மிருந்தது. அது சேம அச்சு எனப்பட்டது. அது இக்காலச் சீருந்து முதலியவற்றுடன் கொண்டு செல்லப்படும் (கூடுதல்) சக்கரம் போன்றது. பிறகு அச்சு இரும்பினால் செய்யப்பட்ட பொழுது அது அச்சாணி எனப்பட்டது. ஆணியாலமைந்த அச்சு அல்லது அச்சாகிய ஆணி என அதனை விளக்கலாம். உருளை (சக்கரம்) கழலாமலிருக்க அச்சின் கடையில் உருளையின் புறத்தே செருகப்படும் ஆணி கடையாணி எனப்பட்டது.

3.32 முட்டுக் கட்டை

இது முட்டு என்றும் கூறப்படுகிறது. முட்டித் தள்ளவோ, முட்டித் தடுக்கவோ, முட்டித் தாங்கவோ பயன்படுவனவாவும்

முட்டு, முட்டு மரம், முட்டுக் கட்டை என்னும் பெயர்களால் சுட்டப்படுகின்றன. சாயும் சுவர், மேலும் சாயாமல் தடுத்துத் தாங்க இடப் படுவது ஒரு வகை முட்டு; காரைத்தள மமைக்கும் போது தகடு முதலியவற்றைக் காரை உறுதிப் படும் வரையில் தாங்கப் பயன் படுவதும் முட்டே. பிறர் முயற்சிகளுக்குத் தடை விளைத்துத் தடுக்கப் பயன்படும் முயற்சிகளும் முட்டுக் கட்டை எனப்படுவது உண்டு. தேருக்குத் தரப்படுவதும் முட்டுதான். தேரை மேற் செல்லாமல் தடுத்து நிறுத்தவும், தக்கபடி திசை மாற்றவும் பயன்படுவதே தேர் முட்டு. இன்றைய எழுத்தாளர்களைத் தடுத்து நிறுத்திச் செம்மைப்படுத்த முடியாதவாறு போலத் தேர் இழுக்கும் பல நூறு மாந்தரும் யார் சொல்வதையும் செவிமடுத்து அதற்கேற்பச் செயற்பட மாட்டாராதலால், தேரின் ஓட்டத்தை தக்க நெறிப் படுத்தப் பயன்படுவதும் ஒருவகை முட்டுக் கட்டையே.

3.33 உருமம்

எம் வட்டாரத்தில் வழங்கும் மற்றொரு வழக்குச் சொல்லே உருமம். இது நண்பகலைக் குறிப்பிடும் நற்சொல்லாகும்.

உரும வேளை
உருமச் சாப்பாடு
உருமத்துக்குக் குளிக்கலாம்
உருமத்துக்கு வரச் சொன்னார்

என்றாற் போல் அது ஆளப்படுகிறது. அச்சப் பொருளைத் தரும் உரும் எனும் உரிச் சொல்லுக்கும் இதற்கும் ஏதேனும் தொடர்பு இருக்கக் கூடுமோ? பேம், நாம், உரும் இவை மூன்றும் அச்சப் பொருளன என்பார் தொல்காப்பியர். பேம் என்பது அச்சந்தரும் பேய் எனக் குறிப்பிடப்பட்டது போல், உரும் என்பது நண்பகல் எனும் காலத்தைக் குறிக்க வல்லதாயிற்றோ?

3.34 நோட்டம்

பார்வைக்கும், நோக்கத்துக்கும் உள்ள வேறுபாட்டைப் போன்றே நாட்டத்துக்கும், நோட்டத்துக்கு மிடையே நுண்ணிய

வேறுபாடுள்ளது. நாட்டம் கண் பார்வை, நாடிப் பார்க்கும் விருப்பப் பார்வை எனப் பொருள்படும். நோட்டம் என்பது உளவு பார்த்தல், வேவு பார்த்தல், மதிப்பிடுதல் போன்ற பொருள்களைத் தரவல்லதாயிருக்கிறது. தமிழரால் மூலையில் ஒதுக்கித் தள்ளப் பட்டுக் கிடக்கும் மற்றொரு மணிச் சொல்லே நோட்டம்.

3.35 ஒழுங்கும், ஒழுக்கமும்

ஒழுங்கு, ஒழுக்கம் ஆகிய இவை இரண்டும் ஒன்றோ டொன்று தொடர்புடைய இரு வேறு பொருளனவாகும். ஒழுங்கு என்பதற்கு நேர்மை, வரையறை, விதி என்பன போன்ற பொருள் நிலவுகிறது. அவற்றிற் கேற்ப நடப்பதே ஒழுக்கம் எனப்பட லாயிற்று. மழைத் தாரையின் நீர் ஒழுங்கும் இங்கு நினைவுக்கு வரும். நீர்க் கசிவின் மிகையும் ஒழுக்கு எனப்படுகிறது; வீடு ஒழுகுகிறது என்பதை நோக்குக. வீட்டு ஒழுக்குக்கும், வீட்டில் வாழ்வோரின் ஒழுக்கத்திற்கும் உள்ள ஒற்றுமையையும் வேற்றுமையையும் கூர்ந்து நோக்கி அறியலாம்.

3.36 சேறும், உளையும்

சகதி என்று சில பகுதியினரால் குறிப்பிடப்படும் சேறும், உளையும் வேறுபாடுடைய ஒரு பொருள் இரு சொற்களாகும். செம்புலப் பெயல் நீரால் ஏற்படும் நீர் கலந்து தளர்ந்துள்ள மண்ணே சேறு எனப்படுகிறது. சுவர் அமைப்பதற்கும், பயிர் நடுவதற்கும் பயன்படும் போது அது சேறு எனப்படலாம். நடந்தும், வண்டி யோட்டியும் செல்வோர்க்கு முறையே, நடப்பதற்கும் வண்டியின் சக்கரம் உருள்வதற்கும் ஊறு செய்யும் இறுகிய சேறே உளை எனப்பட்டது. உளை என்பதற்கு வருத்தம் என்பதும் பொருள்.

3.37 தலை முழுகுதல்

விரும்பாதவற்றையும், வெறுப்பனவற்றையும் விட்டுத் தொலைப்பதைத் தலை முழுகுதல் என்பர். ஆனால் அது அப் பொருளுக்காக ஏற்பட்ட தன்று. தலையைத் தண்ணீருக்குள்

மூழ்கச் செய்து குளிரச் செய்வதோடு, தூய்மையும் செய்து கொண்டு குளிப்பதைத் தலை முழுகுதல் என்று கூறினர். ஆறு, ஏரி, குளம் போன்ற நீர் நிலைகளில் இறங்கி, நீந்தி, மூழ்கி, குளித்து, களித்து. நலம் பெறும் வாழ்வு அருகிப் போய்விட்ட இக் காலத்தார் தலை முழுகல் என்பதைத் தலைக்கு ஊற்றிக் கொள்ளல் என்றும், தலைக் குளித்தல் என்றுமே கூறுகின்றனர். நீரில் மூழ்கியும், நீரில் உடலை குளிரச் செய்தும், நீராடியும் திளைக்க முடியாமையால் நீரால் உடலை நனைத்துக் கழுவிக் கொள்வ தோடு அவ்வப்போது தலையிலும் சிறிது நீரை ஊற்றிக் கொள்கின்றனர் என்பதை நாம் அறியோமா?

3.38 கவைக் குதவாது

வாதத்துக்கு உதவாது, ஆய்வுக்கு நில்லாது; தருக்க நியாயத்துக் குட்படாது என்பன போன்றவற்றைக் குறிப்பிட நேரும் போது அது கவைக் குதவாது என்கின்றனர். கவை என்பது நுனி கிளைத்து நேர் செல்லும் ஒருவகைக் கோலே. கவைக்கோல், கவைக்கழி எனவும் கூறப்படும். அதனால் முட்செடி, முட்கிளை, போன்றவற்றைத் தூக்கலாம். அப்பணிக்கு உதவாத கோலைச் சுட்டி இது கவைக்கு உதவாது என்னும் வழக்கம் இங்கும் படர்ந்து வந்துவிட்ட தென்றே தோன்றுகிறது.

3.39 உற்றாரும், உறவினரும், சுற்றத்தாரும்

இம் மூவகையினரும் நம் மோடு கூடி வாழும் முத் திறத்தாரே யாவர். நம்மோடு உற்றவர்கள் அஃதாவது வந்துற்றவர்கள் அஃதாவது நம் மோடு பிறந்தவர்களே உற்றார் எனப்படுவர். அவர்களைப் பங்காளிகள் என்று குறிப்பிடும் வழக்கமும் வந்து விட்டது. உறவினர் என்போர் உறவினால் நம்மை அடைந் தவர்கள். அஃதாவது மணவினையால் நம்மோடு கூடியோர் இவர்கள். சுற்றத்தார் இவ் விருவகைகளினாலு மன்றிப் பிற வகைகளால் நம்மைச் சூழ்ந்து வாழ்வோர் அனைவருமாவர்.

நண்பர்களை எப் பிரிவில் அடக்கலாம்? இம் மூன்று மற்ற தனிப் பிரிவு வேண்டுமோ? எண்ணிப் பார்ப்போமே...

3.40 ஈவும் இரக்கமும்

இரக்கம் என்னும் சொல்லோடு சேர்த்தே ஆளப்படும் ஈ.வு என்னும் சொல், தன்னோடு சேர்த்து ஆளப்படும் சொல்லால் பெறும் பொருளை மட்டுமே இன்று சுட்டுகிறது. ஆனால் அதற்கென்று வேறு பொருள் இல்லையா? வருகை வரவு என்றும், செல்கை செலவு என்றும் கூறுமாறு போல், ஈகை ஈ.வு என்று கூறப்படும் வழக்கம் ஏற்பட்டிருக்க முடியாதா?

3.41 கடமையும், கடைமையும்

கடன் என்பதிலிருந்து பிறந்த சொல்லே கடமை. ''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்னும் அப்பரடிகளின் கூற்றை நோக்குக. வாங்கிய பணத்தைத் திருப்பித் தரத் தவறக் கூடாது என்று மக்கள் நம்பியிருந்த காலத்துப் பொருள் இங்கு கொள்ளத் தக்கது.

கடை, கடைசி என்பதனடியாகப் பிறப்பதே கடைமை என்பது. கடையேன் என்பது போன்றதிது. கீழோன் என்பதும் அதன் பொருளாம்.

3.42 பழமையும், பழைமையும்

இவையிரண்டும் ஒரு பொருள் தருவன வாகவே ஆளப்படினும், பழமை என்பதே சரியான ஆட்சி. பழைமை என்பதைத் தவறு என்று கூறிவிட முடியுமா? பழைய சோறு என்பதைப் பழய சோறு எனல் நன்றா? பழம் என்பதனடியாகப் பிறந்ததை பழமை என்றும், பழைய என்பதனடியாகப் பிறந்ததைப் பழைமை என்றும் வகுத்துக் கொள்ள முடியுமா என்று கருதுவோமே. முதிர்ந்து கனிந்த பழம் போன்றதைப் பழமை என்பதாலும், காலப்பழமை குறித்ததைப் பழைமை என்பதாலும் சுட்டும் முறை ஏற்படுவது நன்றன்றோ?

3.43 கொடிக்கால்

கொடிக்கால் பயிர்; வெற்றிலைக் கொடிக்கால் என்பன காண்க. அவரை, புடலை, பீர்க்கு, முல்லை, கொடி முந்திரி போன்ற வற்றைப் பந்தல் அமைத்துப் பயிரிடும் வழக்கம் நாம் யாவரும் அறிந்ததே. இக் கொடிகள் போன்ற தொரு கொடியே வெற்றிலையும். ஆனால் கொழு கொம்பாகக் கால் நட்டோ, அகத்தி முதலியவற்றை வளர்த்தோ பயிரிடுவரேயன்றி, அவரை முதலியவற்றைப் போல் இதனைப் பந்தலமைத்துப் பயிரிடும் வழக்கம் காணப்பட வில்லை. கொடிக்குப் பந்தலமைக்காமல் கால் அமைத்துப் பயிரிடுவதால் கொடிக்கால் என அது பெயர் பெற்றது. அந் நிலத்தையே கொடிக்கால் என்பதும் உண்டு. அதனைப் பயிரிடுவோர் கொடிக்கால் வேளாளர் எனப்பட்டனர்.

3.44 தொகை

வேற்றுமை உருபு மறைந்து வருவது, வேற்றுமைத் தொகை என்று கூறும் வழக்கம் வந்து விட்டது. மரத்தை வெட்டு என்பதில் உள்ள ஐ என்னும் வேற்றுமை உருபும் அது சார்ந்து வரும் அத்து என்பதும் இல்லாமல் மறைய மரம் வெட்டு என்று வருவதை வேற்றுமைத் தொகை என்கிறோம் என்பது அவர்தம் கருத்து. தொகை என்பதற்கு மறைதல் என்பது பொருளன்று. தொகை என்றால் தொகுதல், கூடுதல் என்பதே பொருள். வேற்றுமை உருபு முதலியன இல்லாமல் சேர்ந்து, அவ்வாறு சேர்வதால் ஏற்படும் கூட்டுச் சிறப்பால் அவ் வேற்றுமைப் பொருள் ஏற்படுவதையே வேற்றுமைத் தொகை என்கிறோம் என்பதே சரி. வேற்றுமை உருபு முதலியன அவ்வப் பொருள்களைத் தரமாட்டா. அங்கு அப் பொருள் உண்டு என்பதைக் காட்டும் குறிகளே அவை. ? என்னும் வினாக் குறியா வினாப் பொருளைத் தருகிறது? அங்கு வினாப் பொருள் இருக்கிறது என்பதைக் காட்டும் குறியே அது. சாலைகளில் உள்ள குறிகள் போன்றனவே அவை. ஆகவே அவ் வறி குறிகள் இல்லாமலேயே அச் சொற்களின் தொகை ஆற்றலால் (கூட்டுச் சேர்க்கையால்) அப் பொருள்கள் ஏற்படு

கின்றன வாதலால், அவற்றில் உருபு மறைந்து தொங்கிக் கொண்டி ருக்கிறது என்றவாறு பொருள் கொள்வது ஏற்புடையதா?

3.45 பேனாக் கத்தி

இது பேனாவும் கத்தியும் எனப் பொருள் தரும். பென் என்னும் ஆங்கிலச் சொல்லைப் பேனா என மொழி பெயர்த்து இத் தொடர் மொழி உருவாக்கப்பட்டுள்ளது. ஓலைகளில் எழுத இன்றைய பேனா பயன்படாது. அன்றைய பேனா ஆணியே; அஃதாவது எழுத்தாணியே. கருவி ஒன்றிலேயே நறுக்கவும், சீவவும் பயன்படும் கத்தியும், ஓலையில் எழுதப் பயன்படும் ஆணியும் அமைந்து எது வேண்டுமோ அதை விரித்துப் பயன்படுத்தத் தோதாக அமைந்த அக் கருவியே பேனாக்கத்தி.

3.46 முர. 4.8.03 ப:3

ஒவ்வொருவரும் தம்மையும் தம் எல்லா உரிமைகளையும் சமுதாயத்திற்குக் கையாளுதல் என்பதே...

பெண்ணியம், பங்களித்தல் என்பனபோல் புதிதாகப் படைத்துக் கொள்ளப்பட்ட ஒரு சொல்லே கையளித்தல் என்பதும். இத் தகு சொற்கள் தேவையற்றவை. மருட்கை விளைப்பது தவிர வேறு பயனற்றவை. பெண்மை என்பது போதாதா? பெண்ணியம் வேண்டுமா? பங்கு பெறல் போதாதா? பங்களித்தல் ஏன் வேண்டும்? அவ்வாறே கொடுத்தல், துறத்தல் என்பன போல் பல தக்கவை உள்ள போதும் இப் பங்களித்தல் ஏன் வந்தது?

3.47 அண்டையும் அயலும்

இவையும் நுண்ணிய வேறுபாடமைந்த ஒரு பொருட் சொற்களே. அண்டி யிருப்பது அண்டை; அயலில் அமைந்திருப்பது அயல். அயல் என்பதினும் அண்டைக்கு இடைவெளி குறைவு. அண்டை வீடு என்பதற்கும், அயல் ஊர் என்பதற்கும் உள்ள வேறுபாடு கருதத்தக்கது. அண்டை வீட்டுக்கும் நம் வீட்டுக்கும் தாய்ச் சுவர் ஒன்றாகக்கூட இருக்கலாம். வேறுபாடு அறிய முடியாதபடி சேர்ந்துள்ள ஊரை

அயலூர் என்றாலும் குறைகாண இயலாது. அது ஒரு போலி. அவ்வாறு நெருங்கியுள்ள வீட்டை அயலகம் என்பதும் வழு அமைதியே போலும்.

3.48 நிகழ்ச்சி, செய்தி, தகவல்

இவை மூன்றும் ஒரு பொருளன போல் ஆளப்படினும் இவை வேறுபட்ட பொருளுடையனவே. நிகழ்வதும், நிகழச் செய்வதும் நிகழ்ச்சி. கூட்ட நிகழச்சி போல்வன இத்தகையன. அது பற்றி ஒருவர் மற்றவர்க்குப் பொதுவாக அறிவிப்பது செய்தி. ஆள், முடங்கல், தாள், வானொலி, தொலைக் காட்சி போன்ற வற்றால் பரப்பப்படுவனயாவும் செய்திகளே. அறிவிப்பு, அறிக்கை போன்ற வேறு சிலவும் உண்டு. அவை தவிரக் குறிப்பிட்ட ஒருவருக்கோ, **ஓர் அமைப்புக்கோ** தருவது தகவல் (தகவறிந்து தருவது). **அண்ணா ஏதா**வது செய்தி சொன்னாரா என்பது வழுவே. அங்குத் **தகவல் என்**பதே தக்க சொல்.

3.49 பழவடை

பழவடைக்காய், பழவடக்காய் என்னும் வழக்கம் காண்க. பழம் + அடை + காய் = பழவடைக்காய்; பழமாம் தன்மை அடையும் காய் என்பதே அதன் பொருள். விரைவில் பழுக்கும் நிலையிலுள்ள காயே அது. செங்காய் என்றும் அதனைக் குறிப்பதுண்டு.

3.50 மாவடை, மரவடை

இவை நிலம், தோட்டம் போன்றவற்றை விலை தந்து வாங்குவோர் அச் சொத்தின் எல்லை முதலிய விவரங்களை யெல்லாம் ஒன்று விடாமல் எழுதி முடித்தபின் ஈற்றில் மாவடை மரவடை யுட்பட என்னும் தொடர் மொழியையும் சேர்த்தே எழுதுவர். மாவடை என்பது விலங்கு, பறவை போன்றவற்றைக் குறிக்கும். அங்குள்ள ஆடுமாடுகள், கோழி ஆகியவற்றையும் சேர்த்து வாங்குவதாகப் பொருள். மர வடை என்பது தாவரம் என்பதில் அடங்குவனவற்றைக் குறிக்கும்.

3.51 வாழ்க்கைப் படுதல்

கோவலனும், கண்ணகியும் மேற்கொண்ட கற்பு வாழ்க் கையைக் குறிக்கும் காதை சிலப்பதிகாரத்தில் மனையறம் படுத்த காதை எனப்படுகிறது. இல்லறத்தில் அவர்களை ஈடுபடுத்தியதைச் சொல்லும் பகுதி என்பது அதன் பொருள். ஒருவனும் ஒருத்தியும் கூடிவாழத் தொடங்கல்; இல்லற வாழ்வை நடத்துதல் என்றும் கூறலாம். ஒருவனும் ஒருத்தியும் ஒருவரை யொருவர் கட்டிக் கொண்ட பின் வாழும் வாழ்வே வாழ்க்கைப் படுதல்; இல்லற வாழ்வில் ஈடுபடுதல் என்பதும் அதன் பொருளாகலாம்.

3.52 வரன் முறையும், வரை முறையும்

இத் தொடர் மொழிகளிரண்டும் ஒரு பொருளன போல் தோன்றி நம்மை மயக்கினும், இவை இரு வேறு பொருள் பயப்பனவேயாம்.

வரல் + முறை = வரன் முறை

வரை + முறை = வரை முறை

வந்த வரலாற்று முறைமையை வரன் முறை என்றும், சில வரையறைகளை வகுத்துக் கொண்டுள்ள நிலையை வரை முறை என்றும் நாம் வரையறுத்துக் கொண்டால் என்ன?

3.53 கொய்சகம்

இது கொசவம் என்று கூறப்படுகிறது. புடவையின் ஒரு பகுதியைத் தம் ஒரு கையின் கடையிருவிரல்களைப் புறத்தேயும், இடை விரல்கள் மூன்றையும் அகத்தேயும் அமைத்துக் கொண்டு பெண்கள் கொசுவி (ஒருவகை மடிப்பு) உடுப்பர். அது அகக் கொசவம், புறக் கொசவம் என இருவகைப்படும். தமிழகப் பெண்கள் புடவை உடுப்பதில் உள்ள ஒரு கலை நயம் தோய்ந்த உறுப்பே அது. கொசவம், கொசவல், கொசுவல், கொசுவுதல் போல், பின்னல், மடித்தல், முறுக்கல், திரித்தல், சுருட்டல், திரைத்தல், பன்னல் போன்ற நுண்ணிய வேறுபாடமைந்த சொற்கள் பற்பல தமிழில் உள்ளன.

4. இடவியல்

இவ் வியல் தன்மை, முன்னிலை, படர்க்கை எனும் மூவிடம் பற்றிய தன்று. இடனறிதல் எனத் திருக்குறளில் ஓர் அதிகாரம் உள்ளது. அதில் மன்னன் ஒருவன் பெரும் படையும், பேராற்றலும் வாய்ந்தவ னாயினும் தக்க இடமறிந்து போரிட வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். அது போலவே சொற்களும் தத்தமக் குரிய இடத்தில் அமைக்கப்பட்டால்தான் தக்க முழுப் பொருளையும் தர முடியும். சொற்றொடரில் இடப் பொருத்தம் பாராது கைபோன போக்கில் எழுதுவதோ, நா பிறழ்ந்த போக்கில் பேசுவதோ நன்றன்று; முழுப் பயனையும் பெற இயலாது. ஆகவே ஒரு சொற்றொடரில் ஒரு சொல்லை எந்த இடத்தில் அமைக்கலாம் என்பது குறித்துச் சிறிதேனும் எண்ணிப் பார்த்து எழுதுதல் நலம். எமக்குத் தோன்றிய வண்ணம் சில சொற்களுக்குச் சில இடங்களை ஒதுக்கியுள்ளோம். யாம் எடுத்துக் காட்டுகளாகத் தந்துள்ள இட ஒதுக்கீடுகள் பிறர்க்குப் பொருத்த மற்றனவாகத் தோன்ற இடமிருக்கும் என்பதும் எமக்குத் தெரியும். எழுதுவோர் இதைப்பற்றி எண்ணித் தேர்ந்து செயல்பட வேண்டும் என்பதே இங்கு எமது நோக்கம். அதற்கு இவ் வியல் சிறிதேனும் பயன்படும் என நம்புகிறோம்.

4.1 கிழக்கு மேற்கு கூடத் தெரியாமலா பாலு மீது செ. இப்படிப் பாய்வது?

இச் சொற்றொடரில் தெரியாமலா என்பதன் இடப் பொருத்தத்தை முதலில் பார்ப்போமா? தெரியாமல் + ஆ = தெரியாமலா என்றுருவாகியுள்ளது அது. ஆ என்பது ஓர் இடைச் சொல். அது வினாப் பொருளையும் வியப்புப் பொருளையும்

இங்கு விளைக்கிறது. ஆகவே உண்மையில் இங்கு நமது நோக்கம் ஆ என்னும் இடைச் சொல் அமைந்திருக்கும் இடம் பற்றிய தாகவே இருக்க முடியும். இப்போது இருக்கு மிடம் சரிதான் என்றால் தெரிந்து கொண்டு பாய்ந்தால் தப்பில்லை என்றாகாதா? பாய்ந்ததைக் கண்டிப்பதுதான் இங்குக் கருத்தாயின் அது இப்படியா பாய்வது என்று இருக்கலாமா? அங்ஙனமாயினும் வேறு எப்படியேனும் பாயலாம் என்பதாக ஆகிவிடாதா? ஆகவே பாய்வதா என்று அமைப்பது சரியாக இருக்கலாம் போல் தோன்று கிறது. இப்படிப் பாய்வதா எனப் பாய்வதில் அழுத்தம் தந்து அமைப்பதே மற்றைய இடங்களினும் பொருத்தமாகப் படுகிறது.

4.2 அ. ஆடுவாள் - ஆடுவாள் - ஆவேசத்தின் எல்லைக்கே சென்று ஆடுவாள்.

ஆ. ஆடுவாள் - ஆடுவாள் - ஆவேசத்தின் எல்லைக்குச் சென்றே ஆடுவாள்

இவ் விரு சொற்றொடர்களையும் பொறுமையாகப் படித்து எண்ணிப் பாருங்கள். அப்போது ஏ என்னும் இடைச் சொல் இடம் மாறி யுள்ளமை விளங்கும். அது மற்றவற்றினின்றும் ஒன்றைப் பிரித்துக் காட்டிச் சிறப்பிக்கும் பொருளில் வந்துள்ளது.

'அ' பிரிவில் உள்ள ஏ மற்ற இடங்களுக்குச் செல்லாமல் முடிவிட மாகிய எல்லைப் பகுதிக்கு முதன்மை தருகிறது.

'ஆ' பிரிவு எல்லையா வேறா என்பதை விடச் சென்றதற்கு முதன்மை தருகிறது.

இதை எழுதியவர் இடத்தின் சிறப்பைத் தம் உள்ளத்தில் முதன்மையாகக் கொண்டாரா? சென்ற செலவின் அருமையைத் தம் அகத்தே முதன்மையாகக் கொண்டாரா? என்பதைக் கொண்டே அதன் இடம் வரையறுக்கப்பட வேண்டும். நிகழ்ச்சி யையும், அதைக் கூற விரும்புபவரின் உணர்வையும் மய்யமாகக் கொண்டுதான் இதனை நாம் நோக்க வேண்டும்.

4.3. திருப்பதி உண்டியலில் ஒரே பக்தர் ரூ. 5 கோடி காணிக்கை...

இங்கும் ஏகார இடைச் சொல்தான் நம்மை நோக்கச் சொல்கிறது. ஒரே பக்தர் என்பதினும், ஒரு பக்தரே என்று அத் தொடரை அமைத்துப் பாருங்கள். எண்ணிக்கையினும் பக்தருக்குச் சிறப்புக் கிட்டும். இங்கு பக்தருக்கே தலைமையிடம் உரியது. ஒரு என்னும் எண் அடை மொழியாகப் பக்தர் என்னும் சொல்லைச் சிறப்பிக்க வந்ததே. ஆதலின், பக்தரே என்பதே சரி எனத் தோன்றுகிறது. எண்ணுக்கு முதன்மை தர விரும்புவோர் ஒரே எனினும் இழுக்காகாது.

4.4 சாத்தான் குளம் இடைத் தேர்தலில் மூட்டை கட்டவும் பட்டு விட்டது.

இங்கு உம்மை இடைச் சொல் மற்றொரு சொல்லைப் பிளந்து அதன் வயிற்றில் வைத்து மூடப்பட்டுள்ளது. கட்டப் பட்டு என இருவேறு சொற்களாகக் கருதி அவற்றுக் கிடையே கட்ட + உம் = கட்டவும் என வைத்துத் தைத்து அக் கூட்டுச் சொல் உருவாக்கப் பட்டுள்ளது. கட்டப்படுதல் என்பதே அங்குள்ள அடிப்படைச் சொல். ஆகவே கட்டப்பட்டு என்பதை ஒரே சொல்லாகக் கொண்டு கட்டப்பட்டும் விட்டது என்று அமைத்து எண்ணிப் பார்ப்போர்க்கு, உம் எனும் அவ் விடைச் சொல்லுக்குப் பொருத்தமான இடம் எது என்பது புலப்படும்.

4.5 வெட்டு ஒன்று சில வேளைகளில் துண்டுகள் இரண்டுக்கும் மேலாகவும் இருக்கும்.

மேலுள்ள தொடரை,

அ. சில வேளைகளில் வெட்டு ஒன்று துண்டுகள் இரண்டுக்கும் மேலாகவும் இருக்கும்.

ஆ. சில வேளைகளில் வெட்டு ஒன்றே துண்டுகள் இரண்டுக்கும் மேலாகவும் இருக்கும்.

இ. சில வேளைகளில் ஒரு வெட்டே துண்டுகள் இரண்டுக்கும் மேலாகத் தரும்.

ஈ. சில வேளைகளில் வெட்டு ஒன்றே இரண்டுக்கு மேலான துண்டுகளை வீழ்த்தும்.

எனப் பிரித்துப் பல்வேறுபட அடுக்கிப் பார்த்தால் இடப் பொருள் நயம் மிக்குத் தோன்றலைக் காண முடியும்.

4.6 இந்தி அல்லது ஆங்கிலத்தில் சரளமாகத் தங்களது கருத்துகளை அவையில் தெரிவித்திட முடியாத நிலையில் உறுப்பினர்கள் தாய் மொழியில் உரையாற்றிட அனுமதிக்கப்படுவது போல்...

இத் தொடரைத் தங்களது கருத்துகளை எனத் தொடங்கி இந்தி அல்லது ஆங்கிலத்தில் எனத் தொடர்ந்து அமைத்துப் பாருங்கள். ஆற்றொழுக்காகப் புலப்படும் பொருளோட்ட அருமையும் எளிமையும் தோன்றும். உறுப்பினர்களையும் தூக்கி முன்னால் அமர்த்திப் பாருங்கள். மேலும் பொருள் நலம் காணப்படும். அவையில் என்பதையும் சற்று மாற்றிப் பார்க்கலாம். இவ்வாறு ஒவ்வொரு சொல்லையும் இடமாற்றம் செய்யும் போது அச் சொற்றொடரின் பொருளோட்டம் வெள்ளோட்டப் பாங்கில் விளங்கக் காணலாம்.

4.7 அ. எனக்குப் புடவையே கட்டத் தெரியாது.
ஆ. எனக்குப் புடவை கட்டவே தெரியாது.

இங்கு அவருக்குப் புடவை தெரியாதாயின் ''புடவையே'' என்றும், புடவை தெரியும் ஆனால் அதைக் கட்டத்தான் தெரியாது எனில், 'கட்டவே' என்றும் கூறலாம். புடவையே கட்டத் தெரியாது என்றால், வேட்டி கட்டத் தெரியும் என்றும் பொருள் கொள்ள முடியும். எனக்குப் புடவையே கட்டத் தெரியாது; அப்படியிருக்க வேட்டி கட்டச் சொன்னால் அது எப்படிச் சரியாகும் என்பது

போல் எத்தனையோ சுவையான வேறு பல பொருள்களை இடவியல் முறையில் காணலாகுமே.

4.8 அ. மேலை நாட்டில் சிவாசி மட்டும் பிறந்திருந்தால், உலகின் ஒப்பற்ற கலைஞராக ஒளிவீசி யிருப் பார்.

ஆ. சிவாசி மேலை நாட்டில் மட்டும் பிறந்திருந்தால், உலகின் ஒப்பற்ற கலைஞராக ஒளி வீசியிருப் பார்.

மேலை நாட்டில் சிவாசி மட்டும் பிறந்திருந்தால் அவர் எப்படி வாழ்ந்திருப்பார்? நடிகர் திலகம் என்று எப்படி அழைக்கப் பட்டிருப்பார்? ஆகவே மட்டும் என்பதை மேலை நாட்டோடு சேர்த்து மேலை நாட்டில் மட்டும் என்று எழுதிப் பார்த்து இவ் விட இயலின் அருமையைப் புலப்படுத்துவோமே.

4.9 அ. ஈடுபடுவார் என்று அரசியல் திறனாய்வாளர்கள் எதிர்பார்க்க வில்லை தான்.

ஆ. பூச்சாண்டி வேறு காட்டி வைத்திருக்கிறார்.

மேலுள்ள இரு தொடர்களிலும் முறையே இடம் பெற்றுள்ள தான், வேறு என்பன தத்தமக் கேற்ற இடங்களில் உள்ளனவா என எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம். அதன் பின் எதிர் பார்க்கத்தான் இல்லை எனவும், ''காட்டி வேறு'' எனவும் அத் தொடர்களை அமைத்துப் பார்த்து இடவியலின் தேவையை உணர்க.

4.10 என் மாமா ஒரு வாரம் சென்னையில் ஒரு வேலையாக இருந்துவிட்டு வந்தார்.

என் மாமா சென்னையில் ஒரு வேலையாக ஒரு வாரம் இருந்துவிட்டு வந்தார். இங்கே அவர் அங்கு இருந்த காலமே

சிறப்புச் செய்தி யாதலின் அவையிரண்டையும் அடுத்தடுத்து அமைக்கலாம். சொற்கள் அவாய் நிலையானும் பொருள் உணர்த்த வல்லன வாயினும் அவை, அண்மையான் அதை உணர்த்த வைப்பதே சிறந்த தென்று யாம் கருதுகிறோ மாதலின் 'ஒருவாரம் இருந்து' என அமைக்கலாம் என எண்ணினோம். யார், எங்கு, ஏன், எவ்வளவு காலம் என்பனவும் முறையான அடுக்காகத் தோன்றுகின்றன; எண்ணிப் பார்த்திடுக.

4.11 அ.தி.மு.க. ஆட்சி பொறுப் பேற்ற கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசு ஊழியர்களுக்குத் தரப்பட்டு வந்த சலுகைகள் தொடர்ந்து ரத்தாகி வருகின்றன.

இத் தொடரில் ஆட்சிக்குத் தரப்பட்டுள்ள முதன்மையை அரசு ஊழியர்களுக்குத் தந்து பார்ப்போமா?

அரசு ஊழியர்களுக்குத் தரப்பட்டு வந்த சலுகைகள் அ.தி.மு.க. ஆட்சி, பொறுப்பேற்ற கடந்த இரண்டு ஆண்டுகளில் தொடர்ந்து ரத்தாகி வருகின்றன. விருந்தின் போது பாயசம் போன்ற இனிப்புணவை முதலிலோ, ஈற்றிலோ உண்பது போன்ற வேறுபாட்டையே இங்கு நாம் காண்கிறோம்.

4.12 இந்த நிலையில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு பள்ளி மாணவர்கள் சிலர் அதைப் பகலுணவாகச் சாப்பிட்டுள்ளனர்.

இங்கு 'ஒரு பள்ளி' என்பதைப் 'பள்ளி ஒன்றின்' என அமைத்துப் பார்ப்பின், பின்னது எத்துணை விழுப்ப முடையதாக அமைகிறது பார்த்தீர்களா? விழுப்பம் மட்டுமே யன்றி ஒரு பள்ளி மாணவனா, மாணவர்களா? ஒரு என்பது பள்ளிக்கு அடையா? மாணவருக்கு அடையா? ஒரு மாணவர்கள் சிலர் என்பன போன்ற குழப்பங்களும் இங்குத் தவிர்க்கப்படுகின்றன வல்லவா?

4.13 நம்பவும் முடிய வில்லை, நம்பாமலும் இருக்க முடிய வில்லை.

இத் தொடரை 'நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை' என உம்மையை இடம் மாற்றிப் போட்டுப் பார்த்துப் பொருளையும் சுவையையும் நுகர வேண்டுகிறோம். இதனையே வேறு சூழ்நிலையில் 'நம்பிக் கொடுக்கவும் முடியவில்லை, நம்பாமல் மறுக்கவும் முடிய வில்லை' என அமைத்தும் பார்க்கலாம். இதன் சிறப்பை 'நம்பிக் கொடுக்கவும் முடியவில்லை, நம்பாமல் மறுக்கவும் முடிய வில்லை' என வேறு முறையில் அடுக்கியும் நன்கு உணர முடியும்.

4.14 அரசியல் துறையிலும் அவன் ராணுவத்திலும் தன்னிகரற்று விளங்கினான்.

கை போன போக்கில் போய் பாதி வழியில் விழுந்து கிடக்கும் அவனைத் தூக்கி முன்னேறச் செய்தால் போதும்; நிலைமை செம்மைப்பட்டுவிடும்.

4.15 பட்டை தீட்டப்படாமலே சில வைரங்கள் கண்ணைப் பறிப்பன உண்டுங்க.

முன்னேறிய அவனைப் போலவே இந்தச் சில வைரங்களையும் முன்னேற்றலாம். மற்றும் இத் தொடரில் கண்ணைப் பறிக்கும் சில வைரங்கள் அல்லது கண்ணைப் பறிப்பன வாகிய சில வைரங்கள் என மாறுதல் செய்தால் இது, மாசு துடைக்கப்பட்டதோடு பட்டை தீட்டப்பட்ட வைரமாகவும் ஒளிருமே. மேலும் பட்டை தீட்டப்படாமலேயே என ஏகாரத்தி னருகில் மற்றோர் ஏகாரத்தையும் சேர்த்துப் பாருங்கள் வைர ஒளியால் கண் கூசக் காண்பீர்கள்.

4.16 புதிதாக ஆள்சேர்க்கும் பணியில் அரசு தொடர்ந்து ஈடுபட்டுள்ளது.

மேலுள்ள தொடரைப் படிக்கும் எவருக்கும் ஆள் சேர்க்கும் பணி புதியதா? சேர்க்கப்படும் ஆள் புதியவரா? என்னும் அய்ய வினாக்கள் தோன்ற வாய்ப்புண்டே. ஆதலால் அய்ய மற்ற தொடராக இதனை மாற்ற வேண்டுமன்றோ? ஆகவே இத்தொடரைப், 'புதிய ஆள்களைச் சேர்க்கும் பணி' என்றோ 'ஆள்களைப் புதிதாகச் சேர்க்கும் பணி' என்றோ மாற்றி விட்டாலென்ன?

4.17 இந்தத் தலைமையை ஏற்றால்தான் பிற மதச்சார்பற்ற கட்சிகளுடன் கூட்டணி அமைப்போம்.

முன்னதைப் போன்றே இத் தொடரிலும் மதச் சார்பற்ற பிற கட்சிகளுடனா? பிற மதச் சார்பற்ற கட்சிகளுடனா? என அய்யந் தோன்ற நல் வாய்ப்புண்டே? ஆதலால் இதனை,

'இந்தத் தலைமையை ஏற்றால்தான் மதச் சார்பற்ற பிற கட்சிகளுடன் கூட்டணி அமைப்போம்' என்று மாற்றி அமைப்போமா?

4.18 அ. மரத்தின் மேல் குரங்கு இருக்கிறது.
ஆ. குரங்கு மரத்தின் மேல் இருக்கிறது.

'அ' என்னும் பிரிவிலுள்ள தொடர், மரத்தை மூல நோக்க மாகக் கொண்டு மரத்தின் மேல் என்ன இருக்கிறது என்பதற்கு விடையாகத் தோன்றியது. 'ஆ' எனும் பிரிவுத் தொடர், குரங்கை மூல நோக்கமாகக் கொண்டு குரங்கு எங்கே இருக்கிறது என்பதற்கு விடையாகத் தோன்றியது என அறிந்து கொள்வோமா?

4.19 அ. ஆனால் தமிழக அரசு பொடா ஆய்வுக் குழுவின் அதிகாரத்தையே கேள்வி கேட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆ. ஆனால் தமிழக அரசு பொடா ஆய்வுக் குழுவின் அதிகாரத்தையே கேள்வி கேட்டுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இ. ஆனால் தமிழக அரசு பொடா ஆய்வுக் குழுவின் அதிகாரத்தைப் பற்றியே கேள்வி கேட்டுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈ. ஆனால் தமிழக அரசே பொடா ஆய்வுக் குழுவின் அதிகாரத்தைப் பற்றிக் கேள்வி கேட்டுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந் நான்கு சொற் றொடர்களையும் கூர்ந்து நோக்குவோர் இட ஒதுக்கீட்டின் சிறப்பை யறிவதோடு வேறு சில மாற்றங்களால் விளையும் பயன்களையும் நன்கறிவர்.

4.20 நம் நாட்டில் அருள் வாக்கு, சாதகம், கைரேகை, கிளி சோதிடம், சுவடி படித்தல், எண் கணித சோதிடம் ஆகிய பல்வேறு வழிகளில் மக்கள் எதிர்காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகின்றனர்.

வழிகளில் என்பதிலுள்ள இல் என்னும் இடைச் சொல்லுக்கு மாற்றாக ஆல் என்னு மிடைச் சொல்லை அமைத்து வழிகளால் என்றும், அதனோடு மேலும் ஓரிடைச் சொல்லாக உம் என்பதைச் சேர்த்து வழிகளாலும் என அமைத்துப் பார்த்து நல மேம்பாடுணரலாம். மக்கள் யாருடைய எதிர்காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்வராம்? இவ் வையத்திற்கு அங்கே தம் என்னும் சொல்லைச் சேர்த்து மக்கள் தம் எதிர் காலத்தைப் பற்றி எனவும் அமைத்துப் பார்க்கலாம்.

அ. நம் நாட்டில் மக்கள் தம் எதிர்காலத்தைப் பற்றி அருள் வாக்கு... ஆகிய பல்வேறு வழிகளாலும் தெரிந்து கொள்ள விரும்புகின்றனர்.

ஆ. நம் நாட்டில் மக்கள் தம் எதிர்காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள அருள் வாக்கு... ஆகிய பல்வேறு வழிகளாலும்

முயல்கின்றனர். இங்ஙனம் சொற்கள் இடமாற்றம் செய்யப்படுவதால் அவை, பலவகைப் பயன்களையும் அளிக்க வல்லனவாதல் உணரப்படும்.

4.21 இன்றைய சராசரி இந்தியன் ஒருவனுடைய முக அமைப்பு ஒரு சிறிது அய்யத்திற்கும் இட மில்லாமல் முழுக்க முழுக்க ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவராய அவனுடைய திராவிட முன்னோர் களின் முக அமைப்பேதான்.

அ. ஒரு சிறிது அய்யத்திற்கும் இடமில்லாமல்

ஆ. ஒரு சிறிதும் அய்யத்திற்கு இடமில்லாமல்

இ. ஒரு சிறு அய்யத்திற்கும் இடமில்லாமல்

மேலுள்ள பத்தியையும் அதன் கீழ் தரப்பட்டுள்ள அ, ஆ, இ என்னும் மூன்று பகுதிகளையும் கூர்ந்து நோக்கிச் சுவையுணர்ந்து மகிழ்க. பொருள் கோளுக்குச் சொற்கள் பெறும் இடங்கள் எந்த அளவு உதவுகின்றன என்பதையும் அறிவோமாக.

○○○

5. உரிமையியல்

நாட்டுரிமை, மக்களுரிமை, பெண்ணுரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை எனப் பற்பல உரிமைகளை நாமறிவோம். அவை போலவே சொற்களுக்கும் உரிமை யுண்டு என்பதையோ, அவை வழங்கப்பட வேண்டியவை என்பதையோ நம்மிற் பலர் அறிவதில்லை என்பதோடு, அதைப் பொருட்படுத்தாமலும், மறுத்தும் செயல்படுவதை யாவரும் அறிதல் நலம். பிற உரிமைகளைப் போன்றே சொல்லுரிமைகளும் பேணப் பட வேண்டியவையே. ஆகவே சொற்களை அவற்றின் உரிமை நோக்கித் தொடர்களில் அமைக்க வேண்டும் என்பதே, இந்த இயலின் நோக்கமாகும். உரிய சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றுக் குரிய இடங்களில் அமர்த்த வேண்டும். காற் சட்டை மேற் சட்டைகளை முறையே காலுக்கும் மேலுக்குமாக உடுப்பதுதானே முறை. காலணியைக் கையிலும், கையணியைக் காலிலும் அணிவாருண்டா? அணிகளின் தன்மையும், தரமும் அறியாதவர்களே மூக் கணியைக் காதிலும், காதணியை மூக்கிலும் அணிந்து இடர்ப்படுவர். ஆகவே இவ் வியலில் பல எடுத்துக்காட்டுகள் மூலம் சொற்களை அவற்றுக்குரிய இடங்களைத் தேர்ந்தெடுத்து அமைப்பதன் சீர், எடுத் தியம்பப்படுகிறது. இவ் வுரிமை இதை எழுதும் எமது விருப்பமே யாதலின், இதில் வேறுபாட்டுக்கு மிடம் உண்டு.

5.1 திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழும் மேல் நாடுகளில்...

அ. திருமணம் செய்து கொள்ளல்
ஆ. திருமணம் செய்தல்
இ. திருமணம் செய்வித்தல்
இம் மூன்று சொற்றொடர்களையும் நோக்குக.

ஒருவர் தாமே திருமணம் செய்து கொண்டார் என்பதற்கும், பிறருக்குத் திருமணம் செய்தார் என்பதற்கும், பிறரைத் திருமணம் செய்வித்தார் என்பதற்கும் உள்ள வேறுபாடுகளை அ, ஆ, இ எனும் மூன்று தொடர்களும் உணர்த்தலை உணர்வோர், அவற்றுக்கும் மேலே உள்ள தொடரில் உள்ள குறையை நிறைவு செய்யும் திறம் பெறுவர். ''திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழும் மேல் நாடுகளில்...'' என அத்தொடர் செப்பனிடப் படல் நன்றுதானே. திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழ்தல் எனில், அவர்கள் வேறு யாருக்கேனும் திருமணம் செய்து வைக்காமல் சேர்ந்து வாழ்கின்றனர் என்றும் பொருள் ஏற்பட முடியுமே. எனவே செய்து கொள்ளாமல் என்பதே அந்த இடத்திற்கு உரிய சொல்லாதல் கண்டோம்.

5.2 திருமணம் செய்யாமல் தனியாக வசித்தவர்; பெண் டாக்டர் படுகொலை.

இதுவும் மேலுள்ள தொடர் போன்றதே.

5.3 மத்திய அரசின் தவறான கொள்கையால் விவசாயிகள் தற்கொலை செய்கிறார்கள்.

வினையும், அதனைச் செய்வதும், அதன் பயனை அடைவதும் ஒன்றா? வேறு வேறா? என அறிய வல்லார் மேலுள்ள தொடரில் உள்ள சொல்லுரிமைச் சிக்கலை எளிதில் தீர்ப்பர். கொலையும், அதனைச் செய்த விவசாயிகளும், அதன் பயனை அடைந்தவர்களும் வேறு வேறு அல்லர். ஆகவே தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்பதே உரியதாகும். தானே செய்து கொள்வதுதானே தற்கொலை?

5.4 அவர் அ.தி.மு.க. கறை வேட்டியும் வெள்ளை நிறச் சட்டையும் அணிந்திருந்தார்.

வேட்டி உடுத்தத் தக்கதா? அணியத் தக்கதா? உடைக்கும் அணிக்கும் உள்ள வேறுபாட்டை அறியாதாரும் உண்டா? அணி அழகு தருவது; உடை குளிர், வெப்பம், மானம் போன்றவற்றைக் காக்க வல்லது. உடை இன்றியமையாதது. அணி அத்தகைய தன்று. ஆகவே, அவர் அ.தி.மு.க. கறை வேட்டியும் வெள்ளை நிறச் சட்டையும் உடுத்தியிருந்தார் என்பதே சரி.

5.5 இங்கே மந்திரிகள் அணிந்திருப்பது அந்த வேட்டி தான்; நீங்களும் வாங்கி அணிய வேண்டும்.

இத் தொடரும் மேலுள்ளதைப் போன்றதே.

5.6 அது காணாமல் போன மகன் தாமோதரனின் உடல் தான் என்று அடையாளம் காட்டினார்கள்.

இத் தொடரில் உள்ள அது, மகன், உடல் என்பன மூன்றும் முறையே அஃறிணை, உயர்திணை, அஃறிணை ஆகிய மூன்றையும் சார்ந்தன. எனவே இதில் திணைக் குழப்பம் ஏற்பட இடம் உள்ளது. ஆனால் திணை வழு இல்லவே இல்லை. கூர்ந்து நோக்கினால் அது புரியும். அது என்னும் அஃறிணைச் சொல் உடல் என்னும் அஃறிணைச் சொல்லையே சுட்டுகிறது. ஆகவே அவற்றைப் பொருத்த வரையில் திணை வழு வேது மில்லை. அந்த உடல் உயிரோடும் மனிதப் பண்போடும் இருந்த நிலையைச் சுட்டுவது மகன் என்னும் உயர்திணைச் சொல். அந் நிலையில் அதுவும் சரியே...

5.7 காவல் துறையினர் மூன்று பேர் உடலையும் கிணற்றிலிருந்து சடலமாக மீட்டனர்.

சடலம் என்னும் சொல் பிணம் எனும் பொருள் தரும். உடல்களையும் மீட்டனர் என்றாலே அவை பிணங்களே என்பது தானே விளங்குமாதலின், சடலமாக என்பது தேவையற்றது. மூன்று பேரையும் சடலமாக மீட்டனர் என்றால் அச் சொல் தேவையானதே. உடல்களையும், சடலங்களாக எனும் பன்மை வாய்பாடு தெளிவளிக்கும்.

5.8 சொன்னது யார்? சொன்னவர்.

இஃது அன்றாடம் கதிர் தொலைக் காட்சியில் நாம் கண்டு கொண்டிருப்பதேயாகும். சொன்னது எது; சொன்னவர் யார்? இவை வழுவற்றவை. சொன்னது யார் என்பது வழுவுடையதே. சொன்னது அஃறிணைச் சொல்; யார் உயர்திணைச் சொல்; ஆகவே இது திணைவழு. கதிர் தொலைக் காட்சியினரே சொன்னது யார் என முதலில் போட்டு விட்டுப் பிறகு சொன்னது அகன் என்று போடாமல், சொன்னவர் அகன் என்றுதானே போடுகின்றனர். ஆகவே அவ் விடத்துக்குரிய சொல் எது என்பதை அவர்கள் அறியாதவர்கள் அல்லர்.

5.9 இது போன்ற ஆள்களுக்கு நான் முக்கியத்துவம் கொடுப்பது இல்லை.

இது போன்ற மாடு என்பது சரி.
இது போன்ற ஆள் என்பது வழு.
இவர் போன்ற ஆள் என்பது சரி.

5.10 அ. தமிழகம் முழுவதும் மழை பெய்தது.
ஆ. தமிழகத்தில் பரவலாக மழை பெய்தது.
இ. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெய்தது.

முழுவதும், பரவலாக, ஆங்காங்கே என்பன மூன்றும் பொருள் வேறு பாடுடையவையே. இவ் வேறுபாடுகள் யாவரும் அறிந்திருப்பவையே ஆயினும் செய்தித்தாள், வானொலி, தொலைக் காட்சி ஆகியவற்றில் இடம் பெறும் வானிலை அறிக்கைகளில் இவை உரியவாறு ஆளப் பெறுவதில்லை என அறிதல் தகும்.

5.11 இந்தப் புயல் சின்னம் மூலம் தமிழ் நாட்டின் வட மாநிலங்களில் மழை பெய்ய அதிக வாய்ப்பு இருக்கிறது. ஆந்திரா, கர்நாடகம், லட்சத் தீவு ஆகிய வற்றின் கடலோரப் பகுதியில் மழை பெய்யும்.

வட மாவட்டங்களில் என எழுதுவதை மறந்து வடமாநிலங் களில் என எழுதப்பட்டுள்ளது. இதைப் பிழை என்னாமல் தவறுதலாக எழுதப்பட்டது என்றும் கொள்ளலாம். சின்னத்தின் மூலம் என்னும் மரபு பிறழ்ந்து, சின்னம் மூலம் என எழுதப் பட்டமை பிழைதான். கடலோரப் பகுதியில் என்பது பகுதிகளில் என இருக்க வேண்டும் என்பதும் அனைவரும் அறிந்ததுதானே? பகுதிகளிலும் என ஓர் உம்மையும் இருந்தால் முழுப் பொருளும் வழுவாது கிடைக்கும்.

5.12 இதையடுத்து 86 மாணவிகள் உட்பட 166 மாணவர் களையும் போலீசார் கைது செய்தனர்.

தமிழில் ஆண், பெண் பால்களோடு உயர்வுப் பன்மையும் உள்ளமை நன்கு அறிந்து கொள்ளத்தக்கது. மாணவன், மாணவி, மாணவர், மாணவர்கள் எனும் இந் நான்கும் முறையே ஆண், பெண், உயர்வுப் பன்மை, பலர் ஆகிய பால்களை உணர்த்த வல்லன. மாணவர் என்பது பலர்பால் ஆயினும், ஒருவரையே உயர்வு கருதிப் பன்மையால் குறிக்கும் வழக்கம் ஏற்பட்ட பிறகு, அது ஒருமையைச் சுட்டுவதாகக் கொள்ளப்பட்டுப் பன்மையைச் சுட்ட மாணவர்கள் என்பது ஆளப் படுகிறது. 166 மாணவர்களில் 86 மாணவிகளும் அடங்குவர் ஆதலால், 86 மாணவிகள் என்பது தேவையற்றது. பால் பகுப்புத் தேவை எனில் 86 பெண் மாணவரும் 80 ஆண் மாணவரும் என்று எழுதலாமே. பெண் மாணவரை மாணவி என்றால், ஆண் மாணவரை மாணவன் என்று குறிப்பிட வேண்டும். அவற்றின் பன்மையை மாணவிகள், மாணவன்கள் என்பதுதானே முறை. மாணவர் என்பது ஆண்களையே குறிக்கும் என்பது சரியன்று. ஆகவே, ''இதை யடுத்து 86 பெண் மாணவர்கள் உட்பட 166 மாணவர்களையும் போலீசார் கைது செய்தனர்.'' என அத் தொடரை அமைப்பதே சரி எனத் தோன்றுகிறது. அல்லது ''இதையடுத்து பெண் 86 ஆண் 80 ஆக 166 மாணவர்களையும் போலீசார் கைது செய்தனர்'' என்றும் எழுதலாம். கைது என்பது தமிழ்ச் சொல்லன்று.

5.13 கலைஞர் முதலியோர்; கம்பர் உள்ளிட்டோர்.

முதலியோர், போன்றோர், ஆகியோர் என்பனவற்றைக் கைவிட்டு உள்ளிட்டோர் என எழுதும் வழக்கம் வந்துள்ளது. முதலியோர் என்பதற்கு ''அகர முதல எழுத்தெல்லாம்'' என்னும் குறளில் அகரத்தை முதலாக உடையன எழுத்துகளெல்லாம் என்று பொருள் கொள்ளும் போது அகரத்துக்குத் தலைமை, முதன்மை, சிறப்பு ஆகியன கிட்டும். அதையே ''எழுத்துகளெல்லாம் அகரம் உள்ளிட்டவை'' என்றால் அகரத்துக்கு முதன்மையோ, தலைமையோ, சிறப்போ கிட்டாது. முப்பது எழுத்துகளில் அகரமும் ஒன்று என்றுதான் ஆகும். அது போல் கலைஞர் முதலியோர், கம்பர் முதலியோர் என்பனவற்றுக்கும் கலைஞர் உள்ளிட்டோர், கம்பர் உள்ளிட்டோர் என்பனவற்றுக்கும் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து தக்கவாறு எழுதுவது இன்றியமையாதது.

5.14 லோக் சபா, ராச்சிய சபா இரண்டும் கூடி, மெலிதான பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட சட்டம் இது.

ஆங்கில நோயால் ஏற்பட்ட உள்ளிட்டோர் என்பது போன்றே மெலிதான எனும் சொல்லாட்சியும் வந்து தொலைந்து விட்டது. மெலிவும் தடிப்பும் இங்குப் பொருத்த மானவைதாமா? குறைந்த பெரும்பான்மை என்று குறிப்பிடுவதில் ஏற்பட்ட சலிப்பாலோ, மெலிதான பெரும்பான்மை என்பதனால் ஏற்படும் ஆங்கிலப் புதுமை மோகத்தாலோ பலர் உள்ளிட்ட என்பதை ஆளத் தொடங்கியுள்ளனர்.

5.15 என் கணவர் இந்த இரகசியத்தைச் சொல்லி முடித்ததும் அவர் உயிர்விட்டார்.

தேவையான சொல்லைக் கைவிட்டு எழுதுவதைப் போன்றே, தேவையற்ற சொல்லைக் கையாண்டு எழுதுவதும் தீதே. மேலுள்ள தொடரில் அவர் என்னும் சொல் தேவையற்று உள்ளே வந்து புகுந்து கொண்டுவிட்டது. அதனால் அந்த அவர், எவர் என்னும் வினாவுக்கு விடைதர இயலாமல் விழிக்கிறார். ஆகவே அவரை வெளியே அனுப்பி விட்டால் சிக்கல் தீர்ந்து விடும்.

5.16 கல்யாணி அவளுக்கு ஒரு சாடியில் மாங்காய் வடு போட்டுக் கொண்டுவந்து கொடுக்கிறாள்.

மாங்காய் வடு, வடு மாங்காய் எனும் இவற்றுள் எது சரி என எண்ணுக. மாங்காயின் வடு, வடு வாயுள்ள மாங்காய் எனப் பொருள் தந்து இரண்டுமே சரியானவையாகக் கருதப்படுகின்றன. மாங்காய் வடு போட்டு என்றால், சாடியில் வடுக்களைப் போட்டு என்றன்றோ பொருள் கிடைக்கும். ஆகவே ஊறுகாய் போட்டு என்றால் சரியாக இருக்குமா?

5.17 வழி தவறி வந்த அரிய வகை ஆந்தை; தலையில் சிறிது கொம்போடு இருந்த இது இந்தியப் பெருங் கொம்பு ஆந்தை வகையைச் சேர்ந்தது.

சிறு கொம்போடு என்றோ, சிறிய கொம்போடு என்றோ இதை அமைத்துப் பார்க்கலாமே. சிறிது கொம்பு என்பது உரிய சொல்லாட்சியன்றே. சிறிது என்பது கொஞ்சம் என்று பொருள் படுவதால் அஃது அங்கு இருக்க உரிமையற்ற சொல்தானே.

5.18 மயிலாப்பூர் குளத்தில் களையெடுப்பு.

மயிலாப்பூரில் உள்ள குளத்தில் தூர் வாரும் பணி நடை பெறுவதாக உள்ள ஒரு படத்திற்கு இத் தலைப்புத் தரப்பட்டுள்ளது. வயலில் முளைப்பது தான் களை எனப்படும். அதை அகற்றுவதையே களை யெடுப்பு என்பர். இந் நண்பர்

குளத்தில் உள்ள தேவையற்ற கல் மண் போன்றவற்றை வாரி யெடுத்து அகற்றுவதைக் களை யெடுப்பு என்பது உரிமை மீறலே யன்றோ?

5.19 இதில் ஒரு ஆல மரமும், வேம்பு மரம் ஒன்றும் சிறு செடிகளாக அருகருகே ஒட்டியபடி வளர்ந்துள்ளன.

வேம்பு + மரம் = வேப்பமரம் என்பதுதான் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் தவறாமல் ஆளப்படும் வழக்குடையதாகும். இதை எழுதியவர் வேறு எந்த வழக்கை யொட்டி இவ் வாறு எழுதினாரோ தெரியவில்லை. ஆல், வேம்பு போன்ற மர வகைகளின் இளமைப் பருவத்துக்குக் கன்று என்பதுதான் மரபுப் பெயர். பின் மரமாக வளரக் கூடிய இளையதற்குக் கன்று என்பதும்; என்றுமே வளர்ந்து மரமாகாமல் சிறியதாகவே இருந்து அழிவதற்குச் செடி என்பதும் பெயர்களாகும். இவர் சொல் லுரிமை காக்க வேண்டுமே.

5.20 இரும்புத் தாது அங்கு சொட்டுக்குக் கூட இல்லை.

நீர், நெய், எண்ணெய் போன்றவற்றையே சொட்டுச் சொட்டாகப் பிரிக்க முடியும்; இரும்பு முதலியவற்றின் தாதுகளையும் அப்படிப் பிரிக்க முடியுமா என்று எமக்குத் தெரிய வில்லை. இதை எழுதிய நண்பர் பிரிக்க முடியும் என்று கருதுகிறார் போல் தோன்றுகிறது. அங்கு அது மருந்துக்குக் கூட கிடைக்கவில்லை என எழுத எண்ணிச் சொட்டுக்குக் கூட என்று தவறி எழுதியிருப்பாரோ. அவ்வாறாயினும் சொட்டுக் கூட இல்லை என்றுதான் அதனையும் எழுதியிருக்க வேண்டும். ஆனால் அவ்விடத்துக் குரிய சொல் கடுகளவு கூட, அணுவளவு கூட, துகள் கூட என்பன போன்றனவாகவே இருக்க முடியும்.

5.21 அ. காட்டிக் கொடுத்தலும்
ஆ. போட்டுக் கொடுத்தலும்
இ. போட்டுத் தள்ளுதலும்

தொலைக் காட்சிச் செய்திப் பகுதியில் கூறப்பட்டது 'அ' ஒன்றுதான். பிற இரண்டும் எம்மால் இணைக்கப் பட்டவை. முதலது மட்டும் நெடுங்காலமாகத் தமிழ் நடையில் பயின்று வருவது; ஏணை யிரண்டும் இக்காலத்தே புதியவாக வழங்கப் படுகின்றன. முதலில் உள்ளதன் பொருள் யாவருக்கும் தெரிந்தது. தான், 'ஆ'. பிரிவிலுள்ள தற்கு ஒருவர் தாம் கண்டோ கேட்டோ அறிந்தவற்றோடு தாமும் சிறிது போட்டுச் (கூட்டிச்) சொல்லுதல் என்றும், 'இ'. பிரிவிலுள்ளதற்கு கொன்று விடுதல், கொலை பண்ணுதல் என்றும் பொருள் கொள்ளப்படுகின்றன. எழுத் தாளர்கள் இனி இவற்றின் உரிமைகளையும் பேணிக் கொள் வார்களாக.

5.22 ஒரு நாள் மாட்டைக் கொஞ்சம் அவிழ்த்து விட்டான்; அது ஊர்ப் பெரியவரின் வைக்கோல் போரில் புகுந்து மேய்ந்து விட்டது.

இவன், கொஞ்சம் அவிழ்த்து விட, எஞ்சியதை மாடே அவிழ்த்துக் கொண்டு போய் விட்டதா? கொஞ்ச நேரம் என்பது கொஞ்சம் என எழுதப்படலாம்; அது சரி; மாடு பூச்சியா? எறும்பா? வைக்கோற் போரில் புகுவதற்கு? வைக்கோற் போருள்ள பகுதிக்குள் புக முடியுமே யன்றிப் போருக்குள்ளும் புகக் கூடுமோ? மாடு புல்லை மேயும் என்பது நாமறிந்தது; ஆனால் அது வைக்கோலையும் மேயும் என்பதை இப்போதுதான் அறிகிறோம். ஆகவே இத் தொடரை நாம் ''ஒரு நாள் மாட்டைச் சிறிது நேரம் அவிழ்த்து விட்டான்; அது ஊர்ப் பெரியவரின் வைக்கோல் போர்ப் பட்டியில் புகுந்து வைக்கோலைத் தின்று விட்டது'' என எழுதிக் கொள்வோமா?

5.23 வீடியோ கடையிலிருந்து ஆடியோ கேசட்டுகளை 25 பெட்டிகளில் போலீசார் அள்ளிச் சென்றனர்.

மணல், சருக்கரை, அரிசி போன்றவற்றைக் கை நிறைய எடுப்பதைத்தான் அள்ளுதல் என்பர். கேசட்டுகளைப்

பெட்டிகளில் அடைத்து எடுத்துச் செல்வதை வாரிச் சென்றனர் என்பது போன்று தான் கூற முடியும். தமிழகத்தில் ஏதேனு மொரு வட்டாரத்தில் கேசட்டு முதலியவற்றையும் அள்ளிச் சென்றனர் எனும் வழக்கு இருக்கலாமோ. இருப்பினும் அது பொருத்தமற்றதுதான். உரிமைச் சிக்கல் வரக் கூடியதுதான்.

5.24 அரிவாள், கத்தி, முரட்டு மீசை, தோளில் உயரமான துண்டு போன்றவற்றைப் படம் பிடித்துக் காட்டுகிறார்கள்.

கிணற்றின் ஆழம், ஆற்றின் நீளம், மலையின் உயரம், பலகையின் கனம், வேட்டியின் அகலம் இவை நாமறிந்தவை; துண்டின் உயரம் இப்போது நாம் அறிய வேண்டியதாக உள்ளது. மேல் துண்டு அல்லது அங்க வத்திரம் என்று சொல்லப்படுவது. அதன் நீளம் அகலம் பற்றியே அத் துண்டிலேயே குறித்திருப்பர். நூலின் எண் குறிக்கப்படுவது முண்டு. விலையும் நிறுவனத்தின் பெயரும் அதில் இடம் பெறுவதுண்டு. துண்டின் உயரம் குறிக்கப் பட்டிருப்பதை யாம் கண்டிலமால். உயரமான துண்டை யாராவது எங்காவது காண நேர்ந்தால் எமக்கும் காட்டுங்கள்.

5.25 500 புகைப்படங்களடங்கிய ஒவ்வொரு ஆல்பமும் 13 அங்குல உயரமும் 9 அங்குல அகலமும் கொண்டவை.

இந்த அன்பரும் நீளத்தை உயர்த்தி விட்டார் போலும்.

5.26 அ. ஆல்பெர்ட் சுவிட்சர் என்னும் ஒரு பேரறிஞர் இருந்தார்.

ஆ. ஆல்பெர்ட் சுவிட்சர் என்ற ஒரு பேரறிஞர் இருந்தார்.

இவ் விரு தொடர்களிலும் முறையே உள்ள என்னும், என்ற என்னும் இரு சொற்களையும் உற்று நோக்கியும் ஒப்பிட்டும் எண்ணிப் பாருங்கள். என்னும் எனும் சொல் இறப்பு, நிகழ்வு,

எதிர்வு ஆகிய மூன்று காலங்களுக்கும் பொருந்தும். என்ற எனும் சொல் இறந்த காலத்திற்கு மட்டுமே உரியது. அவர் புகழுருவில் முக் காலத்திலும் வாழ்கின்றாராயினும் மறைந்தவர் தாமே? இருந்தார் என்று இறந்த காலத்தால் தானே பின்னும் குறிக்கப்படுகிறார். ஆகவே என்ற என்பதே முற்றிலும் உரிய சொல்லாகும். எனினும் முக் காலத்துக்கும் உரிய புகழாளராதலின் அவரை 'என்னும்' எனும் சொல்லாலும் குறிக்கலாம்.

5.27 தாயைப் பிளேடால் வெட்டிய மகனுக்கு வலை வீச்சு.

மகன் தாயை வெட்டினான் என்பது தக்கதே. இம் மகனைப் பெற்றதற்கு அத் தாய் தண்டிக்கப்பட வேண்டியவளே. அது சரி. இங்கு நம் ஆராய்ச்சி பிளேடு, வெட்டுதல் என்னும் சொற்களைப் பற்றியதே. பிளேடு என்பது முகம் மழித்துக் கொள்ளப் பயன்படும் கருவியா? இரும்புக் கம்பி, குழாய் போன்றவற்றைத் துண்டாடப் பயன்படுத்தப்படும் கருவியா? எதுவாயிருப்பினும் பிளேடால் அறுக்க முடியும்; சீவ முடியலாம்; துண்டிக்க முடியலாம்; நறுக்கவும் முடியலாம். வெட்ட முடியுமா? எண்ணிப் பார்த்து முடிவு செய்க.

5.28 கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகவே நடுவணரசு தன்னைத் திரை மறைவில் மட்டுமே மறைத்துக் கொண்டு மாநிலங்களின் நிதி அமைச்சர் களை மேடையில் முன்னுக்குத் தள்ளிவிட்டுக் காரியங்களைச் சாதித்துக் கொண்டு வருகிறது.

நடுவணரசு தன்னைத் திரையில் மறைத்துக் கொள்ளுமா? திரை மறைவில் மறைத்துக் கொள்ளுமா? ஒரு வேளை அது திரையின் மறைவில் வேறொன்றால் தன்னை மூடி மறைத்துக் கொள்ளுமோ. தன்னை மறைத்துக்கொள்ள ஒன்று போதாது போலும். ஆனால் அதிலும் ஒரு சிக்கல் காணப்படுகிறது. நடுவணரசு தன்னைத் திரை மறைவில் மட்டுமே மறைத்துக் கொள்ளுமாமே. மற்ற இடங்களில் அது தன்னை மறைத்துக் கொள்ளாதாமே. புரிகிறதா இச்செய்தியாளரின் கருத்து?

5.29 சென்ற ஆண்டு பருவ மழை சரியாகப் பெய்யாததால் இந்தியாவின் பொருளாதார உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது.

பொருளியல் (பொருளாதாரம்) உற்பத்தி செய்யப்படும் பொருளா? பொருளை உற்பத்தி செய்யலாம்; பொருளியலை உற்பத்தி செய்வது என்றால் என்ன? எமக்குப் புலப்பட வில்லையே. பொருளியலே இப் போதுதான் உற்பத்தி செய்யப் படுகிறதோ? அன்றிப் பொருளியலின் வளர்ச்சி, முன்னேற்றம் என்பனவற்றை மனத்தில் எண்ணிக் கொண்டு எழுதும்போது உற்பத்தி என்னுஞ் சொல்லைச் சேர்த்து எழுதி யிருப்பாரோ இதை எழுதியவர்?

5.30 அ. உங்களுக்கு எப்போது வசதிப்படுமோ அப்போது வரலாம்.

ஆ. உங்களுக்கு எப்போது தோதுபடுமோ அப்போது வரலாம்.

இ. உங்களுக்குத் தோதுபடும் போது வரலாம்.

இத் தகைய இடங்களில் வசதி என்னுஞ் சொல்லையே பெரும்பாலோர் ஆள்கின்றனர். ஆயினும் அந்த இடத்திற்கு இவ் விரு சொற்களிலும் எது முற்றிலும் உரியது என்று காணுங்கள். எமக்குத் தோது என்பதே முற்றிலும் உரியதாகப் படுகிறது. அது 'இ', எனும் தொடரில் உள்ள பாங்கே செவ்வியதாகவும் படுகிறது.

5.31 குழந்தைகளோடு குழந்தைகளாகத் தாய்மார்களும் பெரியோர்களும் கடற்கரையில் குளித்துக் குதூகலிக் கின்றனர்.

இதை எழுதியவர், கடலில் குளித்துக் கரையில் குதூகலிக் கின்றனர் என்று எழுதத் தொடங்கிக் குளித்தலுக்கும், குதூகலித் தலுக்கும் உள்ள நெருக்க மிகுதியால் அவற்றை இணைத்து நெருக்கி எழுதிவிட்டார் என்று யாம் கருதுகிறோம். நீங்கள் என்ன கருதுகிறீர்களோ?

5.32 ஒவ்வொரு 15 முதல் 17 ஆண்டுகளுக்கு செவ்வாய்க் கிரகமும் பூமியும் ஒன்றுக் கொன்று மிகவும் நெருக்க மாக வரும்.

இப் பகுதியைப் படிக்கும் போது எங்கோ ஏதோ குறை உள்ளதாகத் தெரிகிறது. ஒவ்வொரு 15 முதல் 17 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் என்று அவ்விடத்துக்கு உரிய சொற்களைச் சேர்த்துப் படித்துப் பார்த்தால் குறை, பெரும்பாலும் மறைவது தெரிகிறது. ஆயினும் அக் குறை, நெருடல் ஆகியவை முழுமை யாக நீங்கவில்லை. 'பதினைந்து முதல் பதினேழு ஆண்டு களுக்குட்பட்ட ஒவ்வொரு முறையும் செவ்வாயும் பூமியும் மிக நெருக்கமாக வரும்' என அமைத்துப் படித்தால் குறை, நெருடல் போன்ற எதுவும் அங்கு இருப்பதாக எமக்குத் தோன்ற வில்லை. மற்றவர்களுக்கு இது எப்படித் தோன்றுகிறதோ?

5.33 முன் னொட்டு பின் னொட்டாக என்னென்ன சொல்லாட்சிகளைப் பிரயோகம் செய்ய வேண்டும் என்று...

சொல்லைப் பிரயோகம் செய்வதா? சொல்லாட்சியைப் பிரயோகம் செய்வதா? இது கடுமை வாய்ந்த உரிமைச் சிக்கலாகத் தோன்றுகிறது. ஆளல், பயன் படுத்தல் போன்ற செந்தமிழ்ச் சொற்களை ஒதுக்கிவிட்டுப் பிரயோகம் என்னும் வேற்றுச் சொல்லைத் தேடி யெடுத்து நீட்டி முழக்க வேண்டுவ தேனோ?

5.34 இது தொடர்பாக

இதனது தொடர்பாக என்பதே சரி. உருபைத் தொகுத்து இதன் தொடர்பாக எனினும் சரியே. இது தொடர்பாக அல்லது இது தொடர்பு இல்லாமல் என்றெல்லாம் பொருள் திரிக்க இடம் கொடுக்க வேண்டுமா?

5.35 சாய்பாபா தவறிக் கீழே விழுந்தார். இடுப்பு எலும்பில் லேசான காயம்.

பலரையும் வீழாது காப்பாற்றுபவராகக் கூறப்படுபவர் சாய்பாபா. ஆதலால் அவர் கீழே விழ நேர்ந்தால் எலும்பிலும் காயம் ஏற்படும் போலும். நம் போன்றவர்கள் கீழே விழுந்தால் எலும்பில் முறிவு, சிதரல், பிளப்புப் போன்றனவே ஏற்படும். காயம், புண் ஆகியவை எலும்பில் ஏற்பட மாட்டா.

5.36 இவர் (முல்க்ராச் ஆனந்து) எழுதிய கூலி என்கிற நாவல் வையத்து மொழிகள் அத்துணையிலும் பெரும்பாலும் மொழி பெயர்க்கப்பட்டன.

அத்தனை, அத்துணை என்பன குறித்து நாம் முன்னொரு முறை ஆய்ந்து முடிவு செய்துள்ளோம். ஒன்று, இரண்டு என எண்ணிக் கணக்கிடுவன வற்றை அத்தனை என்றும், பிறவற்றை அத்துணை என்றும் சுட்டுவதே சரி என நாம் அங்கு முடிவு செய்தோம். மரங்கள் அத்தனையிலும், விரல்கள் அத்தனையிலும் என்றும் நீர் அத்துணையும், பருப்பு அத்துணையிலும் என்றும் எழுதுவதே முறை. அத்துணை என்பதற்கு அவ்வளவு என்பதே பொருள். எனவே மொழிகள் அத்தனையிலும் என்பதே சரி என்றாவது காண்க. பெரும்பாலும் மொழி பெயர்க்கப் பட்டன எனில் முழுவதும் மொழிபெயர்க்கப்பட வில்லையோ?

5.37 இந்த உலகம் நம் முடைய உதவியை எதிர்பார்த்து நிற்கவில்லை. அவ் வாறு நினைப்பது இவ் வுலகைப் படைத்த இறைவனை இழிவு படுத்துவதாகும். அது மானுட அகங்காரத்தின் உச்சமாகும்.

இங்கு அவ்வாறு நினைப்பது என்பதன் பொருள் யாது? நம் உதவியை எதிர்பார்த்து நிற்கிறது என நினைப்பதா? நம் உதவியை எதிர்பார்த்து நிற்கவில்லை என நினைப்பதா? எனவே நம் உதவியை எதிர்பார்த்து நிற்கிறது என நினைப்பது என்று விரிவாக எழுதுவதே, இத்தகைய இடங்களில் பொருள் குழப்பம் ஏற்படுவதைத் தடுக்கும். இதுவும் ஒருவகை உரிமை மறுப்பே யாதல் காண்க.

5.38 தலைப்பு : காவிரி நீர்ச் சுழலில் சிக்கி 2 சிறுவர்கள் சாவு.

செய்தி : 1. மீண்டும் ஒரு முறை குளித்துவிட்டு வருவதாகக் கூறிச் சென்ற சிறுவன் நவீன், ஆற்றில் மணல் குழிகளால் ஏற்பட்ட சுழலில் சிக்கி நீரில் மூழ்கினான்.

2. திடீரென ஏற்பட்ட சுழலில் சிக்கிச் சம்பவ இடத்திலேயே மணிகண்டன் இறந்தார்.

இச் செய்தியை எழுதிய செய்தியாளர் நன்கு முயன்று செய்தியைப் பெற்றுத் தந்துள்ளார். ஆயினும் அவருக்குக் காவிரி நீரோட்டம், அதில் ஏற்படும் சுழல், அது ஏற்படுவதன் காரணம் போன்றன சரியாகத் தெரியவில்லை. அதனால் உரிய இடங்களில் அவற்றுக்கு உரிய சொற்களை அமைக்க அவரால் இயலவில்லை. மேலும் தமக்குத் தெரிந்தது உண்மையாகத்தானிருக்கும் எனும் நம்பிக்கையும் அவருக்கு வலுவாக உள்ளது. ஆறுகளில் சுழல் ஏற்படுவதற்குக் குழிகள் காரணமல்ல. அவை காரணமாயின் குழி உள்ள இடங்களிலெல்லாம் சுழல் இருக்குமே. மற்றும் சுழல் திடீரெனவும் எற்படாது. நீரோட்டம் தடைப்பட்டுச் சுழன்று ஓட வேண்டிய இடங்களில் எப்போதும் அது இருந்து கொண்டே இருக்கும். இங்கு உரிமையற்ற சொற்களை நீக்கி எழுதினாலே போதும்.

5.39 அ.தி.மு.க. அரசு இப்போது மருத்துவக் கல்லூரி மாணவர்களையும் போர்க் கோலம் புனைய வைத்திருக்கிறது.

புனைதல் என்னுஞ் சொல்லுக்கும், பூணல் என்னுஞ் சொல்லுக்கும் உள்ள பொருள் வேறுபாட்டை எண்ணாமல் இவர் இவ்வாறு எழுதியுள்ளார் எனக் கருதுகிறோம். புனைவு என்றாலே

ஒப்பனை என்பது புலப்படும். பூண், பூணல் என்றால் கற்பனை, செயற்கை போன்றவற்றுக்குச் சிறிதும் இடமிராது. பூண் அணியினும் வேறுபட்டது. கத்திப்பிடி, உலக்கை, வண்டிச் சக்கரம் போன்றவற்றுள் உள்ள பூண்கள் அழகுக்காக அமைந்தவை யல்ல. அவை கத்திப் பிடி முதலியவற்றைக் காக்கவும் அவற்றுக்கு வலுச் சேர்க்கவும் அமைக்கப்பட்டவையே. எனவே போர்க் கோலம் புனையப் படுவதன்று என்றும், பூணப்படுவதோ, பூட்டப் படுவதோ ஆகு மென்றும் அறிவோமாக.

5.40 பிறந்து நாலு நாளே ஆன அக் குழந்தையை மருத்துவக் கல்வி இயக்குநர் ரவீந்திர நாத் அதன் தாயிடம் ஒப்படைத்த போது குழந்தையைத் தாய் கட்டித் தழுவி முத்த மிட்டு மகிழ்ந்தார்.

பிறந்து நான்கு நாள்களே ஆகியுள்ள குழந்தையை யாராலேனும் கட்டித் தழுவ முடியுமா? உணர்ச்சி வெள்ளத்தில் ஏற்படும் மயக்கச் சுழல்களால் இத் தகு உரிமை மீறல்கள் ஏற்பட வாய்ப்புண்டு என அறிகிறோம். கருத்துகளைத் தெரிவிக்க விரும்புவோர் அக் கருத்துகளுக் குரிய சொற்களை நாடி யறிந்து தேர்ந்து ஆளல் வேண்டும்.

5.41 செய்தித் தலைப்பு:-

ஒரு குடும்பமே சைனத் துறவிகள் ஆகிறது.

குடும்பம், ஆகிறது என்னும் இவ் விரு சொற்களுக்கு மிடையில் சைனத் துறவிகள் சிக்கித் தவிக்கின்றனர். துறவிகள் உயர்திணை; பிற இரண்டும் அஃறிணை. ஆகவே அப்பிற வற்றைக் குடும்பத்தார் என்றும், ஆகின்றனர் என்றும் உயர்திணைச் சொற்களாக்கலாம். அல்லது துறவிகள் என்பதை துறவு என்றாக்கி, ஆகிறது என்பதை அதற்கேற்பப் பூண்கிறது என்று மாக்கிவிட வேண்டும். கணக்கில்ஓரினமாக்கல் என்று ஒரு முறையுண்டே. அது போல் இங்கு ஒரு திணையாக்கல் என்னும் நெறி பின்பற்றப்பட வேண்டும்.

5.42 யாரும் விளக்கெண்ணெய் பூசிக்கொண்டு வழுவி ஓடுவது இல்லை.

விளக்கெண்ணையைப் பூசிக் கொண்டதால் வழுக்கல் மிகுதி யாகி விட்டது போலும். அதனால் 'வழுக்கி', 'வழுவி' என்றாகி விட்டது. வழுக்கித் தப்பிப்பது, ஓடுவதை விட நல்லதென்று கருதுகிறோம்.

5.43 சென்ற ஆண்டில் போதிய மழை இன்மையால் மாங்காய் சிறுத்து விட்டது.

மழை இன்மையால் பருத்திருந்த மாங்காய் சிறுத்து விட்டதா? சென்ற ஆண்டில் போதிய மழை இன்மையால் மாங்காய் பருக்கவில்லை என்பது தானே சரியாக இருக்கக் கூடும்.

5.44 வாழை மரங்கள்

அ. நாசம் அடைந்தன.

ஆ. நாசமாயின.

இ. அடைந்தனவா? விளைத்தனவா?

ஈ. நாசம் அடைந்தன = அழிந்தன.

உ. நாசம் விளைத்தன = உழவர்க்குப் பொருளிழப்பை ஏற்படுத்தின.

ஊ. நாசமாயின = அழிந்தன

எ. நாசம் விளைத்தன = உழவர்க்குப் பொருளிழப்பை (அழிவை) உண்டாக்கின.

இவ்வாறு உரிய சொற்களை ஆளல் சுவையும், பொருட் பயனும் மிக்கதாதல் அறியப்பட்ட தென்று கூறிக்கொள்வோமா?

○○○

6. விளக்கவியல்

இப் பொருள் குறித்த, எமது பிற நூல்களைப் போன்றே இதிலும், ஓரியலி லுள்ள ஒன்று வேறொரு இயலில் இருக்கத் தக்கதாகவும் காணப்படக் கூடும். எல்லாமே பொதுப் பொருள் ஒன்றையே குறித்தன வாதலின் இக் குறையை எம்மால் தவிர்க்க இயலவில்லை. யாவரும் நன்கு அறிந்துள்ளனவும், இந் நூல்களில் இடம் பெற்றிருக்க நேரலாம். 'இது தெரியாதாரும் நாட்டி லிருப்பர்' என எண்ணிய எமது அறியாமையும் இதற்குக் காரண மாகலாம். இந் நூல்களிலுள்ள கருத்துகள், விளக்கங்கள், தீர்வுகள் போன்றன ஒன்றைப் பற்றிய முதல் நோக்கில் எமக்குத் தோன்றியனவே யன்றிப் போதிய ஆய்வு செய்து இவை யாவும் அமைக்கப் பட்டில. இவ்வாறு இந் நூல்கள் உருவாக்கப் படுவதற்குக் காரணம் எமது முதுமையே. இத் தகு ஒன்று இக் காலத்தார்க்குத் தேவை என யாம் எண்ணி அதனை எமது எஞ்சியுள்ள வாழ் நாளிலேயே படைத்துத் தந்துவிட வேண்டும் எனும் துடிப்பும் அதற்கு மற்றொரு காரணமாகலாம்.

இவ் வியலில் சில சொற்கள் முதலியவற்றுக்கு எமக்குத் தோன்றும் விளக்கங்கள் தரப்படுகின்றன வாதலின் இவ் வியல் இப் பெயர்த்தாயிற்று. யாமறிந்த வட்டார வழக்கு இதற்குத் தலையாய காரணமாகும். இத் தகைய வட்டார வழக்கு விளக்கங்கள் அவ்வவ் வட்டாரத்தார் பற்பலராலும் ஆக்கப் பெறல் வேண்டும். இவை பிற் காலத்தார்க்குப் பெருந் துணையாக அமையும்.

6.1 ஏதேனும், எதுவேனும் ஏதுமில்லை, எதுவுமில்லை

ஏது, எது ஆகிய இவ் விரு சொற்களும் ஒரு பொருளன என்று கூற முடியுமா? அது ஏது? அது எது? ஆகிய இவ்விரு தொடர்களும் ஒரு பொருளுடையனவா? இல்லையே. அது ஏது எனில், அது உனக்கு எங்கிருந்து கிடைத்தது என்று பொருள்படுகிறது. அது எது எனில், இவற்றில் நீ கூறியது எது என்று பொருள்படுகிறது. ஆகவே இவ் விரு சொற்களும் ஒரு பொருளன அல்ல; வெவ்வேறு பொருளனவே என்று நாம் முடிவு செய்யலாமா? ஆனால் ஏதேனும், எதுவேனும் என்பனவும், ஏதுமில்லை, எதுவுமில்லை என்பனவும், ஒரே பொருளுடைய இரண்டிரண்டு சொற்கள் போலவே தோன்றுகின்றன. எனவே முன்னுள்ள ஏது என்பதற்கும், பின்னுள்ள ஏது என்பதற்கும் வேறுபாடுண்டு என்று தெரிகிறது. ஏதேனும், ஏதுமில்லை என்னுமிடங்களில் வரும் ஏது, பொருள் வேறுபாடற்ற எது என்பதன் திரிபு என்று கருதுவோமா?

6.2 உட்பொருள்; உள்பொருள்.

உட்பொருள் என்றால் அது வெளிப்படு பொருளன்று; அஃதாவது மறைந்திருக்கும் பொருள் என்றும், உள் பொருள் என்றால் அஃது இல்லாத பொருள் அன்று. இருக்கும் பொருளே என்றும் பொருள் படும் அருமை காண்க. ஒரே சொல்லிலுள்ள ஓர் எழுத்து திரிந்து பொருள் வேறுபாட்டை உணர்த்தும் அருமை பாராட்டத் தக்கதே.

6.3 வந்தாச்சு

வந்து + ஆச்சு = வந்தாச்சு. வந்து ஆகிவிட்டது, அஃதாவது வருதல் என்பது நடைபெற்று முடிந்து விட்டது. திருமணம் நடந்தேறிவிட்டது; நடைபெற்று முடிந்து விட்டது என்பன போல் இதனையும் கருதலாமா? அல்லது வந்து விட்டான் என்று

சொன்னால் மரியாதைக் குறைவு ஏற்படும்; வந்து விட்டார் என்று மரியாதை தர விருப்பமில்லை. இந் நிலையில் வந்தாச்சு, வந்தாயிற்று என்னும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்னலாமா? எப்போது வந்தீர்கள் என்று உசாவ விரும்ப வில்லை; எப்போது வந்தாய் என்று உசாவத் துணிவுமில்லை; இப்படிப்பட்ட நிலையில் எப்ப வந்தாப்பல என உசாவும் வழக்கம் சில மாவட்டங்களில் உண்டு. இது அது போன்ற தாகலாமா?

6.4 முழம் பிடித்தால் சாண்தேறும்.

பொருள்களுக்கு விலை பேசும் போது நூறு சொன்னால்தான் எண்பதாவது கிடைக்கும் என்பது போல்தான், முழம் பிடித்தால்தான் சாண் தேறும் என்பதும். வெட்டுக் கத்தி முதலியவற்றுக்குக் கைப்பிடி செய்ய மரத்தைத் துண்டாடும் போது ஒரு சாண் நீளம் தேவையெனில், ஒரு முழ நீளமுள்ள மரத் துண்டை வெட்டி யெடுப்பர். அதை, அந்த அளவு நறுக்கிச் செதுக்கி இழைத்தால் தான் ஒரு சாண்தேறும். ஒரு சாணுக்கு ஒரு சாண் என நறுக்கிச் செதுக்கி இழைத்தால் குறைந்து விடவும் கூடும். ஆகவேதான், அப்படிச் செய்தனர் சிலர். அப்போது கூறப்பட்டதே முழம் பிடித்தால் சாண் தேறும் என்பது.

6.5 ஈட்டிடுவீர்; ஈட்டியிடுவீர்.

ஈட்டு + இடு + ஈர் = ஈட்டிடுவீர்.

ஈட்டி + இடுவீர் = ஈட்டியிடுவீர்.

ஈட்டிடுவீர் என்பதற்கு ஈட்டுவீர்; சம்பாதிப்பீர் என்பது பொருள்.

ஈட்டியிடுவீர் என்பதற்கு ஈட்டியை அதில் இடுவீர்; ஈட்டியை அதில் போடுவீர் என்பது பொருளாகும். பொருளை ஈட்டிப் பிறருக்கு இடுவீர்; ஈட்டிய பொருளை இல்லாதார்க்குக் கொடுப்பீர் என்று பொருள் கூறவும் இடமிருக்கிறது.

இந் நுட்பம் சுவையாக உள்ளது. அதனை நாம் உணர்ந்து அவற்றை ஆள்வோமாக.

6.6 நமக்கு நாமே கடவுளாக இருப்போம்.

கடவுள் என்னும் ஒன்றைக் கற்பித்து அது, இதை இதைச் செய்ய வல்லது என்பதையும் விரித்துக் கொண்டுள்ள மக்களிடையில் அது, அதை அதைச் செய்வதாகப் புலப்படாத காலத்தில் கடவுட் கோட்பாட்டை நம்ப முடியாமலும், கைவிட விரும்பாமலும் உள்ள மன நிலையில் இது போன்ற கருத்துகள் தோன்றும். ஏனெனில், அது அது நடந்தேற வேண்டுமே.

6.7 வருவித்தல், வரவழைத்தல், தருவித்தல்

இம் மூன்று சொற்களும் சற்றேறக் குறைய ஒரே பொருளில் பல்வேறு வட்டாரங்களில் ஆளப்படுகின்றன. ஆயினும் அவை தம்முள் நுண்ணிய வேறுபாடுகள் இருப்பதை நாம் புரிந்து கொள்வோமா? அது, தானே வரும்படியாகச் செய்தல் வருவித்தல் எனப்பட்டது. அது, நம்மால் வரச் செய்யப்படும் போது வரவழைத்தல் எனப்பட்டது. அதை உடையவர், அதைத் தந்து அனுப்புமாறு செய்தல் தருவித்தல் எனப்பட்டது. இவ் விளக்கம் பொருத்தமாக உள்ளதா?

6.8 நேரமிருக்க வந்து விட்டேன்.

நான் வருவதற்கென்று குறிப்பிடப்பட்ட நேரம் வர, இன்னும் சிறிது மிச்ச மிருக்கிறது; அந்நேரம் இன்னும் எஞ்சியிருக்கிறது. அந் நிலையில் நான் வந்து விட்டேன் என்பது போல் அது கருதப்படு கிறது போலும். குறிப்பிடப்பட்ட நேரத்துக்கு முன்னதாகவே வந்து விட்டேன் என்பதே அங்கு அவர் தெரிவிக்க விழையும் கருத்து.

6.9 மனமார, உள்ளூற, உள்ளார்ந்த

மனமார = மனம் நிறைய; மனமாற = மனம் மாறுதலடைய. இவ்வேறுபாட்டை அறியாத சிலர் 'மனமார' என எண்ணிக்கொண்டு 'மனமாற' என்று எழுதி விடுவதைக் காண முடிகிறது. உள்ளூற = உள்ளத்திலேயே ஊற; ஊற = நீர் ஊறுவது போல் தோன்ற;

உள்ளம் கனிந்து தானே சுரத்தல், உள்ளார்ந்த = உள் + ஆர்ந்த = உள்ளார்ந்த; உள்ளம் நிறைந்த என்பதே கருத்து. உள்ளார்ந்த, மனமார்ந்த என்பன இரண்டும் ஒரே பொருளன.

6.10 தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பது.

தும்பு என்பது கன்று முதலியவற்றைக் கட்டும் கயிறு. கைப் பிடிக் கயிறு. அத் தும்போடு அது ஓடும் போது அதைப் பிடித்து நிறுத்த விரும்புவோர், அத் தும்பைப் பிடிக்காமல் அதைத் தவற விட்டு விட்டுக் கன்றின் வாலைப் பிடித்து நிறுத்த முயல்வதையே இது உணர்த்துகிறது. எளிதாகச் செய்து முடிக்கும் உத்தியைக் கை நழுவ விட்டுவிட்டு, அரியதும் இயலாததுமான முறையைக் கையாளும் பேதைமை இதனால் உணர்த்தப்படுகிறது.

6.11 சில, சிலது, சிலதுகள்.

சில என்பது பன்மைச் சொல்லே யாயினும் அது பல என்பதைவிடக் குறைந்ததே. இவை இரண்டும் வரை யறை யற்றவைகளே. இடத்திற் கேற்ப எத்தனை என்பதைக் குத்து மதிப்பாகக் குறிப்பிடுவனவே. சில என்பதைச் சிலது என்னும் வழக்கம் காணப்படுகிறது. சிலது என்பது சில என்பதன் மாற்றுச் சொல் என்பதை விடச் சிலர் என்பதன் மாற்றுச் சொல் என்பதே மிகப் பொருத்தமானது. சிலரை உயர்திணையாகக் குறிப்பிட விரும்பாதோர் இகழ்ச்சி, வெறுப்பு என்பன போன்ற காரணங்களால் அஃறிணைக் குறிப்போடு சுட்ட விரும்பும்போது சிலது என்று குறிப்பிடவும் இயலாது அது பன்மைப் பொருளதாதலின். அதனால் சிலதுகள் என்றனர் போலும். சிலது, சிலதுகள் ஆகிய இவ் விரண்டின் தோற்றம் எதுவாயினும் அவை வழூஉச் சொற்களே.

6.12 முழுமை மிக்க செம்பதிப்பு.

செம்மை + பதிப்பு = செம்பதிப்பு என்றாகும். இங்குச் செம்மை என்பதற்கு முழுமை என்று பொருள் கொள்ளல் தகும்.

பொருள் பிழையின்மை, அச்சு, தாள், கட்டு போன்ற பல வகையானும் முழுமை வாய்ந்த பதிப்பு என அதுவே பொருள் தர வல்லதாயிருத்தலின், அதற்கும் மேல் முழுமை மிக்க என்று குறிப்பிடுவது மிகையே. அக் கருத்தை வெளியிடுபவர் செம்பதிப்பு என்பதன் பொருளை அறியாமையாலோ அல்லது அதற்கு மேலும் அதைச் சிறப்பிக்க வேண்டு மென்னும் ஆவலாலோ அம் மிகைச் சொற்களை ஆண்டிருப்பார்.

6.13 கடன் கொண்டான் நெஞ்சம்

தப்பவோ, தவறவோ, பிழைக்கவோ, தட்டவோ முடியாததாய்ச் செய்தே தீர வேண்டிய பொறுப்புணர்வே கடன் எனப்படுவது. தனி மொழியாயினும், தொடர் மொழியாயினும், சொற் றொடரே யாயினும் அவற்றை ஆள்வோர், ஆளப்படு மிடம், ஆளப்படுங் காலம், சூழ்நிலை ஆகியவற்றுக் கேற்பவே பொருளுணர்த்த வல்லன. 'கடன் கொண்டான் நெஞ்சம்'' எனும் இவ் வுவமைத் தொடர் தானே ஏற்பட்டதன்றித் தெரிந்து வாங்கியோ, ஏற்றோ, கொண்ட ஒன்றை, உரிய காலத்தில் திரும்பச் செய்யவோ கொடுக்கவோ இயலாத நிலையில், மக்கட் டன்மை முழுமையாக வாய்க்கப் பெற்ற ஒருவரின் உள்ளம் கலங்கும் தன்மை மக்களின் இயல்பாக இருந்த காலச் சூழ்நிலைக்குப் பொருத்த மானதாகும்.

6.14 ...உங்கள் வீட்டைச் சுத்த மாக்கும்; சுகாதார மாக்கும்.

ஒரு கழுவு பொருளை, விற்கச் செய்யப்படும் விளம்பரம் இவ்வாறு கூறுகிறது. அப் பொருள் வீட்டையே சுத்தமாக்கும் என்பது பொருளா? அதைப் போல் அது வீட்டையே சுகாதார மாக்கும் என்பது பொருளா? அது தன்னைப் பயன்படுத்து வோரின் வீட்டைச் சுகாதாரமாகவே ஆக்கிவிடுமோ? அஃதாவது அவ் வீட்டையே சுகாதாரமாக ஆக்கிவிடுமோ? அவ்வாறே

வீட்டை சுத்தம் என்பதாக ஆக்குமா? சுத்தமுடையதாகவும், சுகாதாரத்துக்கு ஏற்றதாகவும், உரியதாகவும் ஆக்கும் என்பனவே அவ்வாறு கூறப்படுகின்றன.

6.15 பிள்ளைத் தாய்ச்சி

தாய் என்னும் சொல் பெண்பாற் சொல்லே; ஆயினும், அதன் பெண் பான்மை வெளிப்படத் தோன்ற வேண்டும் என்னும் வேட்கையால் அது தாய்ச்சி எனப்பட்டது. ஆய்ச்சி, ஆச்சி என்பன காண்க. பிள்ளைத் தாய்ச்சி என்பது பிள்ளையின்தாய் எனப் பொருள் படுகிறது. தாய், தாய்ச்சி என்பன பிள்ளையோடு தொடர்புடையவைகளே யாதலின் பிள்ளை எனத் தனியேயும் குறிப்பிட வேண்டுமா எனில் பிற பிள்ளைகள் வெளியில் உள்ளன ராதலின் குறிப்பிட வேண்டா. இப் பிள்ளை அகத்தே உள்ள தாதலின் தனியேயும் குறிப்பிடாவிடில் தெரியாதே. வயிற்றின் அகத்தில் பிள்ளையை உடைய தாயரை மட்டும் பிள்ளைத் தாய்ச்சி எனல் தக்கதே.

6.16 வகுப்புகளை எடுக்கக் கூடாது.

ஆசிரியர்கள் வகுப்புகளுக்குச் சென்று மாணவர்க்குக் கல்வி கற்பிக்கக் கூடாது என்னும் பொருளிலேயே, வகுப்புகளை எடுக்கக்கூடாது என்பதை ஆள்கின்றனர். ஆங்கில மொழி மரபைத் தமிழில் அப்படியே ஆளும் கசட்டுச் செயலே இது. மற்று, வகுப்புகளை வெட்டியோ, பெயர்த்தோ எடுக்கக் கூடாது என்னும் பொருளில் இதனை யாரும் ஆளமாட்டார்கள் என்று எண்ணுகிறோம்.

6.17 மருத்துவ மாணவர்கள்; மாணவ மருத்துவர்கள். ஆசிரிய மாணவர்கள்; மாணவ ஆசிரியர்கள்.

மருத்துவ மாணவர் என்பதற்கு மருத்துவம் செய்யும் மாணவர் என்றும், மருத்துவம் பயிலும் (அ) கற்கும் மாணவர் என்றும் பொருள் கொள்ளலாம். அவ்வாறே ஆசிரிய மாணவர்

என்பதற்கு ஆசிரியராக இருக்கும் மாணவர் என்றும், ஆசிரியப் பயிற்சி பெறும் மாணவர் என்றும் பொருள் கொள்ளலாம். மாணவராயிருப்பவர் மருத்துவம் செய்வதும், ஆசிரியப் பயிற்சி பெறுபவர் கற்பிப்பதும் பொதுவாக ஏற்கத் தகுவன அல்ல.

மாணவ மருத்துவர் என்பதற்கு மருத்துவப் படிப்பை முடித்துச் செய்முறையைப் பயிலும் நிலையில் உள்ளவர் என்பது பொருள். இவர் ஒரு தேர்ந்த மருத்துவரின் மேற்பார்வையில் மருத்துவமும் செய்யலாம். அவ்வாறே மாணவ ஆசிரியர் என்பது போதுமான அளவு ஆசிரியப் பயிற்சி பெற்றுள்ள ஒருவர், தம் பேராசிரியரின் மேற்பார்வையில் கற்பித்தலும் ஏற்கத் தக்கதே.

6.18 எங்க வீட்டுக்கு வந்திருந்த திருடன் தொழிலுக்குப் புதுசுன்னு நிச்சயமா தெரியுது.

எங்கள் வீட்டுக்கு வந்த திருடன் என்றால் என்ன குறை நேரும்? வந்திருந்த என்று ஏன் கூற வேண்டும். வந்த திருடன் அங்குச் சிறிது நேரம் தங்கியிருந்தானோ? திருடனா யிருப்பினும் அவனும் உயர்திணையாகக் கருதத் தக்கவனாயின் புதியவன் என்று கூறுவது தானே சரி.

6.19 எதிலொன்றிலும்.

ஆங்கிலத்தில் தோய்ந்து அதற்கு அடியவராயினார் ஒன்று என்பதை, வேண்டாத இடங்களிலும் சேர்த்தாள்வதைச் சிறப்பாகக் கருதுகின்றனர் போலும். அதனாற்றான் எதிலும் என்று கூறுவதை விடுத்து 'எதிலொன்றிலும் என்னும் வழக்கம் காணப்படுகிறது.

6.20 அகர முதல; ஆக்கங்கருதி முதலிழக்கும்...

மேலுள்ள இரு வேறு முதல்களுக்கும் வேறுபாடு உண்டா? இருப்பதாகப் புலப்பட வில்லை. 'அ' ஒலியிலிருந்து பிற

எழுத் தொலிகள் யாவும் பிறப்பதால் அகரம் முதலாக உள்ளது. அதிலிருந்து வளர்ந்தும் திரிந்தும் தோன்றுவனவே பிற எழுத்தொலிகள். அவ்வாறே பிறகு வரும் ஆக்கம் (லாபம், வருவாய்) யாவும் முதலில் வைக்கப்படும், முதலில் (மூலதனம்) இருந்தே உண்டாகின்றன. ஆகவே இரண்டும் ஒரு பொருளனவே.

6.21 நேர்மறை, எதிர்மறை

உடன் பாடு, எதிர்மறை என்னும் வழக்கை இவ் வன்பர் நேர்மறை, எதிர்மறை எனச் சொல் நயந் தோன்றக் கூற முற்பட்டுள்ளார். மறை எனில் மறுப்பது. எதிர்மறை எதிராக மறுப்பது. நேர்மறை என்றால் நேர்ந்து மறுப்பதா, நேராக மறுப்பதா? இவர் நேர்மறை என்றதைத்தான் நம் முன்னோர் உடன்பாடு என்று கூறியுள்ளனர்.

6.22 ஆக்கப்பூர்வமாக ஏதாவது செய்தாயா?

ஆக்கப் பூர்வமாக ஏதாவது செய்தாயா? என்பதில் பூர்வம் தமிழன்று. அத் தொடர் மொழியின் பொருளைத் தருவதே உருப்படியாக என்பது. உருவம் என்பத னடியாகப் பிறந்த அச் சொல்லுக்கு உருத் தோன்றும் வண்ணம், உருவம் ஏற்படும் படி, ஒரு வடிவம், முழுமை, முற்று கிடைக்கும் வண்ணம் என்பன யாவும் அதன் பொருள்களாம்.

6.23 குடும்ப வாழ்க்கை

குடும்பம் என்பது தாய், தந்தை, உடன் பிறந்தோர், மனைவி, மக்கள் ஆகியோருடன் கூடியதே. ஆயினும் சில நேர்வுகளில், மனைவியுடன் வாழ்வதே குடும்ப வாழ்வு எனப்படுகிறது. குடும்பத்தோடு வாழ வில்லை; அம்மா சமைத்துப் போடுகிறார் என்பன போன்றவை மனைவியின் மாட்சியை அறிவிப்பனவே. இல்லறம் என்பதே தாய் தந்தையருடன் வாழ்வதைக் குறிப்பதில்லையே. மனைவியோடு இயற்றும் அறத்தைதானே

அது குறிக்கிறது. அகம், அகவாழ்வு என்பனவும், கணவன் தன் மனைவியுடன் வாழ்வதையே குறித்தல் காணலாம்.

6.24 முகபாவங்களின் மூலம் நடிப்பை வெளிப்படுத்தும் திறனைப் பெற்றுள்ளார்கள் இரு கலைஞிகளும்.

கலை வல்லானைக் கலைஞன் என்கிறோம். கலை வல்லா ளொருத்தியைக் கலைஞி எனும் மரபு இல்லை. பலர் பாலில் கலைஞர் என்பது பயன்படுத்தப் படுகிறது. அக் காலத்தில் பெண் கலை வல்லுநர் இருந்திலர் போலும் என்பதும் தவறு. விறலி, பாடினி என்போரைச் சங்க இலக்கியங்கள் பற்பல இடங்களிலும் குறிப்பிடுகின்றன. பெண்கலை வல்லாரைக் குறிக்கத் தனியே சொல் காணப்படாமையால் இக் காலத்தார் கலைஞி எனும் சொல்லை ஆக்கிக் கொண்டனர். நண்பி என்பதும் இத் தகையதே. மனைவன் என்பது விரைவில் ஆளப்பட நேரலாம்.

6.25 கி.மு. 700 ஆண்டுகளுக்கு முன் நடந்த கதை இது.

இத் தொடரில் அய்யம் ஏற்படப் போதிய வாய்ப் பிருப்ப தாகவே தோன்றுகிறது. கி.மு. 700 ஆண்டு என்றால் கி.மு. ஒன்று முதல் கி.மு. எழுநூறாம் ஆண்டு வரையுள்ள காலத்தை அது சுட்டும். அங்கு அய்யத்துக்கோ திரிபுக்கோ சிறிதும் இடம் இராது. கி.மு. 700 ஆண்டுகளுக்கு முன் என்றால் கி.மு.வில் எத்தனையோ எழுநூறு ஆண்டுகள் உள்ளனவே. அவற்றுள் இது எந்த எழுநூறு ஆண்டுகளுக்கு முன் நடந்த கதை என்னும் அய்ய வினா எழுமாயின், அதனைப் பொருந்தா வினா என எளிதில் கூறிவிட முடியுமா? அது கி.மு. ஒன்று முதல் எழுநூறு வரையுள்ள காலத்ததா? கி.மு. அய்ந்நூறு முதல் தொடங்கும் எழுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்ததா என்றாங்குக் கருதவும் இடமிருக்குமே. ஆகவே, ''கி.மு. எழுநூறா மாண்டுக்கு முன் நடந்த கதை இது'' என்பது சரியான தாகலாம்.

6.26 எண்ணெய்ப் புண்ணாக்குக் கிடங்கில் தீ பற்றிக் கொண்டது.

புண்ணாக்கு என்றால் என்ன பொருள் கிடைக்குமோ அதே பொருள்தான் எண்ணெய்ப் புண்ணாக்கு என்றாலும் கிடைக்கும். அஃது அவ் வாறாயின் புண்ணாக்கு என்று சொன்னால் போதுமே; எண்ணெய்ப் புண்ணாக்கு என்றதேன்? ஒரு வேளை புண்ணாக்கிலிருந்து எண்ணெயை வடித்தெடுக்கா நிலையில் (எண்ணெயும் புண்ணாக்கும் கலந்திருக்கும் நிலையில்) அதனை எண்ணெய்ப் புண்ணாக்கு என்பது சரியாகாதோ. எனில், இது செக்கில் உள்ளதை யன்றிக் கிடங்கில் உள்ளதைச் சுட்டுதலால் அது எண்ணெயைப் பிழிந்தும், வடித்தும் எடுத்தபின் உள்ளதையே சுட்டுவதால் அதுவெறும் பிண்ணாக்கே. ஆங்கிலத்தில் ஆயில் கேக் என்பதால் இதனை எழுதியவருக்கு அந் நோய் உள்ளது போலும்.

6.27 முந்திரிக்கொட்டை மாதிரி...

தேவை யின்றியும் முந்திக் கொண்டும் பேசுவோரை முந்திரிக் கொட்டை என்னும் வழக்கம் உண்டு. அது ஏனெனில் பிற பழங்களுக் கெல்லாம் கொட்டை உள்ளேதான் இருக்கும். முந்திரிப் பழத்துக்கு (கொடி முந்திரிக் கன்று) மட்டும் அது வெளியே இருக்கும். பழத்துக்கு உள்ளே அடங்கி யிராமல் வெளியே துருத்திக் கொண்டு இருப்பது அதன் தனித் தன்மை. ஆகவே அடங்கியிராமல் முந்திக் கொண்டு பேசும் இயல்பினரை முந்திரிக் கொட்டையோடு ஒப்பிடுகின்றனர். முந்திரிக் கொட்டை தன் உள்ளீட்டுச் சிறப்பால்தான் வெளிப்படுகிறது. அது போல் உள்ளீடாகிய அறிவுச் சிறப்பால் முந்திக் கொண்டு பேசுவோரும் உண்டு. உள்ளீ டில்லாமல் வெறும் பதர்களும் முந்திப் பேசுவதுண்டு. இவ் வுவமை பதடிப் பேச்சாளரை இகழவே

ஆளப்படும். உள்ளீட்டாளரை இகழ நேராததால் அங்கு இது பொருந்தாது.

6.28 மெரீனாவில் இராணுவ விமானங்கள் அசத்தல்

அசத்தல், அயர்தல், அயர்த்தல், அயர்வித்தல், அயரச் செய்தல் என்பன ஒன்றோடொன்று தொடர்புடையனபோல் தோன்றுகின்றன. அயர்த்தல் என்பதன் திரிபே அசத்தல் என்பது. பேச்சு வழக்கில் அடிபட்டு எம்மனோரை அசத்தும் சொல்லே அது. வியக்க வைத்தல், திடுக்கிடச் செய்தல் என்பன போன்ற பொருளிலேயே அச் சொல் ஆளப்படுவதாகக் கருதுகிறோம்.

6.29 பிரதமர் வாஜ்பாய் ஒரு நாள் பயணமாக நேற்றுச் சென்னை வந்தார்.

இச் சொற்றொடரும் ஆங்கிலக் கொள்ளை நோயால் தாக்கப் பட்டுள்ளதே. ஒரு நாள் முழுவதும் பயணம் செய்து அவர் சென்னைக்கு வந்தாரா? ஒரு நாள் தங்குவார்; ஒரு நாள் பணியாக அவர் சென்னைக்கு வந்தார்; என்பன போல ஏற்றவாறு அத் தொடர் அமைவதே தமிழ் மரபுக் கேற்றது.

6.30 முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு, இறையென்று வைக்கப்படும். *குறள் 388*

இக் குறளில் உள்ள வைக்கப்படும் என்னும் பகுதிக்குக் கருதப்படும் என்பதை விட ''நான்தான் உன் அண்ணன் என்று வைத்துக் கொள்,'' ''இதுதான் உன் வீடு என்று வைத்துக் கொள்'' என்பன போன்ற இடங்களில் உள்ள வைத்துக் கொள் என்பதற்குரிய பொருள் பொருந்துமா என்று பார்ப்போமா?

6.31 நடை பாதை ஆக்கிரமிப்பு அகற்றம்

அகற்றம் என்பது ஒரு புதிய சொல்லாட்சி; இது அகற்றல் என்பதனடியாகப் பிறந்தது. அகற்றப்படல்; நீக்கப்படல்; அகற்றப்

பட்டது; நீக்கப் பட்டது என்றாங்கு அது பொருள் கொள்ளப் படுகிறது.

6.32 மழை பெய்யலாம், மழை பெய்யக்கூடும்

பெய்யல் + ஆகும் = பெய்யலாம்
பெய்யல் + கூடும் = பெய்யக் கூடும்

பெய்யலாம் என்பதை விடப் பெய்தல் கூடும் என்பது நம்பிக்கை தருவதாகக் காணப்படும். கூடும் என்பதற்கு முடியும், இயலும் என்பன பொருள். மழை பெய்தல் நடை பெறக் கூடியது என்பதை விடப் பெய்தல் ஆம் என்பது சிறிது கூடுதல் நம்பிக்கை நல்குவது போல் தோன்ற வில்லையா?

6.33 விசாகன் தான் புதிதாகக் கட்டிய வீட்டின் காலிப் பகுதியில் கீரை விதைத்துப் பாத்தி கட்டி வளர்த்தான்.

காலிப் பகுதி, வீட்டின் ஒரு கூறா? அல்லது அது வீட்டை யொட்டி யிருந்ததா? கீரையை விதைத்த பின் பாத்தி கட்டினானா? பாத்தி கோலிய பின் கீரை விதைத்தானா? கீரையை விதைத்துப் பாத்தியைக் கட்டி எதை வளர்த்தான்?

இத்தனை அய்ய வினாக்களுக்கும் மேலுள்ள ஒரே சொற்றொடர் தாராளமாக இடமளிக்கிறதே. இப் போது அத் தொடரும் அதன் அமைப்பும் நன்கு விளங்கியிருக்குமே.

6.34 பொதுச் சிவில் சட்டம்: கழகத்தின் நிலைப்பாடு

நிலைப்பாடு என்பதும் ஒரு புதிய சொல்லாக்கமே. நிலை என்பதில் இல்லாத எப் பயன் நிலைப்பாட்டில் இருக்கிறதோ? நிலைப்பாடு என்பதாற்கிட்டும் எப் பயன் நிலையால் கிட்டாமற் போகிறதோ? இதுவும் ஆங்கில நோயின் மற்றொரு விளைவே.

6.35 கடைகளில் கொட்டிக் கிடக்கும் புடவைகள்.

பஞ்சு அங்கே கொட்டிக் கிடக்கிறது என்றோ, வைக்கோல் அங்குக் கொட்டிக் கிடக்கிறது என்றோ எவரேனும் கூறுவராயின்

அவரே கடையில் புடவைகள் கொட்டிக் கிடக்கின்றன என்பர். பேச்சிலும், எழுத்திலும், படிப்பிலும் தமிழைப் பயன்படுத்தாது புறக்கணிப்போர் மட்டுமே இப்படிப் பட்ட பிழைகளைச் செய்யும் திறம் பெறுகின்றனர்.

6.36 நறுக்குத் தெறிந்தாற் போல், காசி ஆனந்தனின் நறுக்குகள்.

புள் என்பதற்கும் நறுக்கு என்பதற்கும் நல்ல வேறுபாடுண்டு. மேற்பார்வைக்கு அவை ஒரு பொருளன போல் தோற்ற மளிக்கும். கருப்பம் புள் என்பது, விதைக் கரும்பின் கணுப் பகுதி சிதையாதபடி அதை நடுவில் அமைத்து வெட்டப்படுவது. நறுக்கு என்பது, அவ்வாறு புள் துண்டாடப் படும்போது நறுக்குப் பட்டுச் சிதறும் துணுக்கு. நறுக்கு வாயிலிட்டு மென்று துப்பக் கூடியது. புள் நட்டுப் பயிரிடக் கூடியது. இத் தகையனவே துண்டும் துணுக்கும்.

6.37 வேறென்ன சொல்ல

வேறென்ன சொல்ல வேண்டும் என்பது போன்ற இடங்களில் வரும் வேண்டும் என்பது போன்ற சொற்களைச் சில காரணங்களால் நழுவ விட்டுவிட்டுச் சொல்ல என எச்சமாகவே, முடிக்காமலேயே ஆளும் வழக்கம் நாட்டின் சில பகுதிகளில் காணப்படும் ஒருவகை நாகரிகப் போலியாகும்.

6.38 தில்லிக்கான இரயில் பெட்டிகளைக் கையாண்டது சென்னைத் துறைமுகம்

பொருள்களைக் கப்பலுக்குள் ஏற்றுதல், கப்பலிலிருந்து இறக்குதல் ஆகிய இரண்டையும் சுட்டும் ஒரே சொல்லாகப் பயன்படுத்த வந்ததே கையாளல் என்பது. இதுவும் ஒரு புதிய ஆக்கமே. கையாடல் என்பது இதனிலும் முரணியது. கையாண்டது கையாளப்பட்டது.

ஏற்றல், இறக்கல் ஆகிய இரண்டும் தனித்தனியே கூறப்படும் போது ஏற்றுமதி, இறக்குமதி என்பன ஆளப்படுகின்றன. அவ்

விரண்டையும் சேர்த்துப் பொதுவாகச் சுட்ட நேரும் போது இச்சொல் ஆளப்படுகிறது.

6.39 நாளொரு கொலை; பொழுதொரு கொள்ளை

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் என்னும் மரபுத் தொடரின் எதிரொலியாகத் தோன்றிய இதில் உள்ள நாள், பொழுது என்பன யாவை? நாள் என்பது, பகலும் இரவும் ஆகிய அறுபது நாழிகை கொண்டது. பொழுது என்பது, அந் நாளின் ஏதேனும் ஒரு கூற்றைக் குறிக்கும். பகற் பொழுது, இரவுப் பொழுது என்பன காண்க. ஒரு நாள் பொழுது என்பதில் உள்ள பொழுது என்பது, நேரம் என்னும் பொருளைத் தரும் வேறொரு சொல்லாகும்.

6.40 அவளின் எழுத்து மரணித்த மனசு - மரணித்த சுயம் - மரணித்த முகம் - மரணித்த வாழ்க்கையை மீள்கண்டு பிடிப்புச் செய்கிறது.

குதிரைக்குக் குர்ரம் என்பது தெலுங்குப் பெயர். இதை மட்டும் தெரிந்து கொண்டுள்ள ஒருத்தன், குதிரைக்குக் குர்ரம் என்று பெயரிருப்பதால் ஆனைக்கு அர்ரம்; பானைக்குப் பர்ரம் என்பனவே தெலுங்கு வடிவங்கள் என்றானாமே; அது போல் வாழ்வித்த, உண்பித்த என்பன போன்ற சில சொல் வடிவங் களைப் பார்த்த சிலர் மரணித்த, முயற்சித்த, பயிற்சித்த என வேறு பலவற்றுக்கும் அந்த முறையைத் தோற்றுவித்துக் கொண்டுள் ளனர். மீள் கண்டு பிடிப்பு என்பது ஓர் ஆங்கில நோய்க் குறியே.

6.41 கதவைச் சார்த்து

ஒரு காலத்தில் கதவு என்பது படலாக இருந்தது. அதை வாயிலில் சார்த்திதான் வைப்பர். அதனாற்றான் இன்றும் அச்சொல் வழக்கில் உள்ளது.

சார்த்து என்பதே சாத்து என்று ஆளப்படுகிறது. மூடு என்பது அதன் பொருளாகும். எளிய குடிசைகளில் கதவுகளுக்கு

மாற்றாக ஒரு வகைப் படல்கள் பயன்படுத்தப்படும். அவை சுவர் அல்லது அருகால் போன்றவற்றோடு இணைக்கப்பட்டிரா. தனியேதான் இருக்கும். வீட்டை மூட நேரும் போது தனியே உள்ள அப் படலை எடுத்து வாயிலின் புறத்தே சார்த்திவைப்பர். சிறு மணியான் கயிற்றால் கட்டுவதும் உண்டு. பிறகு படலின் ஒருபுறம் வாயிலின் புறத்தே நடப்பட்டுள்ள ஒரு காலில் இணைக்கப்பட்டுத் திறக்கவும் மூடவும் தோதாக அமைக்கப் பட்டது. அந் நிலையில் அதை மூடும் போது, மற்றொரு புறத்தை மட்டும் இழுத்து மூடிக் கட்ட வேண்டும். அந் நிலையே இப் போதுள்ள கதவின் நிலையுமாகும்.

கதவு படலாக இருந்த போது அதனை மூடலைக் குறிக்க வந்த சார்த்துதல் என்னும் சொல், கதவு நிலை வந்த பின்னும் மாறாது நிலைத்து விட்டது. சார்த்து (சாத்து), சார்ந்து இருக்கச் செய் என்பதே அதன் காரணப் பொருள். தனியே கிடக்கும் படலை வாயிலைச் சார்ந்ததாக ஆக்கு என்னும் பொருளில் அது வழக்குக்கு வந்தது.

6.42 பா.ச.க.வை எதிர் கொள்வதற்காக வரும் மக்களவைத் தேர்தலில் நாங்கள் போட்டியிடாத இடங்களில் காங்கிரசுக்கு ஆதரவு மட்டும் அளிப்போம்.

எதிர் கொள்ளுதல், எதிர் கொள்வதற்காக என்பனவற்றில் உள்ள எதிர், கொள்ளுதல் என்பனவற்றுக்கு முறையே முன்னால் அல்லது எதிரில் என்றும், ஏற்றல் என்றும் பொருள் கூறலாம். எனவே எதிர் கொள்வதற்காக என்றால், முன் சென்று ஏற்பதற்காக என்று தானே பொருள் கொள்ள முடியும். அந்தப் பொருளிலா அத் தொடர் மொழி பொருள் படுகிறது? இல்லையே. ஆகவே இது பொருந்துமா என்று எண்ணுவோமாக.

6.43 தெரிவித்துக் கொள்கிறேன். புலப்படுத்திக் கொள்கிறேன்.

தெரிவிக்கிறேன்; புலப்படுத்துகிறேன் என்பனவற்றை முறையே, தெரிவித்துக் கொள்கிறேன்; புலப்படுத்திக் கொள்கிறேன் என்பனவற்றோடு ஒப்பிட்டுச் சீர் தூக்கிப் பார்த்திடுக. பொதுக் கருத்தில் வேறுபடா அவ் வினைகள் சிறப்பு நோக்கில் வேறுபடுதலை நன்கு அறிய முடியும். தெரிவித்தல் முதலாமவரின் செயல்; தெரிவித்துக் கொள்ளல் முன்னிலையில் உள்ள வரிடமிருந்து தன்மையில் உள்ளவர் எதையோ கொள்ளல் எனப் பொருள் தோன்றுகிறது. ஆகவே முன்னிலையார், கொடுப்போராய் உயர்ந்தும் தன்மையார் கொள்வோராய்த் தாழ்ந்தும் தோன்றும் சிறப்பு அறியத் தக்கது. எனவே, தன் அடக்கமும் தற்பணிவும் தோன்றும் அருமை இங்கு அறிந்து ஆளத் தக்க தாகும்.

6.44 இதிலே உள்ள தலையங்கம் ஒரே ஒரு கேள்வியில் தான் உட்பொருள் தொக்கி நிற்கிறது.

தொக்கு என்னுஞ் சொல்லே தொக்கி எனக் கொக்கி போல் ஆக்கப்பட்டுள்ளது. தொக்கி என்பதற்கு மறைந்து என்பது பொருளாகவும் கொள்ளப்படுகிறது. அங்கே மறைவது எதுவுமின்று. அங்கு இருக்க வேண்டிய உருபு, உட்பொருள் போன்றன இல்லாமல் அவை இருந்தால் அங்கு எப் பொருள் தோன்றுமோ அப் பொருள் புலப்படுமாறு இரு சொற்கள் முதலியன சேர்தல், தொகுதல் (தொகை, தொகுத்தல் காண்க) என்பதே அங்கு உணர்த்தத் தக்கதும் உணரத் தக்கதுமா யுள்ளது.

6.45 இளித்தவாயன்; இளிச்ச வாயன்.

சிரித்தலின் எள்ளல் அல்லது இகழ்தல் வடிவமே இளித்தல். இளித்த வாயன் என்பது வழக்கில் இளிச்சவாயன் என்று திரித்து ஆளப்படுகிறது. என்னடா இளிக்கிறாய்; பல்லை இளிக்காதே என்பன காண்க. இகழ்ச்சிப் பொருள் தரும் அச் சொல் பிறகு இகழ்ச்சியை ஏற்படுத்தும் ஏமாற்றத்தையும் தழுவுவதாயிற்று. அதனால் அது ஏமாளி என்னும் பொருளையும் தரத் தொடங்கியது.

6.46 மேலும் செஞ்சி இராமச் சந்திரனிடம் இருந்து சில விளக்கங்களை.

அ. பெறவேண்டிய திருப்பதால்...

ஆ. பெறவேண்டியிருப்பதால்...

'பெற வேண்டி யிருப்பதால்' என்பதை யாரோ, எதனாலோ, வழுக்கிப் பெற வேண்டிய திருப்பதால் எனச் சொல்லிவிட்டனர். பின் அது வேறு பலராலும் ஆளப்படுவதாகவும் ஆகிவிட்டது. பெற வேண்டிய ஏதேனு மொரு பொருளை அங்குக் குறிப்பிட வேண்டுமாயின், பெற வேண்டிய தாயிருப்பதால் என்று சொல்வதே பொருத்தமாகும். பெறவேண்டியது ஒன்றுண்டு என்னுமிடத்தில் அது சரியான ஆட்சியே.

6.47 அறப்போராட்டத்திற்கான பிரச்சாரப் பொதுக் கூட்டங்களில் மக்கள் மத்தியில் எடுத்து வைக்கப்பட வேண்டிய பிரச்சினைகளை வரைமுறைப்படுத்தவும்-வகைப்படுத்திடவும் - பேச்சாளர்களுக்கு இவை பெரிதும் பயன்படும் என்று நம்புகிறேன்.

எடுத்துக் கூறல், எடுத்துக் காட்டல் என்னும் தமிழ் மரபு சாகடிக்கப்பட்டு எடுத்து வைத்தல் என்னும் அயல் மரபு புகுத்தப் பட்டுள்ளமை காண்க. வரன் முறை என்பதும் வரைமுறை என்பதும் வெவ் வேறானவை. வரை முறை என்பது வரையும் முறையைக் கூறுவதாதலின் அது இங்கு எக் காரணத்தாலும் பொருந்தாமை அறிக. வரல் முறை என்பதே வரன் முறை என்றாயிற்று. வரையறுத்தல் என்பதே வரையறை எனப்படு கின்றது. ஆகவே வரை முறையை ஒதுக்குவோமாக.

6.48 நம் தேசத்தின் நூற்றாண்டுக் காலக் கொள்கை களுக்கும்...

நூறாண்டுக்கும், நூற்றாண்டுக்கும் வழக்குப் பொருள் வேறுபாடு அறியத்தக்கது. நூறு ஆண்டுகாலக் கொள்கையா?

(பல) நூற்றாண்டு காலக் கொள்கையா? ஒரு நூறு ஆண்டுகளை மட்டும் குறிக்கத் தக்க இடத்தில் நூறு ஆண்டுகள் என்று குறித்தாலே போதும். நூற்றாண்டு என்பது கணக்கீட்டில் உள்ள ஒரு தொகையைச் சுட்டுவதால் சில நூறு ஆண்டுகளை யேனும் குறிக்கும் இடங்களில் மட்டுமே அதனை ஆளல் நன்று. ஒரு நூற்றாண்டு எனில் அது ஏற்கத் தக்கதே.

6.49 மும் முனைப் போராட்டக் குழுக்கள் அமைத்திடுவீர்.

மும் முனைப் போராட்டம் என மூன்றையும் ஒன்றாகத் தொகுத்த பிறகு அதற்கு ஒரு குழுதானே இருக்க முடியும்? அப்படிக் கருத வேண்டா; மும் முனைப் போராட்டம் என்னும் அதற்குப் பலவற்றைச் செய்வதற்காகப் பல குழுக்கள் தேவைப் படுகின்றன எனில், மும் முனைப் போராட்டக் குழுக்கள் எனலாம். மூன்று முனைகளிலும் நடைபெறும் மூன்று போராட்டங்களையும் நடத்தும் மூன்று குழுக்களையும் அது சுட்டுவதாயின், அவற்றைத் தனித் தனியே பிரித்துக் கூறி, அம் மும் முனைப் போராட்டங் களுக்குத் தேவைப்படும் குழுக்களை அமைத்திடுவீர் என்பது மிகவும் பொருத்தமாக இருக்குமா என எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

6.50 அ. அந்தப்படி நடந்து கொள்ள வில்லை

ஆ. அப்படி நடந்து கொள்ள வில்லை

மேற் காணப்படும் இரு சொற்றொடர்களிலும் முதற்கண் இடம் பெற்றுள்ள சொற்களே இங்கு விளக்கப்பட வேண்டியவை. அவ் விரு சொற்களில் அந்தப்படி என்பதை அந்த + படி எனப் பிரித்தும், அப்படி என்பதை அ + படி எனப் பகுத்தும் விளங்கிக் கொள்ள வேண்டும். படி என்பது ஈரிடங்களிலும் ஒரே பொருளைத் தருகிறது. ஆகவே அதிலும் தனியே விளக்க வேண்டியது எதுவு மில்லை. ஆகவே அ என்பதும், அந்த என்பதுமே இங்கு நம் விளக்கத்துக் குரிய வாகின்றன. அ என்னும் சுட்டெழுத்து படி

என்பதோடு சேர்ந்து அது போல், அவ் வகையில், அவ் விதத்தில் என்பன போன்ற பொருளைத் தருவதைக் காணலாம். ஆனால் அந்த என்னும் சுட்டுச் சொல், படி என்பதனோடு சேர்ந்து அந்தப்படி என்றாகி, அந்தப் படி என்னும் அளவுக் கருவியையும் சுட்டுவதைக் காணலாம். ஆனால் அப்படி என்பது அவ்வாறு படி என்னும் முகத்தலளவுக் கருவியைச் சுட்டும் வாய்ப்பு மிகக் குறைவே. எனவே பொருட் குழப்பத்தைத் தரும் அந்தப் படி என்பதைவிடக் குழப்ப மற்று, ஒரே பொருளைத் தெளிவாகச் சுட்டும் அப்படி என்பதே நல் வழக்காகத் தெரிகிறது.

6.51 அறநெறி

மேலுள்ள தொடர் மொழி, அறம் + நெறி எனப் பகுக்கப்பட்டு அறமாகிய நெறி எனப் பொருள் படுதல் காண்க. வாழ்க்கைக்கு அறமே ஒரு நெறியாக உள்ளமை உணரத் தக்கது. எனவே அறமே ஓர் உயரிய வாழ்க்கை நெறி என்பது பெறப்படும். இல்லறம் = இல்லத்திருந்தும், இல்லாளோடு கூடியும் பின்பற்றப்படும் நெறி. துறவறம் = எல்லாவற்றையும் துறந்து பின்பற்றப் படும் நெறி. மறம் = (அறத்தை) மறுப்பது. நெறி பிறழ்ந்தனவும், நெறியற்றனவு மாகிய பிறயாவும் மறம் எனப்படும்.

6.52 நுண்மாண் நுழை புலம்

புலம் இங்கு அறிவைச் சுட்டுவதாகக் கொள்வோமே. மாண் = மாட்சி, மாண்பு எனப்படலாம். மாண்புலம் மாண்புடைய அறிவு என்றாகலாம்; மாட்சிமை வாய்ந்த அறிவு என்றாலும் சரிதான். நுண் = நுட்பமான; நுழை = ஊடுறுவல், நுழைவன யாவும் நுட்பமானவை யாகா. நுட்பமானவை யாவும் நுழைந்து சென்று அறிவனவுமாகா. ஆகவே எதனையும் நுட்பமாகவும், ஊடுறுவியும் அறியும் மாண்புடைய அறிவே, நுண்மாண் நுழைபுலம் எனப்படுவதாகக் கொள்வோமா?

6.53 ஏர்க்காட்டுக் கண்காட்சி ஏகத்துக்கும் களைகட்டி யுள்ளது.

சேலம் நகருக் கருகிலுள்ள ஏர்க்காடு என்னும் மலைமேல் நடக்கும் கண் காட்சி களைகட்டியுள்ளது என்பது நன்கு புரிகிறது. களை தட்டி யுள்ளது என்று சொல்லும் வழக்கமும் சில இடங்களில் உள்ளது. கவரத் தொடங்கிவிட்டது, பொலியத் தொடங்கிவிட்டது என்பனவற்றை அவ்வாறு கூறும் வழக்கம் ஏற்பட்டுள்ளது. ஏகத்துக்கும் என்பது எப் பொருளில் ஆளப்படுகிறது என்பது விளங்கவில்லை. பொதுவாக, முழுவதுமாக, பெரும்பாலும், முற்றிலும் என்பன போன்ற பொருளில் அச் சொல் ஆளப்படுவ தாகத் தெரிகிறது. ஏகம் என்னும் வடமொழிச் சொல்லுக்கு ஒன்று என்பது பொருள். ஆனால் இங்கு அது ஒருமை என்னும் ஒன்றாதல், முழுமை எனப் பொருள் விரிந்து கண்காட்சி முழுவதும் எனப் பொருள் தருகிறது போலும்.

6.54 இன்று இங்கு நடை பெறுகின்ற அக்கிரமங்களை மாற்றி அமைக்க வேண்டுமானால்...

அ. மாற்றி அமைத்தல்
ஆ. திருத்தி அமைத்தல்
இ. அகற்றியமைத்தல்
ஈ. புதுக்கியமைத்தல்
உ. அழித்து அமைத்தல்

மாற்றி யமைத்தல் எனில் ஒன்றை நீக்கிவிட்டுப் பிறி தொன்றை அமைத்தலும், இருப்பதைத் திருத்தி அமைத்தலும், அதில் எதையேனும் நீக்கிவிட்டு எஞ்சியவற்றை நன்கமைத் தலும், இருப்பதைச் செப்பனிட்டுப் புதுப் பொலிவுடைய தாக்கி அமைத்தலும், அழிக்க வேண்டிய எதையேனுமோ, முழுவதை யுமோ அழித்து விட்டு மாற்றி அமைத்தலும் போல அது பற்பல வகைப்படும். இவ் வேறுபாட்டை நன்கு உணர்ந்து அதற்கு மிகவும் பொருத்தமான உரிய சொல்லை ஆளல் ஏற்புடைய தன்றோ?

6.55 மனுதாரரால் நியாயமான அய்யத்திற்கப்பால் நிரூபிக்கப் பட வேண்டும்.

சிறு அய்யத்திற்கும் இடமின்றி என்னும் தமிழ் மரபைக் கொன்று விட்டு, அய்யத்திற் கப்பால் எனக் கூறும் ஆங்கில மரபுக்கு இங்கு வாழ்வு தரப்பட்டுள்ளதை நாம் அறிதல் வேண்டும்.

6.56 விபச்சாரம் திரும்பப் பெற முடியாதபடி மனைவியை உடைத்து அழித்துவிடும் என்பதால் நிகழக்கூடிய வாய்ப்பின் மேல் நிரூபிக்கப்பட வேண்டும்.

மனைவியை உடைப்பதா? மனைவி கண்ணாடிப் பாண்டமா? மண் பாண்டமா? இதுவும் ஆங்கிலக் கொள்ளை நோயின் விளைவே யாம். வாய்ப்பின்மேல் நிரூபிக்கப்பட வேண்டும் என்பதும் அத்தகையதே.

6.57 அவர் 2000 தடவைக்கு மேல் கைது செய்யப் பட்டிருக்கிறார்.

தடவை என்பது நன்கு செல்வாக்குப் பெற்றுவிட்ட புதிய தமிழ்ச் சொல்லே. சிலர் இத் தகு இடங்களில் முறை என்னும் சொல்லைப் பயன்படுத்துகின்றனர். முறை என்பது வேறு இடங்களில் ஆளப்படும் சிறப்புத் தகுதியும் உடையதாக இருப்பதால், இத் தகு இடங்களுக்குத் தடவை என்பதே மிகப் பொருத்தமானது என்போமா?

6.58 வேண்டுதல் வேண்டாமை

விருப்ப முடைமையும் விருப்ப மின்மையும் (வெறுப்புடைமை யன்று) வேண்டுதல், வேண்டாமை எனப்படுகின்றன. மாந்தருக் கிருக்கத் தகும் விழுப்பங்களுள் ஒன்றாக இந் நிலை குறிக்கப் படுகிறது. பொதுவாக மாந்தர் அனைவர்க்கும் இவ் விரு பண்புகளும் இருக்கக் கூடியவையே. மாந்தர்க்கு மட்டுமே யன்றிப் பிற உயிரினங்களுக்கும் இவை உண்டு. ஆயினும் அவை எந்த அளவு குறைவாக உள்ளனவோ அந்த அளவு அவர் மேம்பட்டவராவார். முற்றிலும் இல்லாதவர் முற்றிலும்

மேம்பட்டவராவார். பொதுவர், நடுவர், மேலோர், தலைவர், ஆள்வோர் போன்றோர் இப் பண்புகளிலிருந்து நீங்கி யிருக்க வேண்டுமென்று கருதுகின்றனர் அறிஞர். திருவள்ளுவர் ''வேண்டுதல் வேண்டாமை யிலான்'' எனக் கூறல் காண்க.

6.59 என்னைக் கட்டிக் கொள்கிறாயா?

நாட்டகத்தே உள்ள எளிய மக்கள், நீ என்னை மணந்து கொள்கிறாயா? என்பதை நீ என்னைக் கட்டிக் கொள்கிறாயா? என்னும் வழக்கம் உண்டு. தலைவனும் தலைவியுமாக வாழ்ந்து இல்லறம் நடத்த முடிவு செய்து கொண்ட ஓர் ஆணும் பெண்ணும், பலரும் அறியும்படி ஒருவரை யொருவர் கட்டித் தழுவிக் கொள்வதன் வாயிலாகத் தம் முடிவுக்குத் தம் சமூகச் சான்றோரின் ஒப்புதலைப் பெற்றிருப்பரோ? அதனாற்றான் மணத்தல் கட்டிக் கொள்ளலாயிற்றோ?

6.60 கன்ஃபூசியசின் கருத்துப்படி 'சென்' 'லி' ஆகியவையே இரு முக்கிய நற்பண்புகளாகும். உயர்ந்தோர் இவற்றுக் கேற்ப ஒழுகுவர். 'சென்' என்பது சில வேளை 'அன்பு' என மொழி பெயர்க்கப்படுகிறது. ஆனால் அதைப் பிறரிடம் காட்டும் 'அன்பு கூர்ந்த அக்கறை' என விளக்குதல் நன்று.

மேலுள்ள அன்பு கூர்ந்த அக்கறை என்பதற்குத் தமிழ்ச் சான்றோர் வேணவா என்று உரைத்துள்ளனர். வேட்கை என்பதும் அவா என்பதும் சேர்ந்து வேணவா என்றாயிற்று. வேட்கை என்றால் விருப்பம்; அவா என்றால் அவாவுதல்; அஃதாவது, விரும்பியதை அடைய முயலுதல். ஆகவே வெறும் விருப்பம் மட்டுமே யன்றி அதனை அடைய முயலும் தன்மையையும் சுட்ட வேணவா என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது. அது போன்ற தொரு சொல்லமைப்பே மேலே காட்டப்பட்டுள்ளது.

6.61 அரசு அலுவலகங்கள் 9வது நாளாக வெறிச் சோடியது

9வது நாளாக என்பதை ஓரின மாக்கல் என்னும் விதிப்படி எண்ணும் எழுத்தும் கூடிய அதனை, முற்றிலும் எழுத்து வடிவ மாக்கினால் ஒன்பது வது என்றுதானே ஆகும்? அது சரியா? ஒன்பதாவது என்று சொல்ல வேண்டுமாயின் 9ஆவது என்று தானே எழுத வேண்டும். ஆவது ஆகாதது என்னாமல் 9-ஆம் என்னலே சிறந்தது.

அரசு அலுவலகங்கள் வெறிச் சோடிக் கிடந்தன என்பது சரியா? அவை வெறிச் சோடின என்பது சரியா? அலுவலகங்கள் ஓடியதா? ஓடியனவா?

6.62 உவகையும் உகவையும் எழுத்து இடம் மாறியதால் விளைந்த பொருள் மாற்றம்; அல்லது பொருள் மாற்றத்தை விளைக்கும் எழுத்தின் இட மாற்றம்.

உவகை என்பதே பண்டைச் சொல். உகவை என்பது நாத் தடுமாற்றத்தால் பிறந்து செல்வாக்குப் பெற்றிருக்கும் போலிச் சொல் போல் தோன்றுகிறது. விரும்பிய, ஏற்ற, தக்க என்னும் பொருள்களில் உகந்த என்றொரு சொல் நடமாடுகிறது. அதுவும் உவந்த என்பதன் போலிதானோ?

6.63 அ. திருநள்ளாறிலிருந்து
ஆ. திருநள்ளாற்றிலிருந்து

ஆறு மணல், ஆற்றுமணல், ஆத்து மணல் என்பனவற்றை நோக்குக. ஆத்து மணல் பேச்சு வழக்கு; ஏனைய இரண்டும் எண்ணி ஆறு மணல் என்றும், ஆற்றிலிருந்து கிடைத்த மணல் என்றும் பொருள் படுவனவாம். ஒற்று இரட்டித்து வரும் இடங் களில் நாம் கைவைத்துக் கெடுக்க வேண்டுமா? காடு+பூனை = காட்டுப்பூனை; வீடு+வசதி = வீட்டு வசதி; நாடு + புறம் = நாட்டுப்புறம்; நூறு + ஆண்டு = நூற்றாண்டு என்பனவும் காண்க.

6.64 அரிசிகளைதல்

சோறு ஆக்குவதற் குரிய அரிசியை நீர் விட்டு அலசித் தூய்மை செய்தலை அரிசி களைதல் என்கின்றனர். அரிசியி லிருக்கக் கூடிய உமி, அழுக்கு, தூசு போன்றவற்றை நீக்கு வதையே அவ் வாறு குறிக்கின்றனர். களைதல் எனில் நீக்குதல் தானே. வயலிலிருக்கும் பயிரிலிருந்து களையப்படுவதுதானே களை எனப்படுகிறது.

6.65 மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தலை காய சிகிச்சை பிரிவு?

தொலைக் காட்சிகளில் செய்திகளைப் படிப்போரும் பிறரும் வலி மிகு மிடங்களிலுள்ள எழுத்துகளை ஒலிப்பதில்லை. சான்றாக,

தொலை காட்சி
தூக்கு தண்டனை
சிறை சாலை

என்பன காண்க. அந்த வகையிற்றான் தலை காய என்றும் சொல்லப்பட்டது. மருத்துவ மனையுடன் சேர்த்துச் சொல்லப் பட்டதால் அது தலையில் ஏற்பட்ட புண் அல்லது காயம் என்பதைக் குறிக்குமோ என நம்மை அய்யுற வைக்கிறது. மருத்துவ மனை பற்றிய குறிப்பு அங்குத் தரப்பட வில்லை யாயின், 'தலை ஈரம் காய', 'தலை ஈரம் உலர' என்றும் பொருள் கொள்ள நேராதா? எண்ணுக. சிகிச்சை பிரிவு என்பதும் அத் தகையதே. இக் காலத்தார் பலர் புண் என்னுஞ் சொல்லைப் பயன்படுத்தக் கூசிக் காயம் என்னும் சொல்லையே ஆளும் வழக்க முடையராயினர்.

6.66 அப்படி இப்படி,

படி என்பதற்குப் பற்பல பொருள்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று படிதல் என்பதன் முதனிலை. அஃதாவது படி என்பதே படிதல் என்றாயிற்று. புழுதி படிதல், மாசு படிதல் என்பன காண்க.

படிதல் என்பதன் பிறவினை படித்தல். கருத்தை மனதில் படியச் செய்தல் என்பது அதன் பொருள். அப்படி, இப்படி அதன் படி, சொற்படி, எண்ணப்படி என்பன யாவும் அதன் பல்வேறு உருவ வளர்ச்சியே. உலகம் என்னும் போதும் படிவு என்பதன் சுருக்கமாகிய படி என்பது வந்திருக்கலாம். முகத்தலளவைக் கருவிக்குப் படி எனப் பெயருண்டு. படி = நகல் என்பது மிதுவே.

6.67 படகேறி ஆலயத்துக்கு வரும் அத்தனைப் பேருக்கும் வாழை மட்டையிலான இலையில், நாள் முழுதும் உணவு போடப்படுகிறது.

வாழை மட்டை யினாலான என்பதையே இவர், வாழை மட்டையிலான என எழுதிவிட்டார். 'ஆல்' என்னும் உருபுக்கு மாறாக இவர், இல் என்னும் உருபைச் சேர்த்து எழுதி விட்டார். ஆல் எனும் மூன்றாம் வேற்றுமை உருபு வாழை மட்டையால் ஆக்கப்பட்ட எனப் பொருள் தரும். 'இல்' என்னும் ஏழாம் வேற்றுமை உருபு வாழை மட்டையின் கண் ஆக்கப்பட்ட எனப் பொருள் தரும். வாழை மட்டை யினாலானது இலையாகுமா? அஃது ஒருண்கலன் தானே. உணவுத் தட்டுபோல் உண்ணப் பயன்படும் ஒரு கலம். அதனை இலை என்பது பொருந்துமா?

6.68 அ. இப்படிச் சொல்லப்படுபவர்கள் ஒவ்வொரு வருடைய மேதைமையைப் பற்றி எவ்விதமான சந்தேகத்திற்கும் இடம் கிடையாது.

ஆ. இப்படிச் சொல்லப்படும், ஒவ்வொருவருடைய மேதைமையைப் பற்றி எவ் விதமான சந்தேகத் திற்கும் இடம் கிடையாது.

இ. இப்படிச் சொல்லப்படும் ஒவ்வொருவரின் மேதைமையிலும் எவ்வகை அய்யத்திற்கும் இடமில்லை.

மேலுள்ள மூன்று சொற் றொடர்களையும் ஒப்பிட்டு **அறிக.**

6.69 என்னாயிற்று

என் + ஆயிற்று = என்னாயிற்று.

என்ன + ஆயிற்று = என்னவாயிற்று.

என், என்ன என்பன இரண்டும் ஒரே பொருளுணர்த்தும் இரு வேறு சொற்களே. அவை யிரண்டுக்கும் பொருள் வேற்றுமை இல்லை. என் என்பதன் மறுவடிவமே என்ன என்பது எனினும், இழுக்காகாது.

6.70 தமிழ் மொழியை இத்தனை லாகவமாகக் கருத்து களைச் சொல்லவும் அதன் பேச்சு வடிவத்தில் இத்தனை ஏற்ற இறக்கங்களும் வின்னியாசங்களும் காட்டவும் முடியும் என்பதை என்னால் வியக்கவும் முடிந்தது.

லாகவமா? லாவகமா? எது சரி? க, வ ஆகிய இரு எழுத்துகளும் தம் இடத்தை மாற்றிக் கொண்டு விளையாடு கின்றன. இது தமிழ்ச் சொல்லன்று. அதேபோல் வின்னியாசங்கள் என்பதும் முற்றிலும் தமிழில் அறிமுகமே இல்லாத கலப்புச் சொல்லே. தமிழர் யாருக்கும் விளங்காத சொற்களை ஆள்வதில் இத் தகைய எழுத்தாளர்கள் தம் ஆற்றலைப் பயன்படுத்து கின்றனர். இத் தகைய பிற மொழிக் கலப்படங்களைச் செய்வதிலும் இத் தமிழ் நடையிலும் குழப்பமே காணப்படுகிறது. இக் கலப்புச் சொற்களை ஆண்டே இத் தொடரைப் பின் வருமாறு அமைத்துப் பார்ப்போமா?

தமிழ் மொழியை, இவ்வளவு லாவகமாகக் கருத்துகளைச் சொல்லவும், பேச்சு வழக்கில் இவ்வளவு ஏற்ற இறக்கங்களையும், வின்னியாசங்களையும் காட்டவும் பயன்படுத்த முடியும் என்பதைக் கண்டு (அ) அறிந்து என்னால் வியக்கவும் முடிந்தது.

பழைய உடையைச் சீர் செய்து ஆக்கப்பட்ட புத்தாடையே இது. உள்ளீட்டில் கருத்தைச் செலுத்து மளவு அதனைப் பொதியப்

பயன்படுத்தும் பொருளாகிய மொழியிலும் இத்தகையோர், கருத்துச் செலுத்துவதை வேண்டுமென்றே மறுக்கின்றனர் போலும்.

6.71 கடவுளிடமும் குருவினிடமும் செலுத்தப்படும் அன்பு பக்தி என்றும், கணவனிடம் காட்டும் அன்பு காதல் என்றும், குழந்தையிடம் செலுத்தும் அன்பு ஆசை என்றும் கூறப்படும்.

அன்பு, பக்தி, காதல், ஆசை என்பன போன்றே நட்பு, தோழமை, பற்று, அருள் என வேறு பல சொற்களும் உள. அவை யாவும் ஒன்றன் பல் வகைத் தோற்றங்களைக் குறிக்கின்றன வாதலால், ஒரு பொருளையே தரும் பல வகைச் சொற்களா? பொதுவகையால் இவை யாவும் ஒரே பொருளைக் குறிப்பன போல் தோன்றினாலும் நுணுகிப் பார்த்தால் அப் பொருள்களிடையே காணப்படும் வேறுபாடுகள் புலப்படாமற் போகா. காதலும் அன்பும் ஒன்று தானா? திருவள்ளுவர் அன்புக்கும் அருளுக்குமே வேறுபாடு காட்டுகிறாரே. பக்திக்கும், ஆசைக்கும் வேறுபாடே இல்லையா? நுணுகி நோக்கின் அவைகளுக்கிடையே சிறப்பு வகையில் வேறுபாடு உள்ளமை தெரியும். அது உண்மையாயின் இவையும் இவை போல்வன பிறவும் வெவ்வேறு பொருள்களைக் குறிக்கும் வெவ்வேறு சொற்களே யாம்.

6.72 கண்ணோட்டம்

கண்ணோட்டம் என்பது இரக்கம் என்னும் பொருளில் தான் வழங்கிவந்தது. இன்று அது பார்வை (அ) நோட்ட மிடல் என்னும் பொருளிலும் ஆளப்படுகிறது. கண்+ஓட்டம் = கண்ணோட்டம். ஓட்டம், ஓடல் என்பன உருகி அல்லது இளகி ஓடல் எனப் பொருள் படும். கண்+நோட்டம் = கண்ணோட்டம் என்பதில் நோட்டம் என்பது பார்வையிடல்; நோட்டம் பார்த்தல் என்னும்

பொருளைத் தரும். மாண்டார் என்பது மாள்+ட்+ஆர் = மாண்டார் = செத்தார், மாண் + ட் + ஆர் = மாண்டார் = மாண்புற்றார் என இருவேறு சொற்களாகி இருவேறு பொருள்களைத் தருதல் போல் இதுவும் இருவேறு சொற்களாய் இருவேறு பொருள்படல் காண்க.

6.73 பழமையும் புதுமையும்

பழமையும் முதன் முதலில் புதுமையாகத் தானே தோன்றி யிருக்க முடியும். அப் போது பழமை எனும் எண்ணமோ சொல்லோ கூடத் தோன்றியிருக்க முடியாதே. வெறுமை யிலிருந்து எதுவும் தோன்ற முடியாது. ஆகவே புதுமை எனப்படுவன யாவும் பழமையின் மறுதோற்றங்களே. பழமை யிலிருந்து புதுமை வந்ததா? புதுமையிலிருந்து பழமை வந்ததா? எனவே நிலைப் பொருள் ஒன்றின் மறு தோற்றங்களே யாவும். அந் நிலைப் பொருள்தான் இயற்கை எனப்படுகிறது. அவ் வியற்கையே கடவுள் முதலிய எல்லாக் கருத்துகளுக்கும் தாய்.

அந்த இயற்கைதான் கடவுள்; இறை; பரம்பொருள் என்போரும் உள்ளனர். அங்ஙனமாயின் அப் பொருளுக்கு அறிவு உண்டா? அன்பு உண்டா? இன்ப துன்ப முண்டா? இயற்கை அல்லது இறையிலிருந்து தோன்றியவற்றுக்கு அறிவு, அன்பு போன்றன இருக்கின்றன. ஆயினும் அந்தப் பரம் பொருளுக்கு அவை உண்டா? அதனாற்றான் திருவள்ளுவர் வேண்டுதல் வேண்டாமை இலான் என்று அதனைக் கூறினாரோ? இது உண்மையானால் போற்றிகளும், வழிபாடுகளும், தொழுகைகளும், பிரார்த்தனைகளும் ஏன்?

6.74 ஒன்றரை மணி நேரங்கள், ஒன்றரை கி.மீட்டர்கள்.

ஒன்றரை, ஒருமையா பன்மையா? ஒன்றுக்கு மேற்பட்டனவெல்லாம் பன்மையா? இரண்டும் அதற்கு மேற்பட்டனவும்

பன்மையா? ஒன்றுக்கு மேற்பட்டது என்றால் அந்த மேற்பட்டது முழுமை வாய்ந்ததாகத் தானே இருக்க முடியும். மேற்பட்டது என்பது முழுமையடையாததைக் குறிக்குமா? கால், அரை போன்றன ஒருமையா, பன்மையா? கால் அதனளவில் முழுமை தானே. அந்த வகையில் ஒருமை.

பன்மை என்னும் போது ஒருமை எந்த அளவு உள்ளதோ, அதே அளவு உள்ள மற்றொன்று தானே பன்மை எனப்பட முடியும்?

ஒன்றும் ஒன்றும் தானே பன்மை. ஒன்றும் காலும் இரு ஒருமைகளே; பன்மைவேறு; இரு ஒருமைகள் வேறு.

ஒரு முழுப் பறவையும் மற்றொரு பறவையின் இறகும் பன்மையா? ஒரு வகை அல்லது ஓரினப் பொருளின் இரு முழுமைகளே பன்மை எனப்படும். வேடனும் நாயும் வந்தனர் என்பது போன்றதே ஒன்றரை என்பதும்.

○○○

7. தொடரியல்

வாக்கியம் எனப் பிற மொழிச் சொல்லால் குறிக்கப்படும் சொற் றொடரில் உள்ளதும், எழுதுவோர் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியதும் ஆகிய சிலவற்றை ஆராய்வதால் இது தொடரியல் எனும் பெயர் பெற்றது. தமிழ் உரைநடை எழுதுவோர் பலர் ''எப்படியும் எழுதலாம்; இதில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது எதுவுமில்லை'' எனும் கருத்தில் எப்படி எப்படியோ எழுதிக் குவிக்கின்றனர். உரிய முறையில் தொடர்கள் அமைக்கப் படாவிடின் பொருட் குழப்பமும், சிக்கலும் ஏற்பட்டு மொழியின் பயனைக் கெடுத்துவிடும். உரிய சொற்களைத் தேர்ந்தெடுத்து உரிய முறையில் வரிசைப் படுத்திச் சொற் றொடர்களை அமைக்க வேண்டும். இடைச் சொல், உரிச் சொல் ஆகியவற்றைத் தக்கவாறு பயன்படுத்தத் தவறக் கூடாது. எழுவாய் பயனிலைகளின் இலக்கணம் திறம்பாமல் பார்த்துக் கொள்ளவும் வேண்டும். எச்சங்கள் தம் பயனை விளைப்பதில் முட்டுப்பாடு எதுவும் ஏற்படாமலும் இருக்க வேண்டும். சொற் றொடருக் கெனத் தனி இலக்கணம் எதுவும் இல்லை. மொழித் திறம் வாய்ந்த நல்ல தமிழ் அறிஞர்கள் எழுதிய உரை நடை நூல்களைப் படிப்போர் தடுமாற்றமோ, கசடோ அற்ற செந்தமிழ் உரை நடையை எழுதும் திறம் பெறுவர். இவ் வியலில் நடை முறையில் ஏற்படும் சில உரைநடைக் கசடுகளும், குறைகளும் எடுத்துக்காட்டி விளக்கப் படுகின்றன. அவற்றைப் பொறுமை யாகப் படித்து விளங்கி அகத்தில் அமைத்துக் கொள்வோர் நல்ல உரைநடை எழுதும் திறம் பெறுவர் என்பது எமது வேணவா.

7.1 புஷ்சுக்கு பிளேர் திடீர் எதிர்ப்பு.

பிற மொழிச் சொற்களைத் தவிர்த்தல் மேலானது. தமிழ் மொழியில் போதிய அறிவு இல்லாதோரும், பிறமொழிக் கலப்பை விரும்புவோரும் பிற மொழிச் சொற்களை ஆள்வர். ஒரு பிற மொழிச் சொல்லுக்கு வாழ்வளிக்கும் ஒருவர், தமிழ் மொழிச் சொல் ஒன்றைச் சாகடிக்கிறார் என்பது உண்மை. தமிழில் இல்லாத கருத்துகளையும், செயல்களையும் தமிழ் ஒலிமுறைக் கேற்ப மாற்றி அமைக்கவேண்டும் எனத் தொல் காப்பியரே வழிகாட்டியுள்ளார். தமிழ் என்பதை ஆங்கிலத்தில் 'டமில்' என்று குறித்தல் அறிக. அதுதான் சரியான முறை. பிற மொழிச் சொற்களைத் தவிர்த்தல் போன்றே, தமிழில் இல்லாத பிறமொழி எழுத்தொலிகளையும் தவிர்த்தலே முறை. பெயர்களை மொழி பெயர்க்க முடியாதே. ஆதலால் பிறமொழிப் பெயர்ச் சொற்களைத் தமிழில் உள்ள ஓரளவேனும் பொருத்தமான எழுத்துகளால் குறிப்பிடுவதே தக்கது. புஷ் என்பதிலுள்ள ஷ் என்னும் கிரந்த எழுத்தை ஃச் என்றவாறு குறிக்கலாம். புஷ்சுக்கு என்பது தவறு; புஷ்ஷுக்கு என்பதே சரியானது.

7.2 விமானத்தில் இருந்து கீழே விழுந்து இறந்தது ஒன்றி ரண்டல்ல. 100 பேர் வரை இப்படி விழுந்துள்ளனர்.

எப்படிப்பட்டவர்க ளெல்லாம் ஏடுகளில் எழுத வந்து விட்டார்கள் என்பதை மேற்காணப்படும் சொற்றொடரால் நன்கு அறியலாம். விமானத்திலிருந்து விழுந்து இறந்த நூறு பேரை இந்த நண்பர், ஏதோ அஃறிணைப் பொருள்கள் போல் 'இறந்தது' என்றும், 'ஒன்றிரண்டல்ல' என்றும் எழுதியுள்ளார். 'இறந்தோர் ஒருவரிருவ ரல்லர்' என எழுதத் தெரியாதவரா இவர்?

7.3 தூங்கிக் கொண்டிருந்த மசீதை அரிவாளால் கழுத்து பின்பும், தொடை, வயிற்றுப் பகுதி மற்றும் உடலில்

சில இடங்களில் சரமாரியாக வெட்டிவிட்டுத் தப்பி மறைவாகிவிட்டனர்.

இத் தொடரில் மூன்று இடங்களில் குறைகள் காணப் படுகின்றன. பிடர் அல்லது பிடரி என்று சொல்லப் படுவதை அறியாத இந்த எழுத்தாளர் கழுத்துப் பின்பும் என்று எழுதி விட்டார். அதையும் கழுத்தின் பின்புறம் என்று எழுதவும் அவருக்குத் தெரியவில்லை. உடலில் சில இடங்களில் என்பதை உடலின் சில இடங்களில் என்று எழுதியிருக்கலாம். பிடர் முதலியனவும் உடலின் சில இடங்கள் என்பதில் அடங்குவனவே. ஆதலால் இங்கு உடலின் வேறு சில இடங்களில் என்று எழுதியிருக்க வேண்டும். வேறு சில இடங்களிலும் என உம் என்னும் இடைச் சொல்லைச் சேர்த்து எழுதியிருந்தால் அது முன் கூறிய உறுப்புகளையும் தழுவிக் கொள்ளுமே. அவர், மறைந்து விட்டாரா? மறைவாக ஆகிவிட்டாரா?

7.4 முன்பு விடுபட்டவர்கள் எல்லாம் வாரிசுகளாக ஏற்கப்பட்டனர். அவர்களாவன : அ. பெண்கள்...

முன்பு விடுபட்டவர்கள் உயர்திணையா ராதலின் எல்லாரும் என்று கூறலாமே. அவர்கள் உயர்திணை; ஆவன அஃறிணை. இவர் இரு திணைகளையும் சுட்டும் சொற்களைச் சேர்த்துக் கட்டி இடர் படுத்துவது முறையா? அவர்களாவார் என்றால் சரியா யிருக்குமா? அவர்கள்: அப்பெண்கள்... என்றும் எழுதலாமே.

7.5 அதை மீறி விசுவரூபிக்கும் வேறுலகம் உண்டா என்ன?

விசுவரூப மெடுக்கும் எனும் மரபைத் தள்ளிவிட்டு விசுவரூபிக்கும் எனும் புதுத் தொடர் மொழியைப் படைத்துக் கொண்டுள்ளார் போலும் இவர். இத் தொடரில், உண்டா? என்ன? என இரு வினாச் சொற்களை அடுக்கிக் கூறியுள்ளார். இப்படிக்

கூறுவது மரபுப் பிழையன்று. இவ் வழக்கம் நடை முறையில் உள்ளதுதான். உண்டா? என்ன? என்னும் இரட்டை வினாக்களை வினா அடுக்கு என்னலாமா? அல்லது இரண்டாவதை உரையசை என்று கூறலாமா? விசுவம் தமிழன்று.

7.6 ஆயிரம் அலைகள் காலைக் கவிழ்க்கும் சமுத்திரத்தின் நடுவில் ஒற்றைத் தவமிருக்கும் கன்னியா குமரியை...

கடல், பெருங்கடல், மாக்கடல் என்பன போன்ற சொற்க ளிருக்கவும் இவ் வன்பர், சமுத்திரத்துக்கு வாழ்வளிக்க விரும்பி யுள்ளார். அலைகள் காலைக் கவிழ்ப்பது எப்படி? காலை ஆழ்த்த முடியும்; காலடியைப் பரிக்க முடியும்; கவிழ்க்க முடியுமா? தாம் ஆளும் சொல்லின் பொருளை நன்கு ஆராயாது ஆண்டுவிட்டா ரிவர். ஒற்றைத் தவம் என்பதை இவர் வேறு இடத்தில் விளக்கி யிருப்பார் போலும்.

7.7 ''நூர்'' ஆண்டு காலம் வாழ்க; மருத்துவம் செய்து கொண்ட பாக்கித்தானக் குழந்தையின் பெயர் ''நூர்''

பாக்கித்தானத்திலிருந்து இந்தியாவுக்கு வந்து மருத்துவம் செய்து கொண்டு நல மடைந்த 'நூர்' என்னும் பெயருடைய ஒரு குழந்தையை, வாழ்த்த விரும்பிய நம் நண்பரின் நல் லெண்ணத்தை நாமும் பாராட்டுகிறோம். ஆனால், அதற்காக நூறு என்பதை நூர் என்றாக்கிச் சொல் விளையாட்டு நிகழ்த்துவதன் வாயிலாகத் தமிழ்ச் சொல் லொன்றைச் சிதைக்க வேண்டுமோ?

7.8 கந்து வட்டிக்காரர்களின் தொல்லை காரணமாக அவர் தற்கொலை செய்து கொண்டார் என்று பலவாறு செய்திகள் வெளியாகின.

ஒரே ஒரு செய்தியை மட்டும் தெரிவித்துவிட்டு 'என்று பலவாறு செய்திகள்', என்பது எப்படிச் சரியாக இருக்க முடியும்?

சிலவற்றை யேனும் கூறியிருந்தாற்றானே பலவாறு என்பதைப் பயன்படுத்த முடியும். அல்லது 'என்பது போன்ற பலவாறான செய்திகளை' என்றாவது எழுதி யிருக்க வேண்டும். வெளியாயின என்பதை வெளியாகின என்பதும் சரியன்று.

7.9 தன் இல்லத்தில் அதிகப்படியான அளவில் சுக போகங்கள் இல்லாமல் இருக்கும்படிச் செய்ய வேண்டும்.

அதிக அளவில் என்றால் போதாதா? அதிகப் படியான அளவில் என்பதால் பெறப்படும் சிறப்புப் பயன் ஏதேனு முண்டோ? இல்லாமல் செய்ய வேண்டும் என்பதற்கும், இல்லாமல் இருக்கும் படிச் செய்ய வேண்டும் என்பதற்கும், சொல்லழகு ஏதேனுமிருக்கக் கூடும் என்பது தவிர வேறு பயணுண்டா? இவை வழுக்கள் எனப்பட மாட்டா. எண்ணிப்பார்க்க வேண்டிய மிகைகளே.

7.10 மதுக்கடைகள் பாடு படு திண்டாட்டமாக ஆகியுள்ளது.

படு என்பது மிகுதியை உணர்த்தும் ஓர் உரிச் சொல் எனக் கருதுவோமா? படு என்னும் வினையடியாகப் பிறந்த பாடு வினையாலணையும் பெயராகி, மதுக்கடைகள் பட்ட வற்றைக் குறிக்கக் காண்கிறோம்.

7.11 அதே சமயம் அரசு டாக்டர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படாது என்று அமைச்சர் செம்மலை தெரிவித்துள்ளார்.

நடத்தப்படும்; நடத்தப்படாது; நடத்தப்பட மாட்டாது என வரும் இம் மூன்று சொற்களையும் கூர்ந்து நோக்குவோ மாயின், அவற்றுக் கிடையே துலங்கும் பொருள் வேறுபாட்டு நுட்பத்தை அறியாம லிருக்க முடியாதே. நடத்தப்படும் என்பது சிக்கலற்ற சொல். நடத்தப்படாது என்பதற்கு நடத்தக் கூடாது என்பதும்

பொருளாதலின் நடத்தப்பட மாட்டாது என்பது இங்கு மிகவும் பொருத்த முடையதாகத் தோன்றுகிறது.

7.12 ஆறுதல் கூற முன்னாள் மேயர் உட்பட 6 எம்.எல்.ஏ.க்கள் கல்லூரிக்குச் சென்றனர். இதனால் 6 பேரைப் போலீசார் கைது செய்து சிறையில் அடைந்தனர்.

எழுத்து வடிவத்துக் கிடையே எண்வடித்தை அமைப்பது முரண். ஆகவே அவற்றையும் எழுத்து வடிவில் அமைத்தலே சரி. தேவையெனில் அவ் வெண் வடிவை அடைப்புக்குள் தரலாம். சான்றாக மேயர் உட்பட ஆறு (6) எம்.எல்.ஏ.க்கள், என்று எழுதுதலைக் காணலாம். ஆறுபேர் கல்லூரிக்குச் சென்றனர்; ஆறு பேரைப் போலீசார் கைது செய்தனர் என்பதற்கும், ஆறு பேர் கல்லூரிக்குச் சென்றனர்; அந்த ஆறு பேரையும் போலீசார் கைது செய்தனர் என்பதற்கும் இடையே யுள்ள பொருள் நுட்ப வேறுபாட்டருமையைக் காண்க.

7.13 பாலத்துக்கு அடியில் குழி தோண்டுவது பாலத்தின் வலுவை இழக்கச் செய்யும் என்பதைக் குழந்தைகள் முதல் பெரியவர் வரை அறிவர்.

அ. பாலத்தின் வலுவை இழக்கச் செய்யும்

ஆ. பாலத்தை வலுவிழக்கச் செய்யும்

இவற்றை ஒப்பிட்டுக் கூர்ந்து நோக்குக. முதலில் உள்ள தொடரில் வலுவை அது இழக்கச் செய்யும் என்று ஒரு அது என்பதன் தேவை இருப்பது தெரியும். பின்னுள்ளது தேவை எதுவுமற்ற தன்னிறைவுத் தொடராக உள்ளமையும் தெரியும். 'குழந்தைகள் முதல் பெரியவர் வரை அறிவர்' என்பதில் அனைவரும் அறிவர் என்றால் குறைபாடற்றுத் துலங்காதா இத் தொடர்?

7.14 மூன்றாம் பகுதியில் அறிவியல் தமிழ், என்கிற பாடத்தை முதல் 5ம் வகுப்பு வரை கட்டாயமாக இந்த ஆண்டு முதல் கற்றுத் தர வேண்டும்.

'முதல் 5ம் வகுப்பு வரை' என்னும் இப் பகுதியில் இரு பிழைகள் உள்ளன. முதற் பிழை முதல் என்பதில் உள்ளது. முதல் வகுப்பு முதல் என எண்ணி 'முதல்' என்று மட்டுமே எழுதி யுள்ளமை. இரண்டாம் பிழை '5ம்' என்பதில் உள்ளது. எழுத்துகளுக் கிடையில் எண் வடிவங்களை அமைப்பது இயன்ற வரை தவிர்க்கப் படல் நன்று. மேலும் இப்படி எண்ணையும் எழுத்தையும் கலந்து எழுதுவதால் ஏற்படக் கூடிய பிழைகளைத் தவிர்க்க, அவ் விரண்டையும் ஓரினமாக்கிப் பார்க்கலாம். எண் வடிவங்களனைத்தையும் எழுத்து வடிவங்களாக்கிவிட முடியும்; ஆனால் எழுத்து வடிவங்க ளனைத்தையும் எண் வடிவங்களாக்க முடியாதே. ஆதலால் 5 ம் என்பதனை அய்ந்தும் என ஒரே வடிவ மாக்கிப் பார்க்கலாம். 'முதல் வகுப்பு முதல் அய்ந்தும் வகுப்பு வரை' என்று எழுதிப் பார்த்தால் அதிலுள்ள பிழை எவருக்கும் நன்கு புலப்படும். ஆகவே அய்ந்தாம் என்றோ', எண் வடிவம் இருந்தே தீர வேண்டும் என்போர் 5-ஆம் என்றோ எழுதுதல் நன்று.

7.15 இராணி மேரிக் கல்லூரி மாணவிகள் சந்தித்துப் பேசிய ஒரே குற்றத்திற்காக இசுடாலின் உட்பட 6 தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களைக் கைது செய்திருப்பது அவரது ஆணவத்தின் உச்சக்கட்டம்.

மாணவிகள் இசுடாலின் அவர்களைச் சந்தித்துப் பேசினரா? இசுடாலின் மாணவிகளைச் சந்தித்துப் பேசினாரா? இரண்டாந் தொடர்தான் சரியானது எனில் மாணவிகளை என இரண்டாம் வேற்றுமை உருபைச் சேர்த்து எழுதுவதுதானே சரியாகும். மாணவிகளைச் சந்தித்துப் பேசிய ஒரே குற்றத்துக்காக என்று

எழுதுவதால் மாணவிகளைச் சந்தித்துப் பேசியது குற்றம் என்பதை இந்தச் செய்தியாளர் ஒப்புக் கொள்வதாகத் தோன்றவில்லையா? ''பேசியதையே குற்ற மாகக் கொண்டு சிறைப் பிடித்தமை ஆணவத்தின் உச்சக் கட்டம்'' என்பது போல் இத் தொடரை அமைக்க முடியாதா?

7.16 அ. இதுதான் சட்டவியல் நடைமுறை மட்டும் அல்ல - இந்திய அரசியல் அமைப்புப்படிச் செயலலிதா ஏற்றிருக்கும் பதவிப் பிரமாணத்தின் படியான கடமையும் கூட...

ஆ. இதுதான் சட்டவியல் நடை முறை என்பது மட்டும் அன்று, இந்திய அரசியல் அமைப்புப் படிச் செயலலிதா ஏற்றிருக்கும் பதவிப் பிரமாணத்தின் படியான கடமையும் கூட...

இ. இது, சட்டவியல் நடைமுறை மட்டுமே யன்றி இந்திய அரசியல் அமைப்புப்படிச் செயலலிதா ஏற்றிருக்கும் பதவிப் பிரமாணத்தின்படியான கடமையும் கூட...

இம் மூன்று சொற்றொடர்களையும் ஊன்றிப் படித்துத் தக்கதும் தகாததுமான நலன் தீங்குகளை அறியும் வாய்ப்பை இதைப் படிப்போர்க்கே வழங்குகிறோம்.

7.17 உட்காருவது, நடப்பது போன்ற செயல்களில் அவரால் ஈடுபட முடிகிறது.

அவரால் உட்காரவும், நடக்கவும் முடிகிறது என எளிதாகவும் தெளிவாகவும் கூறுவதை இந்த அன்பர் ஏன் விரும்ப வில்லை எனத் தெரியவில்லை.

7.18 அய்ம்பதாண்டுகால, அரசியல் நடத்தியும், கம்யூனிஃச்டுக் கட்சி வளராததற்கு இந்த மனப் போக்கும் மார்க்சிஃச்டுக் கட்சியில் தமிழாரல்லாதோரின் ஆதிக்கம் இன்றும் இருப்பதால் தான், அந்தக் கட்சித் தலைகள் இப்படிப் பேசுவதற்கும் காரணம் என்று சொல்லப்படுவதும் உண்மையாக இருக்குமோ?

சிக்கல் வாய்ந்த இச் சொற்றொடரைச் சிக்க லறுத்துத் தெளிவு படுத்துவதற்கு அரும்பாடு பட வேண்டியுள்ளது. அய்ம்பதாண்டு காலம் அரசியல் நடத்தியும் தமிழகத்தில் உள்ள மார்க்சிஃச்டுக் கம்யூனிஃச்டுக் கட்சி வளராததற்கு அந்தக் கட்சியில் இந்த மனப்போக்கும், தமிழரல்லாதோரின் ஆதிக்கமும் இன்றும் இருப்பதும்தான் காரணம்; அந்தக் கட்சித் தலைவர்கள் இப்படிப் பேசுவதற்குக் காரணமும் அதுவே தான் என்று சொல்லப்படு வதும் ஆகிய இவை யிரண்டும் உண்மையாக இருக்குமோ?

நெடிய முயற்சிக்குப் பின் எம்மால் இவ்வளவு தான் தெளிவு படுத்த முடிகிறது; மற்றவர்களின் முயற்சி அப் பகுதியை மேலும் தெளிவுபடுத்த முடியுமோ.

7.19 25.3.2003-இல் பேரவையில் செயலலிதா தி.மு.கழக ஆட்சியைக் குற்றஞ்சாட்டிப் பேசியது ஏடுகளில் வெளிவந்தது பின் வருமாறு.

இத் தொடரைப் பின் வருமாறு மாற்றி யமைப்பது சரியாக இருக்குமா என்று அறிக.

அ. செயலலிதா 25.3.2003-இல் பேரவையில் தி.மு.கழக ஆட்சியைக் குற்றஞ் சாட்டிப் பேசி ஏடுகளிலும் வெளிவந்துள்ள பகுதி பின் வருமாறு.

ஆ. செயலலிதா 25.3.2003-இல் பேரவையில் தி.மு.க. ஆட்சியைக் குற்றஞ் சாட்டிப் பேசியது ஏடுகளில் வெளிவந்தது. அது வருமாறு :

இ. ஏடுகளில் வெளிவந்த பின்வரும் பகுதி செயலலிதா 25.3.2003-இல் பேரவையில் தி.மு.க. ஆட்சியைக் குற்றஞ் சாட்டிப் பேசியதாகும்.

ஈ. ஏடுகளில் வெளிவந்ததும், செயலலிதாவால் 25.3.2003 -இல் பேரவையில் தி.மு.க. ஆட்சியைக் குற்றஞ்சாட்டிப் பேசியதுமாகிய பகுதி பின்வருமாறு.

மேலும் படிப்போரின் நன்முயற்சிக்கும் இதில் இடம் இருக்கிறதா என்று பார்க்கலாமே.

7.20 மேலும் தமிழ் நாட்டில் உற்பத்தியாகிக் கேரள வழியாக மீண்டும் தமிழ் நாட்டிற்கே வரும் பவானி ஆற்றின் குறுக்கே...

வெளியேறி என்னும் ஒரு சொல்லை இத் தொடரில் இடை மடுத்துப் பாருங்கள்; பவானி மேலும் தெளிவு பெறும்.

மேலும், தமிழ் நாட்டில் உற்பத்தியாகி வெளியேறிக், கேரளா வழியாக மீண்டும் தமிழ் நாட்டிற்கே வரும் பவானி ஆற்றின் குறுக்கே...

7.21 பேரவையிலிருந்து கழக உறுப்பினர்கள் குண்டுக் கட்டாக வெளியேற்றம்.

உறுப்பினர்களை என்றும், குண்டுகட்டாகக் கட்டி என்றும் உருபையும், மற்றொரு சொல்லையும் சேர்த்தமைத்து விட்டால் இது ஒரு செந்தமிழ்த் தொடராக அமையுமே. வெளியேற்றினர் என்பதை வெளியேற்றம் என்றது இட நெருக்கடியால் தான். அல்லது பேரவையிலிருந்து கழக உறுப்பினர்கள் குண்டு கட்டாகக் கட்டி வெளியேற்றப் பட்டனர் எனினும் சரியே.

7.22 நமது கழக உடன் பிறப்புகளும், மற்ற கட்சிகளின் செயல் வீரர்களும் ஆயிரக்கணக்கில் இந்த உண்ணா

நோன்புப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

அழகியதும், கசடற்றதுமாகிய இச் செஞ் சொற்றொடரின் ஈற்றில் ''கலந்து கொள்ள வேண்டுகிறேன்'' என்றோ, ''கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறேன்'', ''வேண்டு கோள் விடுகிறேன்'' என்றோ இருந்தால் எப்படியிருக்குமென்று பார்த்தா லென்ன?

7.23 ஓய்வூதியச் சலுகைகளைப் பறித்து அண்மையில் வெளியிட்ட அய்ந்து அரசு ஆணைகளை ரத்து செய்ய வேண்டும்; கூடுதல் அகவிலைப்படி நிலுவைகளை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தித் தலைமைச் செயலக நாமக்கல் கவிஞர் மாளிகை....

இங்கு வெளியிடப் பட்டுள்ள கோரிக்கைகள் குடலையிலுள்ள உதிரிப் பூக்கள் போல் உள்ளன. அவற்றை என்பன என்னும் நாரினால் இணைத்து ஒன்றாகக் கட்டித் தருவது நல்லது; அப்போது தான் எதுவும் நழுவாது போய்ச் சேரும்.

ஓய் வூதியச் சலுகைகளைப் பறித்து அண்மையில் வெளியிட்ட அய்ந்து அரசாணைகளையும் இரத்து செய்ய வேண்டும்; கூடுதல் அகவிலைப்படி நிலுவைகளை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தித் தலைமைச் செயலக நாமக்கல் கவிஞர் மாளிகை...

இம் மாலை எப்படியிருக்கிறது பார்த்தீர்களா?

7.24 இந்த நிலையில் நாம் பார்ப்பனருக்குக் கொடுக்கும் அனைத்துத் தானமும் உண்மையில் அவனுடை யவைகளே.

எல்லாத் தானங்களும் என்றோ, தானங்களனைத்தும் என்றோ கூறிப் பாருங்கள். அனைத்தும் என்பதால் தானங்களும் எனும் பன்மைச் சொல்லே பொருத்த மானது. பார்ப்பானுக்குக் கொடுக்கும் என்றால் அவனுடையவைகளே எனலாம். பார்ப்பன ருக்குக் கொடுக்கும் என்றிருப்பதால் அவர்களுடையவைகளே என்றிருப்பதே சரி.

7.25 தன்மனத்தில் வந்த தனைத்தையும் எழுதிக் கொண்டே போகிறார்.

போகிறார் என முடிவதால், தொடக்கம் தம் மனத்தில் எனப் பன்மை வாய்பாட்டால் இருப்பதே தக்கது. அனைத்தையும் என்றிருப்பதால் வந்தவை என்றிருப்பதுதான் சரி. ''தம் மனத்தில் வந்தவை யனைத்தையும் எழுதிக் கொண்டே போகிறார்'' இதுதான் அதன் செவ் வடிவம்.

7.26 பயோ டீசல் தயாரிக்கப் பயன்படும் காட்டாமணக்கு மரக் கன்றுகளைச் சென்னையில் சனிக் கிழமை நட்டார் இரயில்வே இணையமைச்சர் ஏ.கே. மூர்த்தி.

காட்டாமணி என்பது உலக வழக்கு; அதன் இலக்கிய வழக்குக் காட்டாமணக்கு என்பதுதான். ஆமணக்கு எண்ணெய் விளக்கெண்ணெய் எனப்படுகிறது. அதன் இனம் போன்றதே காட்டாமணக்கு. மரத்தின் இளமைப் பெயர் கன்று. அதனையே மரக்கன்று என்கிறோம். ஆமணக்கோ, காட்டாமணக்கோ செடிகளே ஆதலால் அவற்றின் இளமையை மரக்கன்று என்னாமல் நாற்று என்பதே தக்கது. கத்தரி நாற்று, மிளகாய் நாற்று என்பன காண்க. இத் தொடரைப் பின் வருமாறு மாற்றியமைத்துச் சுவை காண்போமா?

இரயில்வே இணை அமைச்சர் ஏ.கே. மூர்த்தி சனிக்கிழமை சென்னையில் பயோ டீசல் தயாரிக்கப் பயன்படும் காட்டா

மணக்கு நாற்றுகளை நட்டார். ''சென்னையில் சனிக்கிழமை'' எனக் கால இடச் சொற்களை மாற்றியமைப்பினும் நன்றே.

7.27 உன் அப்பா அம்மா பற்றி உன்னை விட எனக்குதான் நன்றாகத் தெரியும்?

உன் அப்பா அம்மா ஆகியோரைப் பற்றி உன்னை விட எனக்குதான் நன்றாகத் தெரியும் என, அப்பாவையும் அம்மாவையும் இணைத்து வைப்பதுதானே நல்லது.

7.28 ஓர் ஆணுக்கு ஒரு பெண் என்ற நிலை மாறி ஓர் ஆண் பல பெண்களை மணத்தலும், கிழ ஆண் பலதார மண முறையில் இளம் பெண்களை மணத்தலும், பெண் ஓர் இளைய ஆண் வழிப் பெறும் சம இன் பத்தைப் பெறாமல் தடை செய்திருத்தல் வேண்டும். விளைவாக ஆண் ஒருவன் இன்னொருவன் மனை வியை நயக்கும் சமுதாயச் சூழல் நேர்ந்திருக்க வேண்டும்.

என்ற என்னும் இறந்த காலத்தை மட்டும் சுட்டும் சொல்லைவிட என்னும் என்னும் நிகழ்காலச் சொல்லே முக் காலத்தையும் குறிக்கும் ஏற்புடைய சொல்லாகும். விளைவாக என்பது போல் மொட்டையாக ஒன்றைக் கூறும் நாகரிகம் இக் கால எ'ழுத்தாளர் சிலரை கவர்ந்து மணந்து கொண்டுள்ளது. அது தவறுதான். இதன் என்னும் சுட்டுச் சொல்லைச் சேர்த்து இதன் விளைவாக என அமைத்து வழுவிலா நலம் பெறலாமே.

7.29 நமது பயணத்தை நன்கு முன் கூட்டியே திட்ட மிடுதல், குறித்த நேரத்தில் கிளம்புதல், வாகனத்தின் திறனுக்கும் குறைந்த அளவிலேயே பயணிப்போர் எண்ணிக்கையை வைத்திருத்தல்...

பயணிப் போர் என்பது புதிய சொல்லாக்க மாகும். ''வண்டியின் திறத்தை விடக் குறைவானவர்களே அதில் ஏற வேண்டும்'' என்பது போல் சொல்லும் எளிய நடை இக் காலத்தார்க்கு அரிய தாகத் தோன்றுகிறது போலும்.

7.30 ...பிரிட்டன் ஆகியவை கூறும் புகாரைச் சதாம் உசைன் ஞாயிற்றுக் கிழமையும், மீண்டும் மறுத்துள்ளார்.

கிழமையும் எனும் உம்மை யிருப்பதால் மீண்டும் என்பது தேவைதானா? அது தேவை எனில் கிழமையில் உள்ள உம்மை தேவையற்ற தாகி விடுகிறது. அ) ஞாயிற்றுக் கிழமையும் மறுத்துள்ளார். ஆ) ஞாயிற்றுக் கிழமை மீண்டும் மறுத்துள்ளார். மொழியின் நுட்பம் மழுங்கி விடாமல் காப்பதும் எழுத்தாளர்களின் கடமை யன்றோ?

7.31 மூன்று வார ஈராக் போருக்குப் பிறகு சதாம் உசேனையும், அவரது ஆட்சியின் முக்கிய அதிகாரிகள், மந்திரிகளைப் பிடிப்பதில் அமெரிக்கக் கூட்டுப் படை கவனம் செலுத்தி வருகிறதல்லவா?

அல்ல என்பது பன்மையைக் குறிக்கும்; அன்று என்பது ஒருமைக்குரியது. கவனம் செலுத்துதல் என்னும் ஒருமைக் குரியது அன்று தானே. ஆகவே 'கவனம் செலுத்தி வருகிறதன்றோ' என முடிப்பதே நன்று. உசேனையும் என அங்கு உம் எனும் இடைச் சொல் சேர்க்கப் பட்டிருப்பதால் பின்னால் வரும் அதிகாரிகள், மந்திரிகள் ஆகியோருக்கும் அதனை அளிப்பதே முறை வழுவா நெறி. ஆகவே,

'சதாம் உசேனையும், அவரது ஆட்சியின் முக்கிய அதிகாரிகளையும், மந்திரிகளையும் பிடிப்பதில்' என்றோ,

'உசேனையும், அதிகாரிகள், மந்திரிகள் ஆகியோரையும் பிடிப்பதில்' என்றோ அத்தொடர் அமையலாம்.

7.32 வெளியுறவுத் துறை அமைச்சகத்துடன் ஆலோசனைக்குப் பிறகே விளையாட்டுத் துறை அமைச்சகம் இம் முடிவை எடுத்துள்ளது என்றார்.

அ. அமைச் சகத்துடன் ஆலோசனைக்குப் பிறகு,
ஆ. அமைச் சகத்துடன் நடத்திய ஆலோசனைக்குப் பிறகு
இ. அமைச் சகத்துடன் ஆலோசனை நடத்திய பிறகு
ஈ. அமைச் சகத்துடன் ஆலோசித்த பிறகு

முதலதில் குறையுள்ளது. ஏனைய மூன்றும் குறை யற்றவையே. நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ?

7.33 அதிகம் படித்தவர்கள், வசதியானவர்கள், பொறுப் பான பதவியில் உள்ளவர்களின் வீட்டுக் குழந்தைகள் தாய் தந்தையரின் முயற்சியால் பட்டம் பெற வைக்கப்பட்டு...

ஆகியவர்கள் அல்லது போன்றவர்கள் என்னும் இணைப்புச் சொல்லை இணைத்துப் பொறுப்பான பதவியில் உள்ளவர்கள் ஆகியோரின் வீட்டுக் குழந்தைகள் என அத் தொடரைச் சீர் செய்து நலன் காண்க.

7.34 தமிழகத்துக்கு வறட்சி நிவாரணமாக மத்திய அரசு ரூ. 258.44 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

''தமிழகத்தின் வறட்சி நிவாரணத்திற்காக மத்திய அரசு 258.44 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது'' என்பது தமிழ் மரபுக் கேற்ப அமைந்த செந் தொடராகும்.

7.35 சென்னை அண்ணா நகர், வில்லிவாக்கம் இடையே புதிதாக அமைக்கப்படவுள்ள இரயில் பாதைப் பணிக்காக...

'அண்ணா நகருக்கும் வில்லிவாக்கத்துக்கும் இடையே' என்றோ, 'அண்ணா நகர் வில்லிவாக்கம் ஆகியவற்றுக்கிடையே' என்றோ இத்தொடர் அமைந்திருத்தல் வேண்டும்.

7.36 அ. அரசு ஊழியர்கள்; ஆசிரியர்கள் மூன்று லட்சத் திற்கும் மேற்பட்டோரை அ.தி.மு.க. அரசு அடக்கு முறைச் சட்டம் மூலம் பணி நீக்கம் செய்து உத்தர விட்டது.

ஆ. அ.தி.மு.க. அரசு மூன்று இலட்சத்திற்கும் மேற் பட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை அடக்கு முறைச் சட்டத்தின் மூலம் பணி யினின்றும் நீக்கியதாக உத்தரவிட்டது.

மேற்காணப் படுவனவற்றுள் 'ஆ' பிரிவுத் தொடர் எளிமையாகவும், தெளிவாகவும் பொருள் தருமாறு அமைக்கப் பட்டுள்ளமை அறிக.

7.37 இனியாவது உட்கொள்ளும் பொருள்களுடன், உயிர்க்கொல்லிப் பொருள்களையும் தயாரிக்கும் உரிமம் ஒரே இரசாயனத் தொழிற்சாலைக்கு வழங்கப்படாதிருக்குமா?

இங்கே உடன் என்னும் சொல் பயன் படுத்தப்பட்டுள்ளமை யால் பொருளில் மாறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. உட்கொள்ளும் பொருளுடன் உயிர்க் கொல்லிப் பொருளையும், என்னும் போது சேர்த்து என்னும் மற்றொரு சொல் அங்கு வந்து சேர வாய்ப்பிருக்கும். யாரும் அவை யிரண்டையும் சேர்த்து உற்பத்தி செய்வதில்லை. அவை யிரண்டையும் உற்பத்தி செய்ய ஒருவருக்கே உரிமம் வழங்கப்படக் கூடாது என்பதே அவர் தெரிவிக்க விரும்பும் கருத்து. எனவே உற்பத்திப் பொருளையும் உயிர்க் கொல்லிப் பொருளையும் என இரண்டுக்கும் இரண்டாம் வேற்றுமை உருபைச் சேர்த்து எழுதுவதே நல்லது.

7.38 ...போன்ற மாநிலங்களில் வேலை நிறுத்தம் வாபசு பெறப்பட்டுள்ளன.

மாநிலங்களில் என்பது பன்மைச் சொல்லா யிருப்பதால் பெறப்பட்டுள்ளன எனும் பன்மை முடிவு தரப்பட்டுள்ளது. எழுவாய்க்கு ஏற்பவே பயனிலை அமைய வேண்டும். இத் தொடரில் எது எழுவாய்? பயனிலையைக் கண்டு பிடித்து விட்டால் எழுவாயை எளிதில் கண்டுபிடித்து விடலாம். வாக்கியத்தை முடிக்கும் சொல்தானே பயனிலை? இத் தொடரை முடிக்குஞ் சொல் பெறப்பட்டுள்ளன என்பது, பயனிலையை எது? எவை? என்பன போன்ற வினாக்களை வினாவி அதற்குக் கிடைக்கும் விடையே எழுவாயாதலின், பயனிலையாகிய பெறப்பட்டுள்ளன என்பதை எவை பெறப் பட்டுள்ளன என வினாவினால், வேலை நிறுத்தம் வாபசு பெறப்பட்டுள்ளன எனும் விடை கிடைக்கும். ஆகவே வேலை நிறுத்தமே இத் தொடரின் எழுவாய். அந்த எழுவாய் ஒருமையாக இருப்பதால் அதற்குரிய பயனிலையும் ஒருமையாகத் தானே இருக்கவேண்டும். ஆகவே வேலை நிறுத்தம் வாபசு பெறப்பட்டுள்ளது என்றிருப்பதே சரி. வேலை நிறுத்தம் வாபசு பெறப்பட்டுள்ளன என்பது, ஒருமை எழுவாய்க்குப் பன்மையில் பயனிலை தந்த வழுவாகும் என்பது இப்போது யாவருக்கும் விளங்கியிருக்கு மெனக் கருதுகிறோம்.

7.39 முதுகுக்குப் பின்னால் ரொம்ப வலிக்குமாறு அவரை முழங்கை முறுக்கி கலைஞர், வீரப்பன்-ராச்குமார் விசயத்தில் பணம் வாங்கினார் என்று சொல்ல வைத்து...

ஒருவரின் முதுகுக்குப் பின்னால் என்ன இருந்து அது ரொம்ப வலிக்கும் என்பது விளங்க வில்லை. ''பின்னால் உள்ள முதுகு ரொம்ப வலிக்குமாறு...'' என எழுதத் தெரியாமலா இவ் வெழுத்தாளர் முதுகுக்குப் பின்னால் என்று எழுதியிருப்பார்? அவரின் முழங்கையை முறுக்கி என்னாது, அவரை முழங்கை முறுக்கி என்று எழுதித் தன் நடையை மறந்து அன்ன நடை நடந்து இடர்ப்படுகிறார்.

7.40 சதாம் உசேனைப் பற்றிய மர்மம் நாள் தோறும் நீடித்து வரும் நிலையில் நேற்று ஒரு புதிய தகவலொன்று வெளியானது.

ஒரு என்பது முன்னரே வந்துள்ளதால் புதிய தகவல் வெளியானது என்றால் போதுமே. அல்லது 'நேற்று புதிய தகவலொன்று வெளியானது' என்றாவது எழுதியிருக்க வேண்டும். நீடித்து வரும் நிலையில் என்றாற் போதாதா? நாள் தோறும் என்பதும் வேண்டுமா? எண்ணிப் பார்த்திடுக.

7.41 மாவட்ட ஆட்சியரை முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

இதை, மாவட்ட ஆட்சியரை முற்றுகையிட்டுப் போராடினர் என்றோ, மாவட்ட ஆட்சியரோடு முற்றுகைப் போராட்டம் நடத்தினர் என்றோ எழுதினால் எப்படி யிருக்கும் என்று எண்ணிப் பார்ப்போமே.

7.42 கடன் தொல்லையால் தூக்குப் போட்டார்.

ஒன்றைச் சொல்லத் தொடங்கும் போது எழுவாயைத் தவறாது குறிப்பதே முறை. அடுத்தடுத்து வரும் வாய்ப்புகளில் அதைக் குறிப்பிடாமல் விட்டாலும் அது தோன்றா எழுவாயாகக் கருதப்படும். பொருட் குழப்பமும் நேராது. எடுத்த எடுப்பி லேயே எழுவாயின்றித் தொடங்குவதை ஓர் அழகாகவே இக் காலத்தார் ஆக்கிக் கொண்டுவிட்டனர்.

தூக்குப் போட்டாரா? தூக்குப் போட்டுக் கொண்டாரா? என்னதான் இட நெருக்கடி யிருந்தாலும் இப்படியா குழப்புவது?

7.43 ஒரு இடத்திலாவது 'குடிமகனோ' அல்லது 'குடிமகளோ' என்ற சொற்கள் வரவே இல்லை.

குடி மகனோ, குடி மகளோ வரவில்லை என்றாலே போதுமே. இங்கு அல்லது தேவையில்லை. அல்லது வந்தால் 'ஓ'

தேவையில்லை; குடிமகன் அல்லது குடிமகள் என்றால் போதும். சொற்கள் என்னுஞ் சொல்லை ஆள வேண்டுமாயின் 'குடி மகன் அல்லது குடி மகள் என்னுஞ் சொற்கள் வரவே இல்லை' என்று எழுதலாம். நல்ல செவ்விய தமிழ் உரை நடை நூல்களைப் படிக்கும் வழக்கம் உடையவர்களுக்கு இத் தகைய தவறுகள் ஏற்படும் வாய்ப்பே நேராது.

7.44 காற்றாலை மூலம் மின் உற்பத்தியில் இந்த ஆண்டு இது வரை 1000 மெகாவாட் உற்பத்தி அளவைத் தமிழகம் எட்டி உள்ளது.

தமிழகம், இந்த ஆண்டு, இது வரை காற்றாலை மூலம் செய்த மின் உற்பத்தி 1000 மெகாவாட் அளவை எட்டியுள்ளது. மேற் காணப்படும் தொடரை இவ்வாறு மாற்றி அமைத்து நலம் காண வேண்டுகிறோம். வேறு எவ்வாறேனும் மாற்றி யமைக்க முடியுமா என்றும் முயல வேண்டுகிறோம்.

7.45 திரைப்பட உரிமையாளர்கள் தன்னை நம்பினால் தான் முன்னேற முடியும்...

இத் தொடரில் உள்ள தன்னை எனுஞ் சொல் யாரைக் குறிக்கிறது என்று விளங்க வில்லையே. இவ்வாறு சொல்பவரையா? சொல்லப் படுவோராகிய திரைப்பட உரிமையாளர்களையா? சொல்பவரைக் குறிப்பதாயின் சரிதான். உரிமையாளரைக் குறிக்கிற தென்றால் தவறுதான். உரிமையாளர் பலராதலால் தம்மை, என்று பன்மையால் குறிப்பிடுவதுதானே சரியாக இருக்க முடியும்?

7.46 சீப்பும், பேருந்தும் நேருக்கு நேர் மோதியதில் என் கணவரும் இருவரும் பலத்த காய மடைந்து மருத்துவமனையில் இருந்தபோது...

மோதியதில் என்பதைவிட மோதிக் கொண்டதில் என்பது மிகவும் பொருத்தமாக இராதா? என் கணவரும் மற்றும் இருவரும் என மற்றுமொரு சொல்லைச் சேர்த்துப் பார்த்தால் அத் தொடர், கோதாவிரியாற்றுத் தண்ணீர் போல் தெளிவாக இருக்குமே.

7.47 அதே சமயம் திருமண மென்பது தனித்த ஆளுமை களின், திறமைகளின், வளர்ச்சிகளின் வாழ்க்கை உரிமைகளின் இழப்பாக இருக்குமாயின் அதற்குத் திருமணம் என்ற பெயரே பொருந்தாது.

மேற் காணப்படும் தொடரைக் கீழ்க் காணப்படுமாறு அமைத்து அதன் மேம்பாட்டை அறியலாமா?

அதே சமயம், திருமண மென்பது, தனித்த ஆளுமைகள், திறமைகள், வளர்ச்சிகள், வாழ்க்கை உரிமைகள் ஆகியவற்றின் இழப்பாக இருக்குமாயின் அதற்குத் திருமணம் என்னும் பெயரே பொருந்தாது.

7.48 தேசிய சனநாயகக் கூட்டணியிலிருந்து வெளியே வரவேண்டுமென்று இடது சாரிக் கட்சிகள் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கிறார்களே?

கட்சிகளி லிருப்போர் உயர்திணையைச் சார்ந்தோரே யாயினும் கட்சிகள், அஃறிணைகளே. எனவே தேசிய சனநாயகக் கூட்டணியிலிருந்து வெளியே வரவேண்டு மென்று இடது சாரிக் கட்சிகள் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கின்றனவே? என்பதே சரியாக இருக்கும். இடது சாரிக் கட்சியினர் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கிறார்களே என்பதும் செவ்வியதே.

7.49 டி.ஆர்.பாலு மீது குற்றஞ்சாட்டி சனாதிபதி பிரதம ருக்கும், அத்வானிக்கும் செயலலிதா புகார்க் கடிதம் அனுப்பியுள்ளார்.

சனாதிபதி பிரதமர் என ஒரு பதவியாளர் உள்ளாரா? பிரதமருக்கும், அத்வானிக்கும் தந்த 'கு' உருபையும், 'உம்'மை யையும் சனாதிபதிக்கு மட்டும் தராத தேனோ? ஆகவே சனாதி பதிக்கும், பிரதமருக்கும், அத்வானிக்கும் என அதனை மாற்றி அமைப்பதே சரி. குடியரசுத் தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோரைப் பதவிகளால் சுட்டும் போது உள் துறை அமைச்சரையும் அத்வானி என்னாமல் பதவிப் பெயராலேயே குறிப்பிடாத தேனோ?

7.50 அவர் இறந்த காலத்திலிருந்தும் மற்றும் எதிர்காலத் திற்கும் குறிப்பிடப்பட்ட செய்திகளை வெளியிடு வதற்காக மட்டும் அவர் ஒரு தூதரைத் தேர்ந் தெடுத்தார். குர். ஆன் : 72 : 27

அவர் என்னும் எழுவாய் கவனக் குறைவால் இருமுறை வந்திருக்கக் கூடும். ஆகவே முதலில் உள்ளதை மட்டும் வைத்துக் கொண்டு பின்னதை நீக்கி விடலாம். மற்றும் என்பது வேண்டாத விலங்கு. அதனையும் அகற்றி விடலாம். மற்றும் என்பதைச் சேர்க்கும் ஆங்கில நோயே, இறந்த காலத்திலிருந்தும் எதிர் காலத்திற்கும் எனவும் எழுதச் செய்துள்ளது. இறந்த காலத்திலிருந்து பெற்றனவும் எதிர் காலத்துக் குரியனவுமாகிய குறிப்பிட்ட செய்திகளை என்றோ, இறந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் உரிய குறிப்பிட்ட செய்திகளை என்றோ மாற்றி அமைத்து இத் தொடரின் அருமையை அறியலாமே.

7.51 தமிழகத்தில் உள்ள பன்னிரண்டு அரசு மருத்துவக் கல்லூரிகள், நான்கு தனியார் மருத்துவக் கல்லூரி களிலிருந்து ஆண்டு தோறும் இரண்டாயிரம் டாக்டர்கள் படித்து முடித்து வெளியேறுகிறார்கள்.

பன்னிரு அரசு மருத்துவக் கல்லூரிகள், நான்கு தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றிலிருந்து, என அத் தொடரைச் செப்பனிட்டுக் கொண்டு பார்ப்போமா?

7.52 ஆகவே வாழ்க்கையை வாழ்வாங்கு வாழுங்கள். அதுவே கடவுளை நோக்கிய வழிபாடாகும்.

பின்வருவனவற்றையும் படித்துப் பார்த்திடுக:

அ. ஆகவே வாழ்வாங்கு வாழுங்கள்.

ஆ. ஆகவே வாழ்வாங்கு வாழ்க.

இ. ஆகவே வாழ்க்கையை வாழ்வாங்கு நடத்துக.

ஈ. ஆகவே வாழ்க்கையை வாழ்வாங்கு பெறுக.

அதுவே கடவுளை நோக்கிய வழிபாடுமாகும் என ஓர் உம்மையைச் சேர்த்து அதன் சிறப்பைக் கூட்டலாமே.

7.53 இதன் உச்சக் கட்டமாக, இந்தியாவிலேயே முதன் முறையாக ஒரு பத்திரிகையாளரை நக்கீரன் கோபாலை 'பொடா' சட்டத்தின் கீழ்த் தமிழக அரசு சிறையிலடைத்துச் சித்திர வதை செய்து வருகிறது.

'ஒரு பத்திரிகையாளரை நக்கீரன் கோபாலை' என்றால் பத்திரிகையாளர், நக்கீரன், கோபால் என்னும் மூவரையும் என்று பொருள் கொள்வதா? பத்திரிகையாளருக்கும் கோபாலுக்கும் மட்டும் இரண்டன் உருபு தந்து எழுதியிருப்பதால், பத்திரிகையாளரையும் நக்கீரன் கோபாலையும் என்று கொண்டு விடலாம். நக்கீரன் என்னும் பத்திரிகையாளர் தாமே கோபால்; பத்திரிகையாளர் என்பது கோபாலுக்குப் பொருந்தாதா? இத்தனைக்கும் காரணம் பத்திரிகையாளராகிய நக்கீரன் கோபாலை என எழுதாமையே. ஆகிய என்பது பத்திரிகையாளரும் நக்கீரன் கோபாலும் ஒருவரே எனத் தெளிவு படுத்துகின்றமை காண்க.

7.54 தமிழ் நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் வெள்ளையன் மீது பொய்ப் புகார் கொடுக்கப் போலீசார் என்னை மிரட்டினார்கள் என்று சென்னை எழும்பூர் நீதி மன்றத்தில் வியாபாரி மனு தாக்கல் செய்தார்.

தமிழை நாடும் வணிகர் சங்கங்கள் என்று பொருள் கொள்வதைத் தடுக்கத் தமிழ்நாட்டு வணிகர் சங்கங்கள் என எழுதுவது நல்லது. அவ்வாறு ஒற்றை இரட்டித்து எழுதினால் தமிழ் நாட்டில் உள்ள வணிகர் சங்கங்கள் என்னும் பொருள் அய்யந் திரிபறக் கிடைக்குமே. யார் பொய்ப் புகார் கொடுக்க, இவரை மிரட்டினார்களாம்? இவரைப் பொய்ப் புகார் கொடுக்கச் சொல்லி மிரட்டினார்களா? அல்லது போலீசார் புகார் கொடுக்க இவரை ஏன் மிரட்ட வேண்டும்? கொடுக்கச் சொல்லி என எழுதி விட்டால் இதன் பொருளும் அய்யந் திரிபற்றதாக ஆகிவிடுமே.

7.55 ஆங்கில மொழிப் பாடத்திட்டத்திற்கான கலைத் திட்டம் மற்றும் பாடத் திட்டம் இணையத் தளம் வழியாக வெளியிடப்பட்டுள்ளன.

இதனை ஆங்கில மொழிப் பாடத் திட்டத்திற்கான கலைத் திட்டமும், பாடத் திட்டமும், இணையத் தளத்தின் வாயிலாக வெளியிடப் பட்டுள்ளன என்று தெரிந்து கொள்வதுதான் சரியானதா?

7.56 மருத்துவக் கல்லூரிகளைத் தனியார் மயமாக்க எதிர்ப்புத் தெரிவித்துப் போராடும் மாணவர்...

மருத்துவக் கல்லூரிகளைத் தனியார் மயமாக்குவது எப்படி? கல்லூரியை ஆளாக ஆக்குவது எப்படி? தனியார் கல்லூரிகளாக ஆக்க என்பதுதான் கருத்தாயின் அதனை அவ்வாறே கூறத் தடையுண்டா? தனியார் மயமாக்கச் சொல்லி எதையேனும் எதிர்க்கிறார்களோ? தனியார் மயம் ஆக்குவதை எதிர்க்கிறார்களா? ஆகவே கல்லூரிகளனைத்தையும் தனியார் கல்லூரிகளாகவே ஆக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராடும் மாணவர்... என்பது சரியாக இருக்குமா? ஆக்குவதை எதிர்த்து என்பதும் சரியாக இருக்கும்.

7.57 அவனுடைய குரல் கம்பீரமாகவும், மக்களைக் கவர்ந்து ஈர்க்கும் ஆற்றலும் உடையதாகவும் அமைந்திருந்தது.

வேற்றுமை உருபுகள், உம், போன்ற பிற இடைச் சொற்கள், உரிச் சொற்கள் ஆகியவற்றைத் தவிர்த்து எழுதுவது சரியன்று என்பதைப் போன்றே, தேவையற்ற இடங்களில் தேவையற்றவை களைச் சேர்த்து எழுதுவதும் சரியன்று. மேல் தரப்பட்டுள்ள சொற் றொடரில் 'குரல் கம்பீரமாகவும், ஆற்றலுடையதாகவும்' என இரண்டிடங்களில் உம் என்னும் இடைச் சொல் சேர்த்து எழுதப் பட்டிருப்பது போதுமானது. ஆற்றலும் என்னும் இடத்திலுள்ள உம்மை மிகை. ஆற்றலும் மற்றும் வேறு ஏதேனும் உடைய தாகவும் அது அமைந்திருந்தா லொழிய அது தேவையற்ற உம்மையே.

7.58 அங்கு டாக்டர் சீனிவாசன் முன் அறையில் ரத்த வெள்ளத்தில் உட்கார்ந்த நிலையில் பிணமாகக் கிடந்தார்.

டாக்டர் சீனிவாசன் அங்கு அதாவது முன் அறையில் ரத்த வெள்ளத்தில் உட்கார்ந்த நிலையில் பிணமாகக் கிடந்தார் என்பதில், பிணமாகக் கிடந்தார் என்னும் உயர்திணைப் பயனிலைக்கு டாக்டர் சீனிவாசன் என்னும் உயர்திணை எழுவாய் தந்து இத் தொடரை அமைத்திருப்பது வழுவற்றதே. டாக்டர் சீனிவாசனின் பிணம் என எழுவாய் அமைக்கப்பட்டிருப்பின் அதன் பயனிலை கிடந்தது என அஃறிணையாகவே இருந்திருக்க வேண்டும். உட்கார்ந்த நிலையில் கிடந்தார் என்னும் முரணும் நோக்கத்தக்கது.

7.59 அ. என்னை விழாவில் கலந்து கொள்ள அழைப்புக் கிடையாதா?

ஆ. விழாவிற் கலந்து கொள்ள என்னை அழைக்க வில்லையா?

இ. நான் விழாவிற் கலந்து கொள்ள (எனக்கு) அழைப்புக் கிடையாதா?

ஈ. விழாவிற்கலந்து கொள்ள எனக்கு அழைப்புக் கிடையாதா?

என்பன போன்றவற்றை முதலிலுள்ளதனோடு ஒப்பிட்டால் அதில் உள்ள குறை தெரியும்.

7.60 இதற்கான காரணம் - தயாரிப்புச் செலவும் விலங்கு களின் கிடைப்பருமையும் தான்.

இவ் வன்பர் 'கிடைப்பருமை' என்னும் ஒரு சொல்லைப் படைத்து ஆண்டுள்ளார். அது நம்மை மருட்டுகிறது. விலங்குகள் கிடைப்பது அரிதாயுள்ளதுந்தான் என்பது, தமிழ் அறிந்தோர் அனைவரும் அறிந்த செவ்விய நடை யாகும்.

7.61 ஏர்க்காட்டில் கோடை விழா மலர்க் கண் காட்சி நேற்று திறந்து வைக்கப்பட்டது. கண் காட்சியில் பழங்கள் கோபுரம் செய்து வைத்திருந்தனர்.

அ. பழங்கள் கோபுரம்

ஆ. பழங்களால் கோபுரம்

இ. பழக் கோபுரம்

ஈ. பழங்களாலாகிய கோபுரம்

இவற்றை ஒப்பிட்டு நேரிய செந்தமிழ் ஆட்சியை அறிக.

7.62 அ. மனிதாபிமான மற்றும் பொது நல நோக்கில்.

ஆ. மனிதாபிமானம் மற்றும் பொது நல நோக்கில்.

இ. மனிதாபிமான நோக்கிலும், பொது நல நோக்கிலும்.

ஈ. மனிதாபிமானம், பொது நலம் ஆகிய நோக்கங் களில்.

மேலுள்ள நான்கையும் கூர்ந்தும் ஒப்பிட்டும் நோக்கியறிக. எண்ணி எழுதுவோர் நுண்ணிய கருத்துகளையும் திண்ணிய வாகத் தெரிவிக்க முடியும்.

7.63 தனியார் மருத்துவக் கல்லூரி தொடங்க அனுமதிக்கக் கூடாது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி...

கூடாது என்று முடித்த பின் 'என்பது' போன்ற இணைப்புச் சொற்களைச் சேர்க்காமல் எழுதினால், முன்னும் பின்னு முள்ளவை தனித் தனியே நிற்க நேரலாம். ஆகவே, கூடாது என்பது உள்ளிட்ட என அதனைச் செப்பனிட்டுக் கொள்வது நல்லதுதானே.

7.64 சிந்திக்கச் சில விதைகள் என்ற நூலிலிருந்து

என்ற என்பது இறந்த காலத்தை உணர்த்துஞ் சொல்லாதலால், முக் காலத்தும் நின்று நிலவும் அந் நூலைக் குறிக்க என்னும் என்பதைச் சேர்த்து எழுதுவதுதான் தக்கது. 'சிந்திக்கச் சில விதைகள் என்னும் நூலிலிருந்து' என அதனை அமைத்துக் கொள்வோமா?

7.65 தான் விரும்பியவனை - ஆயிசாவின் அண்ணனைத் திருமணம் செய்து கொள்கிறாள் குஞ்சு பாத்திமா.

தான் விரும்பியவனையும், ஆயிசாவின் அண்ணனையும் (-) என்னும் இக் கோடு இணைத்து விடுமா? அச்சிறு கோட்டுக்கு அந்தத் திறம் இருப்பதாகத் தெரியவில்லையே. அய்யம் உள்ள இடங்களில் எல்லாம் காற் புள்ளிகளையும் (,) சிறு கோடுகளையும் (-) அமைத்துத் தப்பித்துக் கொள்ள முயலும் போக்கு இக் கால எழுத்தாளர் பலரிடமும் காணப்படுகிறது. தான் விரும்பிய ஆயிசாவின் அண்ணனை என்றோ, தான் விரும்பிய வனாகிய ஆயிசாவின் அண்ணனை என்றோ, தன்னால் விரும்பப் பட்ட ஆயிசாவின் அண்ணனை என்றோ அதனை எழுதி விடக் கூடாதா?

7.66 இவர்தான் செஞ்சி இராமச்சந்திரன் சி.பி.ஐ.யிடம் சிக்கக் காரணமாக இருந்த தகவல் வெளியாகி யிருக்கிறது.

'இருந்த தகவல்' என்பதை, 'இருந்தவர் என்னும் தகவல்' என்று மாற்றி அமைத்துப் பாருங்கள். எழுத்தாளரின் மிகச் சிறு கவனக் குறைவும் படிப்போருக்குப் பெருங் குழப்பத்தையும் பேரிடரையும் விளைக்க வல்லது என்பதை இதனாலுமறியலாம்.

7.67 சிறிய இடத்தில் சொற்ப முதலீட்டில் ஒரு தறியில் கணவனும், மனைவியும், மாற்றி மாற்றி ஓய்வின்றித் தறியடிக்கிற சத்தம் இரவு பத்து மணியானாலும் கேட்டுக் கொண்டிருக்கும்.

கணவனும் மனைவியும் எதை மாற்றி மாற்றி அடித்தார்களாம்? 'தறியில் தறியடிக்கிற' என்னும் நகைச்சுவையைத் தவிர்க்க முடியாதா? மாறி மாறி எனத் தன் வினையால் கூற வேண்டியதை, மாற்றி மாற்றி எனப் பிற வினையாற் கூறியதே இக் குழப்பத்துக்குக் காரணமாயிற்று. குறைந்த முதலைக் கொண்டு சிறிய இடத்தில் அமைக்கப்பட்ட ஒரே தறியில்... என அமைத்து அதன் அருமையை அறிக.

7.68 தமிழகத்தில் வாழும் போதுதான், அங்குள்ள பண்பாட்டு வாழ்வியலின் நெருக்கடி நிலைகள் சாதாரணப் பணியாகப் போய் வரும்போது தெரிவதிலும் பார்க்க அதிகமாகத் தெரியத் தொடங்குகிறது.

இஃது ஈழத் தமிழாதலின் ஆங்கிலப் போக்கு மிகுதியாகக் காணப்படுகிறது போலும். தெரிவதை விட என்பதை ஈழத்தில்

தான் தெரிவதிலும் பார்க்க என்பர். பண்பாட்டு வாழ்வியலின் நெருக்கடி நிலைகள் என்னும் பகுதி இதை எழுதியவர் தம் மனத்தில் எண்ணிப் பின் தமிழுக்கு மாற்றிய ஆங்கில மூலவடிவம் தெரிந்தவர்களுக்கு மட்டுமே விளங்கும்.

7.69 அப்பொழுதுதான் என்னைப் பொறுத்த வரையில் இரா. இளவரசு என்னும் தமிழறிஞனை, தமிழனைக் கண்டறிதல் (Discovering) ஆகிய முயற்சி தொடங் கிற்று. முன்னரே மனதில் ஏற்பட்டிருந்த தமிழர் அடையாள வெளிப்பாடுகள் பற்றிய சிக்கலை விளங்கிக் கொள்வதற்கான தடயம் கிடைத்தது.

இதுவும் 7.68 என்னும் பகுதியில் அமைந்துள்ளது போன்றதே யாதலின் அங்குள்ள விளக்கத்தின் பிற் பகுதி இங்கும் பொருந்தும். இப் போக்கையே யாம், ஆங்கிலக் கொள்ளை நோயின் தாக்கம் என வேறுபல இடங்களிலும் குறிப்பிட்டு வந்திருக்கிறோம்.

7.70 ஒருவரை அறிந்து கொள்ளல் என்பது அவரிடமிருந்து ஆழப் புதைந்து கிடக்கும் முதற் பார்வையில் தெரிய வராத நல்லம்சங்களைத் தெரிந்து கொள்ளல்.

இத் தொடரை எளிய தாக்க முயல விரும்புகிறோம். எமது விருப்பம் எந்த அளவு நிறை வேறியுள்ளது என்பதை மற்றவர்களே அறிவிக்க வல்லார். ''ஒருவரை அறிந்து கொள்ளல் என்பது அவரிடம் ஆழப் புதைந்து கிடப்பதும், முதற் பார்வையிலேயே தெரிந்து கொள்ள முடியாதது மாகிய நல்ல கூறுகளைத் தெரிந்து கொள்ளலே!''

7.71 ...ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்கும் பாடு படுவேன் என்று உளமாற உறுதி மொழி எடுத்துக் கொள்கிறேன்.

உளமாற என்றால் மனம் மாறுதலடைய என்று பொருள் பட்டுவிடுமே. இது, மார என்பது மாற எனப் பிழையாக அச்சிடப் பட்டதாயுமிருக்கக் கூடும். உறுதி மொழியை இவர் எங்கிருந்து எடுத்துக் கொள்கிறார்? உறுதி மொழிகிறேன் என்றோ, உறுதி கூறுகிறேன் என்றோ கூறலே நன்றெனத் தோன்றுகிறது.

7.72 இனி, உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தம் உரை மூலம் வேந்தர் - சேர, சோழ, பாண்டியர் மன்னர் - சிற்றரசர் என்ற கருத்துக்கு எவ்வாறு துணை செய்கிறார் என்று பார்க்கலாம்.

இனி, உரையாசிரியர் நச்சினார்க் கினியர் தம் உரை மூலம் வேந்தர் என்பது சேர சோழ பாண்டியரையும் மன்னர் என்பது சிற்றரசர்களையும் குறிக்கும் என்னும் கருத்துக்கு எவ்வாறு துணை செய்கிறார் என்று பார்க்கலாம் என்று எழுத வேண்டியதை, வேந்தர் என்பதன் பின்னரும் மன்னர் என்பதன் பின்னரும் இரு சிறு கோடுகளை அமைத்து எழுதித் தமிழ் மரபைக் கோட்டை விட்டுள்ளார் இவ்வறிஞர்.

7.73 கீழுள்ள

அ. ஒரு நூலாசிரியர் எழுதியது. அதனை வேறு நான்கு வகையில் மாற்றி அமைத்துள்ளோம் யாம். எமது மாற்றங்கள் சரியானவை தாமா என அறிதல் இந் நூலைப் படிப்போர் கடமை.

அ. தமிழில் மணம் என்ற சொல் எல்லோரும் அறிந்ததே.

ஆ. தமிழில் உள்ள மணம் என்னுஞ்சொல்லை யாவரும் அறிவர்.

இ. மணம் என்னும் தமிழ்ச்சொல் யாவரும் அறிந்ததே.

ஈ. தமிழின் மணம் என்னுஞ் சொல் எல்லோரும் அறிந்ததே.

உ. மணம் என்னும் தமிழ்ச் சொல்லை யாவரும் அறிவர்.

7.74 உலகப் பெருமை கொண்ட காதல் இலக்கியங்கள் நான்கு. அவை, சேக்சுபியரின் உரோமியோ சூலியட், இலைலாமச்னு, அம்பிகாபதி அமராவதி, சரத்சந்திர சட்டர்சியின் தேவதாசு ஆகும்.

சேக்சுபியரையும், சரத் சந்திரரையும் நூலாசிரியர்களாகக் குறிப்பிட்ட இவர் ஏனை யிரு நூல்களின் ஆசிரியர்களையும் குறிப்பிட்டிருக்கலாம். ஈற்றயலில் என்பன என்னும் இணைப்புச் சொல்லைச் சேர்த்து அவற்றை இணைத்திருக்கக் கூடாதா?

7.75 பொடா சட்டத்தை வாபசு வாங்க வேண்டுமென்றும், தமிழ் நாட்டில் அது தவறாகப் பயன்படுத்தப்படுகிற தென்பதைச் சுட்டிக் காட்டியும் கண்டிக்கிற வகை யிலும் தி.மு.க. சனநாயக ரீதியில் தீவிர நடவடிக் கையில் இறங்கும்...

தவறாகப் பயன்படுத்தப் படுகிற தென்பதைச் சுட்டிக் காட்டியும் என்னும் பகுதி நுண்மாண் நுழை புலத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் கண்டிக்கிற வகையிலும் என்பதில் உள்ள உம்மையின் தேவை புலப்பட வில்லையே.

7.76 விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே ஒரு காரும் லாரியும் மோதிக்கொண்டது.

காரும் லாரியும் என்னும் பன்மைக் கேற்ப, மோதிக் கொண்டன என்னும் பன்மைப் பயனிலையைத் தந்திருக்க வேண்டாவா? விழுப்புரம் மாவட்டத்திலுள்ள செஞ்சி என்றால் என்ன குறை நேர்ந்து விடுமோ?

7.77 ஏனுங்க உங்க கடிகாரத்துக்கு டாட்டாவை நம்புரீங்களா?

ஒருவர் தம் கடிகாரத்துக்காக டாட்டாவை ஏன் நம்ப வேண்டுமாம். 'ஏங்க! நீங்க, உங்களுக்குக் கடிகாரம் வாங்க

டாட்டா நிறுவனத்தை நம்புகிறீர்களா?' என்றோ, 'டாட்டா கடிகாரத்தை நீங்கள் நம்பி வாங்குவீர்களா?' என்பது போலவோ அதனை அமைக்கக் கூடாதா? 'கடிகாரத்தை வாங்க' எனக் கூற வேண்டியதையே அவர், 'கடிகாரத்துக்கு' என்று கூறுகிறார்.

7.78 ஏன் தம்பி பொடா சட்டத்தை - தமிழக அரசு - துஷ்பிரயோகம் செய்ததைத் தடுக்கும் வகையில்- ''பொடாவில் யாரையாவது கைது செய்ய வேண்டும் என்றால் - மத்திய அரசின் முன் அனுமதியைப் பெற வேண்டும் - பொடாவில் உடனடியாகத் திருத்தம் கொண்டு வர மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகச் செய்தி வந்திருக்கிறதே''.

சிறு கோட்டின் மேல் ஒரு கோட்டைச் சுமையை ஏற்றுவது ஏனோ? 'த்' மிகுமா என்னும் அய்யத்தால், சட்டத்தை என்பதை யடுத்து ஒரு கோடும், அரசு என்பதை யடுத்தும், வகையில் என்பதை யடுத்தும், என்றால் என்பதை யடுத்தும் தேவை யற்று மூன்று கோடுகளும், 'என்று' என்பதைக் குறிக்க, வேண்டும் என்பதை யடுத்து ஒரு கோடும் இடப் பட்டுள்ளன. இக் கோடிட்டுத் தப்பிக்கும் முறையும், வேண்டா இடங்களில் கோடிட்டுக் குழப்பும் முறையும் பெருகுகின்றன.

7.79 ஒவ்வொரு வீட்டிலும் கட்டிய தொட்டியின் அளவுதான் நீர் பூமிக்குள் சென்றதே தவிர இவர்கள் கூறியது போல் எதுவும் பெரிதாக நடந்துவிட வில்லை.

தொட்டியின் அளவுதான் நீர் என்பதைத் தொட்டியின் கொள்ளளவு நீர்தான் என்று மாற்றி யமைத்துத் தமிழின் நுட்பத்தைப் பேணுவோமே.

7.80 தனக்குத் தானே கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு அதற்கு அடங்கித் தன் உரிமைகள் பல வற்றை இழந்து தன் நலத்தை ஓரளவு விட்டுக் கொடுத்துப் பிறர் நலத்தைப் பேரளவு நாடி வாழும் கூட்டு வாழ்வு சுவையும் பயனும் மிக்கது. அதனாற்றான் அது காட்டு வாழ்வை வென்று நிலைத்திருக்கிறது. தத்துவம் ஆய்வறிவு முதிர்ந்ததன் விளைவாகும். கொள்கை, கோட்பாடுகளினும் உறுதியானது இது.

கட்டுப் பாடுகளை என்னும் பன்மையை அதற்கு என்னும் ஒருமைச் சொல்லால் சுட்டுதல் ஏற்கத்தக்கதா? அவற்றுக்கு அடங்கி எனப் பன்மைச் சொல்லைப் பயன்படுத்தலாமே. மற்றபடி இவ் வுரை நடைப் பகுதி விழுமிய கருத்தை வழுவின்றிக் கூறும் செம் பகுதியே.

7.81 நாம் சாப்பிடும் உணவுப் பழக்க வழக்கங்கள் நமது சந்ததியினரின் நிறம், குணம் போன்றவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதே தற்போதைய அனுமானம்.

நாம் உணவுப் பழக்க வழக்கங்களையா சாப்பிடுகிறோம்? நாம் சாப்பிடும் உணவு பற்றிய பழக்க வழக்கங்களா, நாம் சாப்பிடும் உணவும், நம்மிடமுள்ள பழக்க வழக்கங்களுமா என்பதை வரையறுக்க இயலவில்லை. மொழி மரபைப் பொருட் படுத்தாமை யால் ஏற்படும் குழப்பத்துக்கு இது நல்ல எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது.

7.82 முன்னாள் முதலமைச்சர் மாயாவதியைக் கைது செய்ய உயர் நீதி மன்றம் தடை விதித்துள்ளது.

உயர் நீதி மன்றம் எதற்குத் தடை விதித்துள்ளதோ? கைது செய்வதற்குத் தடை விதித்துள்ளது என்றால் நன்கு பொருந்துமா? நன்கு எண்ணிப் பார்ப்போமா?

7.83 சதாம் - 2 மகன்கள் ஈராக்கில் தான் உள்ளனர் : புதிய பரபரப்புத் தகவல்

சதாமின் இரண்டு மகன்களும் ஈராக்கில்தான் உள்ளனர் என்பதில் உள்ள 'இன்' என்னும் இடைச் சொல்லை அகற்றிவிட்டு, (-) ஒரு கோட்டைத் தீட்டியதன் நோக்கம் யாதோ தெரியவில்லை. அக் கோட்டுக்கு அப் பொருள் உண்டா? (-) இப்படிக் கோடு போட்டால் என்னென்ன பொருள் கிடைக்கும் என்பதை எப்படி அறிவது? ஏதோ வேடிக்கை விளையாட்டுப் போல் இப் பழக்கம் பரவிக் கொண்டிருக்கிறது. சதாமுக்குப் பல மக்கள் இருந்து அவர்களில் இருவர் மட்டும் ஈராக்கில் இருப்பராயின் இது சரிதான். அவருக்கு இருக்கும் மக்கள் இருவர் மட்டுமே. அவ் விருவரும் ஈராக்கில் இருக்கின்றனரென்றால், இரண்டு மகன்களும் என்று உம்மை சேர்த்துதான் கூற வேண்டும்.

7.84 வரலாறு என்பது யாது?

வரலாறு என்னுஞ் சொல்லை வரல் + ஆறு எனப் பிரிக்கலாம். வரல் எனில் வரும் என்றும், ஆறு எனில் வழி என்றும் பொருள் கூறலாம். மக்களினம் வந்து கொண்டிருக்கும் விதம் என்பது அத் தொடர் மொழியின் பொருளாகலாம். முக் காலத்துக்கும் உரியதை வரும் என்று கூறியது சரியே. மக்களினத்தின் தோற்றத்திலிருந்து அது வளர்ந்து வாழ்ந்து சிறக்கும் யாவும் அதிலடங்கும். மன்னர்கள் ஏற்பட்ட பின் வரலாறு, மக்களைப் பற்றிய செய்திகளோடு கூடிய மன்னர் வாழ்வைச் சுட்டத் தொடங்கிச், சிலப்பதிகாரத்தில் கூறப்படும் மன்னர் வாழ்வோடு கூடிய மக்கள் வாழ்வாக வளர்ந்து, மக்களும் அவர்தம் ஆட்சியும் நிலவும் இக் காலத்தில் மக்களின் வரலாறு கூறும் பண்டைய நெறியே நின்று நிலைப்பதாயிற்று.

7.85 அ. இன்றைய தினம் இரண்டு நாளைய தினங்களுக்குச் சமமாகும்.

ஆ. இன்றைய ஒருநாள் இனி வரவிருக்கும் இரு நாள்களுக்கு ஈடாகும்.

ஆங்கிலத் தொட ரொன்றே முதலிலுள்ளவாறு தமிழில் கூறப்பட்டது. அதனைத் தமிழ்மொழி மரபுக் கேற்ப அமைந்துள்ளதே இரண்டாந் தொடர். இரண்டையும் பற்றி எண்ணி மகிழ்க.

7.86 தஞ்சை, கும்பகோணம், கரூர் பகுதியில் காவிரி யாற்றைப் பாதுகாக்கவும்...

ஆகிய என்னுந் தொடர்புச் சொல்லை யாண்டு தஞ்சை, கும்பகோணம், கரூர் ஆகிய பகுதிகளில் எனப் பன்மையில் முடித்தால் நன்றாயிருக்கும். மேலும், ஆகிய பகுதிகளை யடுத்துள்ள காவிரியாற்றை எனில் மிகவுந் தெளிவாகும் அத் தொடர்.

7.87 அதாவது போர்வீரர்களின் மனோபாவத்தை மாற்றி நம்பிக்கை வர, மன்னர் கையாண்ட யுக்தி அது.

அது என்பது ஆவது என்பதோடு சேரும் போது அஃதாவது என்பதே ஏற்றது. போர் வீரர்களின் மனோபாவத்தை மாற்றி அவர்களுக்கு நம்பிக்கை வரச் செய்ய மன்னர் கையாண்ட யுக்தி அது என்று அத் தொடரை நன்கு அமைக்க முடியுமே.

7.88 இந்த அதிகாரத்தின்படி தேர்தல் பணியில் ஈடுபட்டி ருக்கும் பணியாளர்கள், போலீசார் ஒழுங்கீனமான முறையில் செயல்பட்டால் அந்த இடத்திலேயே சஸ் பெண்டு அல்லது பணிநீக்கம் செய்யப்படுவார்கள்.

பணியாளர்களும் போலீசாரும் என்றோ, பணியாளர் போலீசார் ஆகியோர் என்றோ அப் பகுதியை மட்டும் மாற்றி யமைத்துச் செப்பனிட்டுக் கொள்வது முன்னரே நாம் நன்கறிந்ததுதானே. செயல்பட்டால் அவர்கள் அந்த

இடத்திலேயே என அவர்கள் எனும் மற்றொரு சொல்லை அங்குச் சேர்த்துக் கொள்வது மிகவும் நல்லது. சஃச்பெண்டு, அஃதாவது, பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என்பது தானே சரியாக இருக்க முடியும்.

7.89 செல்வந்தரின் குடும்பத்துடன் ஏற்பட்ட தொடர்பு காரணமாக அக் காலத்திய அறிஞர்களான பேக்கன், ஆர்வி, டெக்கார்த்தே, கலிலியோ போன்றவர்களுடன் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது.

செல்வர் என்றால் போதாதா? செல்வத்துக்கு அந்தம் விளைப்போர் எனும் பொருளில் செல்வந்தர் எனல் வேண்டுமா?

எடுத்த எடுப்பில் செல்வந்தரின் குடும்பம் என்று தொடங்கலாமா? ஆகவே, செல்வ ரொருவரின் குடும்பத்துடன் என்றோ, ஒரு செல்வரின் குடும்பத்துடன் என்றோ அதைத் தொடங்கினாலென்ன?

7.90 பூமிபூசா - செ.யின் முதல்வர் / எம்.எல்.ஏ. பதவிகளை ஆளுநர் / டெல்லி பறிக்குமா?

கிடைக் கோட்டையும் (-) நிலைக் கோட்டையும் (/) இடையிடையே கலந்து எழுதும் உடைசல் நடையே மேலே காணப்படுவது. முதல்வர், எம்.எல்.ஏ. ஆகிய பதவிகளை என இணைப்புச் சொல் சேர்த்தல் நன்று. ஆளுநரோ டெல்லியோ பறிக்குமா என்பதே, ஆளுநர் / டெல்லி பறிக்குமா? என எழுதப்பட்டுள்ளது. ஆளுக்கொரு எலும்பாக உடைத்துத் தமிழை நிலை தளர்ந்து அழிய விடவேண்டா என அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

7.91 ஆசிரியர், அரசு ஊழியர்கள் அனுபவித்து வந்த சரண் விடுப்பு ஊதியம், போனசு, கருணைத் தொகை உள்ளிட்ட பல சலுகைகளை அ.தி.மு.க. அரசு பதவிக்கு வந்ததும் நிதி நெருக்கடியைக் காரணங் காட்டிப் பறித்தது.

ஆகியோர் அனுபவித்து வந்த என இணைப்புச் சொல் சேர்க்கப்பட வேண்டும். உள்ளிட்ட என்பது ஆங்கில மரபை யொட்டி வந்துள்ள போலி. முதலிய, போன்ற, ஆகிய என்பனவே தமிழ் மரபை யொட்டிய சொற்கள்.

7.92 மனிதனிடம் அதிகமான வேறுபாடுகள் இல்லை.

இத் தொடர் அச்சிடப் பட்டிருந்த ஏட்டில் 'வேறுப' என ஒருவரி முடிந்து அடுத்தவரி 'ாடுகள்' எனத் தொடங்குகிறது. 'பா' இரு எழுத்துகளல்ல. அது ஓர் எழுத்தே. வரிவடிவ அடையாளந் தான் இரண்டாக உள்ளது. எனவே பா என்பதை முழுமையாக அந்த வரியில் அச்சிட முடியாவிடின், பா என்னும் இரண்டு வடிவங்களையுமே அடுத்த வரிக்குக் கொண்டு போய் விடலாம். வேறுபாடு என்னும் ஒரே சொல்லை இரண்டாக வெட்டி, முதல் துண்டினை முதல்வரியின் ஈற்றிலும் இரண்டாந் துண்டை மறு வரியின் முதலிலும் எழுதுவதை விட, இரண்டையும் சேர்த்து மறுவரியில் அச்சிடுவதே சரி.

7.93 கோவை அருகே அரசு டாக்டர் சரமாரி வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

சரம்+மாரி=சரமாரி; சரம்=அம்பு; மாரி=மழை.

சரமாரி=அம்புமழை

மழை பெய்யும் போது மழைத் துளிகள் எப்படி விழுமோ அப்படி அம்புகள் எதிரிகளின் மேல் விழும் என்பதையே சராமாரி என்று உருவகப் படுத்திக் கூறுவர். பிறகு அவ் வுருவகம் பலவற்றுக்கும் பயன்படுத்தப்பட்டது. இங்கு மருத்துவர் மேல் விழுந்த வெட்டுகள் சரமாரியாக விழுந்தன என்று எழுதப்பட்டுள்ளது. ஆக என்பது விடுபட்டுள்ளமை குறையே. பூமாரி, சொன்மாரி, மண்மாரி, கல்மாரி என்பனவும் இத் தகையனவே.

7.94 அதிலே கடைசியாக எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கைகளில் இரண்டு குறிப்பிடத் தக்கது.

'இரண்டு' என்னும் பன்மைக் கேற்ப அதன் பயனிலையும் 'குறிப்பிடத் தக்கவை' எனப் பன்மையாகவே இருக்கலாம். நடவடிக்கைகள் பன்மை என்பது வெளிப்படையாகப் புலப்படுவது போல் இரண்டு புலப்பட வில்லையோ? இரண்டு என்பது ஓர் எண்தானே. அதனால் அது, ஒருமை போல் தோன்றி நம் நண்பரை மயக்கியிருக்குமோ? கூட்டம் பலர் கூடியிருப்பதாயினும் தொகுதி ஒருமையாகக் கொள்ளப்பட்டுக் கூட்டம் கலைந்தது என ஒருமை முடிவே தரப்படுவது போல், இங்கும் இரண்டு என்பதைத் தொகை ஒருமை எனக் கருதி குறிப்பிடத்தக்கது எனப்பட்டிருக்குமோ? இரண்டு என்பது அந்த எண்ணைக் குறிப்பிடாமல் இரு நடவடிக்கைகளைக் குறிப்பதால் அங்கு அது பன்மைச் சொல்லே.

7.95 இந்தச் செய்தி தினகரன் ஒன்றைத் தவிர வேறு எந்த ஏடுகளிலும் வெளிவர வில்லை.

அ. வேறு எந்த ஏடுகளிலும் வெளிவரவில்லை.
ஆ. வேறு ஏடுகளில் வெளிவரவில்லை
இ. வேறு ஏடுகள் எவற்றிலும் வெளிவரவில்லை.
ஈ. வேறு எந்த ஏட்டிலும் வெளிவரவில்லை.
உ. வேறு ஏடுகள் எவற்றிலும் வெளிவரவில்லை.

இவற்றைக் கூர்ந்து நோக்க வல்லார்க்குக் கருத்துக் கிளர்ச்சிக்கு நிரம்ப வாய்ப்புக் கிட்டும்.

7.96 இவர்கள் அனைவரும் பாக்கித்தானைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படுகின்றனர்.

'இவர்கள் அனைவரும் பாக்கித்தானைச் சேர்ந்தவர்கள்' எனத் தெளிவாகவும், முடிவாகவும் கூறிவிட்ட பிறகு அதுபற்றிச் சந்தேகப் படுவதற்கு இடம் இருக்க முடியுமா? அவர்கள்

சந்தேகிக்கப் படுகின்றனர் எனில், இவர்கள் அனைவரும் பாக்கித்தானைச் சேர்ந்தவர்களோ எனச் சந்தேகிக்கப்படுகின்றனர் என எழுதலாகாதா?

7.97 இது குறித்து ஆளுநர் இராம மோகன் ராவிடம் எவராவது முறையிடும் நிலையில் வாசுதேவனிடம் அவர் விளக்கம் கேட்பார்.

இதுவும் படிப்போரைக் குழப்ப வல்ல ஒரு சொற்றொட ரமைப்பாகும்.

இதைப்பற்றி ஆளுநராகவுள்ள இராம மோகன் ராவிடம் யாராவது முறையிடும் நிலை ஏற்பட்டால் அவர் வாசு தேவனிடம் விளக்கம் கேட்பார் என்பதையே, இவ் வெழுத்தாளர், மேற் காணுமாறு எழுதியுள்ளார் என்பது சரியாக இருக்குமா என எண்ணிப் பார்த்திடுக.

7.98 ரெயில் மற்றும் ரெயில் நிலையங்களில் புகை பிடிப்போர், முன் பதிவு செய்யப்பட்ட பெட்டிகளில் முன் பதிவு செய்யாமல் பயணம் செய்வோருக்கு எதிராகத் தெற்கு ரெயில் வேயின் சென்னைக் கோட்ட அதிகாரிகள் பல்வேறு சோதனைகளை மேற் கொண்டு வருகிறார்கள்.

இதை எழுதியவர் ஆங்கிலக் கொள்ளை நோயால் தாக்கப் பட்டுள்ளவராதலால் ரயிலிலோ, ரயில் நிலையங்களிலோ என எழுதப்பட வேண்டிய இது, 'ரெயில் மற்றும் ரெயில் நிலையங்களில்' என எழுதப்பட நேர்ந்து விட்டது. மற்றும், '...புகை பிடிப்போர், பயணம் செய்வோர் ஆகியோருக்கு எதிராக' என்றும் இவர் எழுதியிருக்கலாமே.

7.99 விசாரணையின் போது எதிரியிடம் வாக்கு மூலம் வாங்குவது மட்டும் அல்லாமல் வழக்குக்கான ஆதாரங்கள் மற்றும் அதற்கான தஃச்தாவேசுகளை யும் திரட்ட வேண்டியது உள்ளது.

பொருட் குழப்ப மெதுவும் ஏற்படவில்லை எனினும் செப்பனிடுவதற்கு இங்கும் இடம் இருப்பதாகவே கருதுகிறோ மாதலின், அவ்வாறு செப்பனிடப்பட்ட தொடரைக் கீழே தருகிறோம்; ஆய்ந்து பார்த்திடுக.

விசாரணையின் போது எதிரியிடம் வாக்கு மூலம் வாங்குவது மட்டுமே யல்லாமல் வழக்குக்குத் தேவையான ஆதாரங்களையும், அதற்குரிய தஃச்தாவேசுகளையும் திரட்ட வேண்டியுள்ளது. தஃச்தாவேசு என்பதற்குரிய தமிழ்ச் சொல் ஆவணம் என்பது தானே. அதனையோ, இந்த நண்பர் ஏற்றதாகக் கருதும் வேறொரு தமிழ்ச் சொல்லையோ ஆண்டிருக்கலாம்.

7.100 இந்திய மக்கள் எல்லோருமே இராமர் கோயில் கட்ட ஆதரவு தரலாம். ஆனால், அந்த இடம் யாருக்குச் சொந்த மானது என்பது பற்றி நீதிமன்றத்தின் விசாரணையில் இருக்கும் இடத்தில்தான் இராமர் கோயிலைக் கட்டுவோம், நீதி மன்றத் தீர்ப்பு எங்களைக் கட்டுப்படுத்தாது; என்று கூறுவதை யார் தான் ஏற்க முடியும்?

தமிழ் மொழி நடையை அறியாமலோ, மறந்து விட்டோ எழுதுவதால் ஏற்படும் தெளிவின்மை இங்குக் காணப்படுகிறது. ''ஆனால் யாருக்குச் சொந்த மானது என நீதிமன்றம் விசாரித்துக் கொண்டிருக்கும் இடத்தில்தான் இராமர் கோயிலைக் கட்டுவோம்'' இது நம் மரபு வழியில் எழுதப்பட்ட பகுதி. இதை அயல் மரபு வழியில் எழுதியதால் எளிதில் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே இதனை, ''இந்திய மக்கள்

எல்லோருமே இராமர் கோயில் கட்ட ஆதரவு தரலாம். ஆனால் யாருக்குச் சொந்தமானது என நீதி மன்றம் விசாரித்துக் கொண்டிருக்கும் ஒரு இடத்தில்தான் அதனைக் கட்டுவோம்; நீதிமன்றத் தீர்ப்பு எங்களைக் கட்டுப் படுத்தாது என்று கூறுவதை யாரால்தான் ஏற்க முடியும்?'' என எழுதலாம்.

7.101 இதில் சுமார் அரசு பொறிஇயல் கல்லூரிகள் குறைந்த அளவுதான் உள்ளது.

சுமார் என்னுஞ் சொல்லைப் பயன் படுத்தினால் ஏதேனு மொரு எண்ணிக்கையைத் தர வேண்டும். அதனைத்தர இயலாதாயின், சுமார் என்பதை அகற்றி விட்டுக் குறைந்த அளவுதான் உள்ளது என எழுதிவிட வேண்டியதுதான். உள்ளது என்பது பொருந்தாது; உள்ளன என்னும் பன்மையே இங்குப் பொருந்தும். ஆகவே இத் தொடரை, ''இதில் அரசுப் பொறியியல் கல்லூரிகள் குறைந்த அளவில்தான் உள்ளன'' என எழுதி விடுவோமா?

7.102 500M.L. ஆரோக்கியாமில்க் மீது ரூ. 3/- தள்ளுபடி.

இது துண்டறிக்கை வாயிலாகச் செய்யப்பட்ட தொரு விளம்பரத்தில் உள்ளது. மில்லி லிட்டர் என்பதை மி.லி என்று குறிப்பிடாமல். M.L. என ஆங்கில எழுத்துகளாலேயே குறித்துள்ளனர். பால் மீது மூன்று ரூபாய் தள்ளுபடி என்பது சரியா? பால் விலையில் மூன்று ரூபாய் தள்ளுபடி என்பது சரியா? எண்ணிப் பாருங்கள்.

7.103 இந்தக் குழந்தை கௌதமாலா நாட்டில் ஒட்டிப் பிறந்த இரட்டையர்களில் ஒன்று.

குழந்தை உயர்திணைக்குரியவைகளை நன்கு பெற்றிராத காரணத்தால் அது. அஃறிணை போலக் கருதப்பட்டுக் குழந்தை பிறந்தது; குழந்தை அழுகிறது எனக் கூறுகிறோம். இங்கும் குழந்தை என்னும் எழுவாய்க்கு ஒன்று என்னும் அஃறிணை

முடிவே தரப்பட்டுள்ளது. குழந்தை ஒருவன் என்றோ, ஒருத்தி என்றோ, ஒருவர் என்றோ உயர்திணை முடிவு தரப்படவில்லை. ஆயினும் 'ஒட்டிப் பிறந்த இரட்டையர்களில்' என்பதில் இரட்டையர் என உயர்திணைச் சொல் ஆளப்பட்டிருப்பது தவறாதலால் அங்கும், இரட்டைகளில் ஒன்று என அஃறிணைச் சொல்லே ஆளப்பட்டிருத்தல் வேண்டும்.

7.104 ஒரு புலன் விசாரணைப் பத்திரிகை நடத்த முக்கிய மாக என்ன தேவைகள்.

இங்கு ஒரு புலன் விசாரணைப் பத்திரிகை நடத்த முக்கியமாக என்பது வரையில் சரி; அதன் பின் உள்ள 'என்ன தேவைகள்' என்னும் இரு சொற்களையும் கூர்ந்து நோக்க வேண்டியுள்ளது. என்ன என்பது ஒருமையாகவும் தேவைகள் என்பது பன்மையாகவும் அமைந்து முரணுகின்றன. ஆகவே அவற்றை என்ன தேவை? எவை தேவை? தேவை யாது? தேவைகள் யாவை? என்பன போல் இரு பால்களும் இணையுமாறு அமைத்தலே தகும்.

7.105 இன்னும் இரண்டு நாளில் கேரளாவில் தென் மேற் குப் பருவ மழை தொடங்கும்?

இரண்டு நாள்களில் என்னாது, இரண்டு நாளில் என்பதற்கும் இலக்கணம் உண்டு. இங்கு நாம் கருத வேண்டுவது பருவமழை தொடங்கும்? என வினாக் குறியுடன் முடிக்கப் பட்டிருப்பதையே. இதை எழுதியவர் இன்னும் இரு நாள்களில் தென் மேற்குப் பருவ மழை தொடங்குமா? என்னும் அய்ய வினாவையே இங்கு எழுப்புவதாக எண்ணியுள்ளார். (?) இவ்வாறு இடப்படும் வினாக் குறி வினாப் பொருளைத் தரும் எனக் கருதி அதனை அவர் அங்கு இட்டுள்ளார். வினாக்குறி அங்கு வினாப் பொருள் தரும் எழுத்தோ சொல்லோ உள்ளது என்பதை உணர்த்துமா? அன்றி அதுவே வினாப் பொருளைத் தருமா? அது ஒரு குறியே

அன்றி அதுவே வினாப் பொருளைத் தரும் எழுத்தோ சொல்லோ அன்று. சாலைகளில் குறுகிய பாலம் உள்ளது என்பதைக் காட்டும் குறி சற்றுத் தொலைவில் குறுகிய பாலம் உள்ளது என்பதை அவ்வழியாகச் செல்வோர்க்கு உணர்த்த வல்லதே யன்றி, அதுவே குறுகிய பாலமாகிவிட முடியாதே. அவ் வாறே வினாக்குறி முதலியவை இது வினா என்பது போன்றவற்றைப் படிப் போர்க்கு உணர்த்தும் குறிகளே யன்றி அவையே, வினா முதலிய அப் பொருள்களைத் தர முடியாதவை என்பதை நாம் உணர்வோமாக.

7.106 இப்போதும் செயலலிதா பா.ச.க. ஆதரவைக் கை விட்டு விட்டார்; அராசகம், அட்டூழியம், அக்கிரமம் என்பதெல்லாம் ஒரு பொருட்டல்ல என்று கூறி...

அராசகம், அட்டூழியம், அக்கிரமம் எனப் பலவற்றையும் குறிப்பிடுவதால் என்ப தெல்லாம் என்னும் (என்பது + எல்லாம்) ஒருமையைப் பயன்படுத்தல் கூடாது. ஆகவே அங்கு, 'என்பன வெல்லாம்' என்னும் பன்மை வாய்பாட்டுச் சொல்லைப் பயன்படுத்துவதே ஏற்றது என அறிக. பொருட்டு என்பதை விடப் பொருள்களல்ல எனில், மேலும் ஏற்புடையதாகும். அப்போது அங்கு 'ஒரு' என்னுஞ் சொல் தேவையற்றதாகிவிடும். பொருட் படுத்தத் தக்கனவல்ல என்பதும் கருதப்பட வேண்டியதே.

7.107 மோனிகா பற்றியும் அதில் கொதித்தெழுந்து விட்டார்.

'அதில்' என்பது பேச்சிலோ எழுத்திலோ ஏதேனும் ஏற்ற ஒன்றைச் சுட்டுவதாகக் கருதிக் கொள்ளலாம். கொதித் தெழுந்து விட்டார் என்பது, கடுமையாகப் பேசிவிட்டார் அல்லது எழுதிவிட்டார் எனப் பொருள் படக் கூடும். நேரடியாகக் கூறுவதானால், 'மோனிகா பற்றியும்' அதில் தம் வெறுப்பை, (அ) சீற்றத்தை வெளிப்படுத்தி விட்டார் என்ன லாமா?

7.108 நாட்டு விடுதலைக்கான பற்பல திட்டங்களைத் தன் இதயத்தின் சுவர்களிலே தீட்டிக் கொண்டான். திட்டத்தின் படி செய்யவும் ஆரம்பித்து விட்டான்.

முழுமையைக் குறிக்கப் பற்பல திட்டங்களையும் என உம்மை கொடுத்துச் சொல்லி யிருக்கலாம். தீட்டிக் கொண்டு விட்டான் என்றால் மேலும் சிறப்பாக இருக்குமோ? எண்ணிப் பார்த்திடுக.

7.109 மனித இனத்தின் அய்ந்தில் ஒரு பங்கு இந்துக்களின் மதச் சுதந்திரம் பாதுகாக்கப் பட வேண்டும் என்ற கடமை உணர்வு ஏற்பட்டது.

அய்ந்தில் ஒரு பங்கு இந்துக்களா? அய்ந்தில் ஒரு பங்கு சுதந்திரமா? எனும் அய்யமும் அதை யொட்டிய குழப்பமும் வராதிருக்க வேண்டுமாயின், மனித இனத்தில் அய்ந்தில் ஒரு பங்கினராகிய அல்லது அய்ந்தில் ஒரு பங்கு உள்ள இந்துக்களின் மதச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்னும் கடமை உணர்வு ஏற்பட்டது என்றாற் போல இத் தொடர் அமைக்கப்பட வேண்டும்.

7.110 அமெரிக்கா பிரிட்டிசுப் படைகள் ஈராக்கை விட்டு வெளியேற வேண்டும்...

அ. அமெரிக்காவைச் சேர்ந்த பிரிட்டிசுப் படைகளா?

ஆ. அமெரிக்காவையும் பிரிட்டனையும் சேர்ந்த படைகளா?

இ. அமெரிக்கப் படைகளும் பிரிட்டிசுப் படைகளுமா?

இவ்வாறு அய்யம் எழாதிருக்க இத் தொடர், பின் வருமாறு மாற்றி அமைக்கப்படல் வேண்டும்.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றின் படைகள் ஈராக்கை விட்டு வெளியேற வேண்டும்.

7.111 தா.கி. கொலை வழக்கில் முபாரக் மந்திரியும் இப்ராகிம் சுல்தான் சேட் ஆகிய 2 பேருந்தான்...

நல் வாய்ப்பாக இதை எழுதிய நண்பர் 2 எனத் தொகை தந்து விட்டார். இல்லாவிட்டால் முபாரக், மந்திரி, இப்ராகிம், சுலைமான் சேட் எனப் பலர் வந்து புகுந்து கொள்வர். மந்திரியும் என்று உம்மை தந்துள்ளாரே என்றால் இப்ராகிம் சுல்தான் சேட்டும் என உம்மை தராததால் இப்படிக் குழப்பம் நேர்வதைத் தவிர்க்க முடியாது. மந்திரி முபாரக்கைச் சேருமா, இப்ராகிம்மைச் சேருமா என்பதும் புலப்படக் காணோம்.

7.112 ஏற்கனவே திருமணமான, கர்ப்பமாக உள்ள, குழந்தைகள் பெற்றவர்கள் மீண்டும் திருமணம் செய்து கொண்ட வேடிக்கையும் நடந்தது.

சிறு கோட்டின் (-) மேல் பெருஞ் சுமையை ஏற்றித் தடுமாற வைத்தது போன்றே காற் புள்ளியின் (,) மேலும் பல எழுத்தாளர்கள் ஏலாப் பெருஞ் சுமைகளை ஏற்றித் தத்தளித்துத் தடுமாற வைத்து விடுகின்றனர். இதை எழுதியவரும் இத் தொடரில் திருமணமான, கர்ப்பமாக உள்ள, என்று காற்புள்ளி வைத்து விடுவதால் எல்லாம் சரியாகப் போய்விடும் என்று கருதி அவற்றை அமைத்து மன நிறைவு பெற்றுவிட்டார். கர்ப்பமாக உள்ள குழந்தைகளைப் பெற்று என்றால் அறிவு வளைந்து ஒடிந்து விழுந்து விடுகிறதே அய்யா. ஆகவே ஏற்கனவே திருமண மானவர்களும், கர்ப்பமாக உள்ளவர்களும், குழந்தைகளைப் பெற்றவர்களும் மீண்டும் திருமணம் செய்து கொண்ட வேடிக்கையும் நடந்தது எனத் தக்க இடைச் சொற்களைச் சேர்த்து எழுதிப் படிப்போரைப் பாதுகாப்போமாக.

7.113 1008 சோடிகளுக்குக் கடந்த ஆண்டு திருமணம் நடத்தியாகிவிட்டோமே என்று முதல்வர் செயலலிதா கூறியதால்...

யாராலுங் கற்பனையாகவும் எண்ணிப் பார்க்க முடியாத ஒரு சொல்லை இச் செய்தியாளர் படைத்துக் கொண்டாரா? அன்றி அதைக் கூறியவரே அப்படிக் கூறினாரா என நாமறியோம். நடத்தியாகி விட்டோமே என்றால் நடத்தியதால் இவர்களே ஆகிவிட்டார்களோ? தீர்ந்து விட்டார்களோ? அன்றி நடத்தி ஆகிவிட்டோமே என்றால் நடத்தி என்ன வாக ஆகிவிட்டார் களாம்? நடத்தி விட்டோமே, நடத்தித் தீர்த்து விட்டோமே, நடத்தி முடித்து விட்டோமே என்பன போன்ற வேறொரு தக்க சொல்லே இவ் விடத்துக்கு ஏற்றதாக இருக்க முடியும்.

7.114 குடியரசுத் தலைவர் இன்று சென்னை மற்றும் காஞ்சிபுர மாவட்டத்தில் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

இச் சொற்றொடர் தமிழாக அமைந்திருக்க வேண்டுமாயின் குடியரசுத் தலைவர், இன்று, சென்னை, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் நடக்கும் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார் என்றுதான் இருக்க வேண்டும்.

7.115 செருப்பைப் பார்க்கையில், நீங்கள் அணிந்திருக்கிற வனின் காலைப் பார்க்கிறீர்கள்; நான் செய்தவனின் கையைப் பார்க்கிறேன்.

செருப்பைச் செய்தல் என்னும் மரபில்லை. சட்டையைச் செய்தல் என்கிறோமா? சட்டை தைக்கப் படுவதைப் போன்றே செருப்பும் தைக்கப் படுவதே.

செருப்பைப் பார்க்கையில் என்பதனை யடுத்து அதில் என மற்றொரு சொல்லைச் சேர்த்த தெழுதிப் படித்துப் பார்க்கலாமா?

7.116 பொருளுக்காக அயல்நாடு போவது தமிழர் பாணியில் 'திரைகடல் ஓடித் திரவியம் தேடுவது'' கிரேக்க ரோம வழக்கங்களிலில்லை.

பொருளுக்காக அயல் நாட்டுக்குப் போவது தமிழர் பாணியில் கூறினால், 'திரைகடல் ஓடித் திரவியம் தேடுவது' கிரேக்க உரோமர் வழக்கங்களிலில்லை எனச் செப்பனிட்டால் இஃது ஓர் இனிய செந்தமிழ்த் தொடராயிலங்கக் காணலாம்.

7.117 கழகத்திலிருந்து நான் விலகிவிட்டதாக ஒரு நாளிதழ் செய்தி வெளியிட்டிருப்பது உண்மை யல்ல என்றும் நான் கழகத்திலிருந்து விலக வில்லையென்றும் மானாமதுரைப் பேரூராட்சி முன்னாள் கவுன்சிலரும் கழக இளைஞரணித் துணை அமைப்பாளரும் கிளைக் கழகச் செயலாளருமான கே. போசு மறுத்துள்ளார்.

இதுவும் ஒரு நற்றமிழ்த் தொடராயிலங்கத் தலைப்பிலும் இடையிலும் உள்ள நான், நான் என்பனவற்றைத் தான் தான் என்று திருத்தத் தவறக் கூடாது.

7.118 பயந்துபோன செய சர்மிளா வீட்டில் மண் எண்ணெய் ஊற்றித் தீக் குளித்துக் கொண்டாள்.

தீக்குளித்தாள் என்றால் போதாதா? குளித்துக் கொண்டாள் எனல் வேண்டுமா? சாப்பிட்டாள் என்பதைச் சாப்பிட்டுக் கொண்டாள் என்றா சொல்கிறோம். குத்தினாள் என்றால் குத்துப் பட்டவர் யார் என்னும் வினா எழும். அதனால் குத்திக் கொண்டாள் என்பது தேவை. குளித்தாள் என்றால் குளித்தவள் தானே என்பது தெளிவாக தெரியும். அதனால் குளித்துக் கொண்டாள் என்பது மிகை.

7.119 மனித நாகரிகம் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் எப்படி வளர்ந்தது என்பதைத் தனது ஒப்பற்ற நூலாகிய 'வால்காவிலிருந்து கங்கை வரை'யில் நமக்குச் சொல்கிறார்.

மனித நாகரிகம் எப்படி வளர்ந்தது என்பதை 'வால்காவி லிருந்து கங்கை வரை'யில் சொல்கிறார். வால்காவிலிருந்து கங்கைக் கரை போகிற வரை நமக்குச் சொல்கிறார் என்று பொருள் கொண்டுவிடாதபடி, தமது ஒப்பற்ற நூலாகிய என்பது தடுத்து விடுகிறது. மேலே நூல் என்பது குறிக்கப் படுவதால் வால்காவிலிருந்து கங்கை வரை என்பதில் என்றாவது சொல்லியிருக்க வேண்டும். சொல்கிறார் என உயர்வுப் பன்மை யளிக்கப் பட்டிருப்பதால் எழுவாயாகிய 'தன்' என்பதைத் 'தம்' என்று மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும்.

7.120 இந்தக் கூட்டத்தில் நிதித் துறைச் செயலாளர் நாராயணன், பொதுத்துறைச் செயலாளர் பிச்சாண்டி, பணியாளர் துறைச் செயலாளர் மெய்கண்ட தேவன், மற்றும் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

மற்றும் செயலாளர்கள் என்பது யாரைக் குறிக்குமோ தெரியவில்லை. பிற செயலாளர்கள் எனக் கூற வேண்டியதைத் தான் மற்ற செயலாளர்கள் அல்லது மற்றும் சில துறைச் செயலாளர்கள் என்று கூறிவிட்டாரோ இந் நண்பர். ஆகியோர் என்பதைச் சேர்ப்பது இன்றியமையாதது என்பது நாம் அறிந்ததுதானே.

7.121 நானும் அப்படிக் கூட்பிடலாமா? தாராளமா அப்படிக் கூப்பிடலாம் மட்டும் இல்லே. அப்படித்தான் கூப்பிடணும்.

'மட்டும் இல்லே' என்று மட்டும் சொன்னால் போதுமா? 'என்பது மட்டும் இல்லே' என்று என்பதைச் சேர்த்துச் சொல்ல வேண்டாவா? 'தாராளமாக; அப்படிக் கூப்பிடலாம் என்பது மட்டும் இல்லை. அப்படித்தான் கூப்பிட வேண்டும்' என்பதே நல்லது.

7.122 வெறியுடன் அலையும் காட்டு மிராண்டிகள் என ஒட்டு மொத்த ஊடகமும் ஒரே குரலில் பரப்புரை செய்து வரும் கொடூரம்.

ஒட்டு மொத்த ஊடகமும் என்பதிலுள்ள 'ஒட்டு மொத்தம்' என்பது இக் காலத்தார் சிலர் ஆளும் புதிய வரவாகும். மொத்த ஊடகமும் என்பதற்கு எஞ்சாமை சேர்க்க வந்ததுதான் ஒட்டு. எனவே ஒட்டுமொத்த ஊடகம் என்றால் ஒன்று கூட எஞ்சாமல் எல்லா ஊடகங்களும் என்பது பொருள்.

7.123 செயலலிதா அரசுக்கு அண்மையில் கிடைத்த பாராட்டு ஒன்றைக் குறிப்பிடுங்களேன்.

குறிப்பிடுங்கள்; ஏன் அதைக் குறிப்பிடத் தயங்குகிறீர்கள்; ஏன் அதைக் குறிப்பிட அஞ்சுகிறீர்கள் என்பன போன்ற சிறப்புப் பொருளைத் தருவதே 'குறிப்பிடுங்களேன்' என்பது. இது சில வட்டாரங்களில் மட்டும் ஆளப்பெறும் தொடர் மொழி போலும். உங்களால் அதைக் குறிப்பிட முடியாது; முடியுமானால் குறிப்பிடுங்கள் பார்க்கலாம் என்னும் பொருளில் குறிப்பிடுங்களேன் பார்க்கலாம் என்பதும் உண்டு. இத் தகைய சிறப்பு மொழிகளின் ஒளியும், கூர்மையும் மங்காமலும் மழுங்காமலும் பேணப் படல் நம் கடமை யன்றோ?

7.124 **தலைப்பு :** மோட்டார் பைக்கில் இருந்து சருக்கி விழுந்து தலைமைக் காவலர் சாவு.

செய்தி : மோட்டார் பைக்கில் செல்லும் போது சருக்கி விழுந்து தலைமைக் காவலர் வேதபுரி (46) ஞாயிற்றுக் கிழமை இரவு இறந்தார்.

விளக்கம் : சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே மோட்டார் பைக் சருக்கியதில் கீழே விழுந்தார்.

ஒரே ஏட்டில் ஒரே செய்தியாளர், ஒரே இடத்தில், ஒரே செய்தியை மூன்று வேறு வடிவங்களில் எழுதியுள்ளமை வியத்தகு உண்மையாகும்.

தலைப்பில் 'மோட்டார் பைக்கிலிருந்து சருக்கி விழுந்த தாகவும்', உள்ளே செய்தியில் 'மோட்டார் பைக்கில் செல்லும் போது சருக்கி விழுந்ததாகவும்', விளக்கும் போது 'மோட்டார் பைக் சருக்கியதால் கீழே விழுந்ததாகவும்' தரப்பட்டுள்ளது. ஊர்தி சருக்கி விழுந்ததா? ஊர்தியில் சென்றவர் சருக்கி விழுந்தாரா? ஊர்தி சருக்கி விழுந்ததால் அதில் சென்றவர் கீழே விழுந்தாரா? பைக்கிலிருந்து ஒருவர் சருக்கி விழ முடியுமா? பைக்கில் செல்லும் போது இவர் ஏன் அல்லது எப்படிச் சருக்கி விழுந்தார்? பைக் சருக்கி விழுந்ததால் விழுந்தாரா? பைக் சருக்கியதால் விழுந்தாரா? நமக்கு அய்யங்களும் குழப்பங்களும் போதுமானவை கிடைத்து விட்டன என்று கருதுவோமாக.

7.125 நடிகை காதலன் தாயார் நாகமணி சரமாரி கேள்வி.

அ. நடிகை
ஆ. காதலன் சரமாரி கேள்வி
இ. தாயார்
ஈ. நாகமணி

'அ' முதல் 'ஈ' வரையுள்ள நான்கு பெயர்களும் காரை முதலியன இல்லாமல் அடுக்கி வைக்கப்பட்டுள்ள செங்கற்கள் போல் உள்ளன.

7.126 வீடு புகுந்து திருடிய ரூ. 1 லட்சம் பொருள்கள் மீட்பு. (செய்தித் தலைப்பு)

திருடிய பொருள்களா? திருடப்பட்ட பொருள்களா? ரூ. 1 இலட்சமே பொருளா? ஒரு இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொருள்களா? படிப்போருக்கு ஏற்படக்கூடிய இந்த அய்யங்களாகிய கடனை இதை எழுதியவர் எப்போது தீர்ப்பார்? எப்படித் தீர்ப்பார்?

7.127 அந்த நேரத்தில் பூமிதார் (நிலக்கிழார்) மனைவி எழுபது வயது கிழவி இறந்து விடுகிறாள்.

மனைவியும் கிழவியும் என்று பொருள் கொண்டு விட முடியாதபடி, விடுகிறாள் என்னும் பயனிலையின் ஒருமை தடுத்து விடுகிறது. மனைவியாகிய கிழவி என்று இணைப்புத் தந்து எழுதுவதில் எழுதியவருக்கு என்ன துன்பமோ?

7.128 இவருடைய கொள்கைகள், அமெரிக்க அய்க்கிய நாடுகளின் நிறுவனத் தந்தையர்கள் மீதும், பிரஞ்சு மறு மலர்ச்சி இயக்கத்தில் பல முன்னணித் தத்துவ ஞானிகள் மீதும் பேரளவுக்குச் செல்வாக்குச் செலுத்தியது எனில் மிகையன்று.

இயக்கத்தின் பல முன்னணித் தலைவர்கள் என்பதற்கு மாறாக இவ் வெழுத்தாளர் 'இயக்கத்தில்' என எழுதியது கவனக் குறைவாகவே இருக்கக் கூடுமென்று கருதுகிறோம். மற்று,

அ. இவருடைய கொள்கைகள் தந்தையர்கள், முன்னணித் தத்துவ ஞானிகள் ஆகியோரால் பெருமளவு பின்பற்றப்பட்டன எனில் மிகையன்று,

ஆ. இவருடைய கொள்கைகளைத் தந்தையர்கள், தத்துவ ஞானிகள் ஆகியோர் பெருமளவு பின்பற்றினர் எனில் மிகையன்று, என்பன போல் எழுதுவதற்கு மாறாக, ஆங்கிலக் காம வயப்பட்டுத் தலைப்பி லுள்ளவாறு எழுதத் தலைப்பட்டு விட்டனர் தமிழ் எழுத்தாளர் பலர். கொள்கைகள் எனும் பன்மை எழுவாய்க்குச் செலுத்தின எனும் பன்மைப் பயனிலைதானே தர வேண்டும்?

7.129 இந்தியாவிலே பட்டினியால் வாடுபவர்களின் எண்ணிக்கை 23 கோடி பேர் என்று...

இந்தியாவிலே பட்டினியால் வாடுபவர் இருபத்து மூன்று கோடி பேர் என்று... என்றோ, இந்தியாவிலே பட்டினியால் வாடுபவர்களின் எண்ணிக்கை இருப்பத்து மூன்று கோடி என்று... என்றோ எழுதுவதுதான் சரி என்று இதனைப் படிப்போராகிய தங்களுக்கு இப்போது நன்கு தெரிந்திருக்குமே.

7.130 குமாரசாமி எழுதிய நூல்கள் கட்டுரைகள் யாவும் கீழைத் தேசப் பண்பாட்டைப் புரிந்து கொள்ளவும், இந்தியக் கலை, கலாச்சார, ஆன்மீகத், தத்துவப் பெறுமானங்களின் உயிர்ப்பை அனைவரும் தெரிந்து கொள்ளவும் அறிவுக் கருவூலமாகவே இயங்கி 9.9.1947ல் இயற்கை எய்தினார் ஆனந்த குமாரசாமி.

கட்டுரைகள் போன்ற யாவும் என இணைப்புத் தருவோமே. 'தத்துவப் பெறுமானங்களின் உயிர்ப்பு' என்பது தமிழ் மொழி நடையோடு ஒட்டாத அயல் மொழிப் பாங்கு. மரக்காலின் மேல் நின்று கொண்டு நடப்பது போல் இருக்கிறது. அதன் ஆங்கிலப் பகுதியை நினைவுக்குக் கொணர முடிந்தவர்களுக்கு மட்டுமே அது விளங்கும். இதை எழுதியவரே அந்தப் பகுதியை மறந்து விட்டு இதைப் படிப்பாராயின் திணரவே நேரும். 9.9.1947-இல் என எழுத வேண்டுமன்றோ? இயங்கின, அவர் 9.9.1947-இல் இயற்கை எய்தினார் என்றும் எழுதுதல் நன்றேயன்றோ?

7.131 காடு, மலைகளில் தாம் இருக்கும் இடத்தைத் தம் இனத்தாருக்குத் தெரிவிக்கவும், மிருகங்களைத் துரத்தவும் பயன்படுத்தினர்.

காடுகளிலும், மலைகளிலும் என்றோ காடு மலை ஆகியவற்றில் என்றோ எழுதுவதுதானே முறை.

7.132 சிறுவனாக இருக்கும் போதே அவர் புத்திக் கூர்மையுடன் காணப்பட்டார்.

சிறுவனைச் 'சிறுவனாக இருக்கும் போதே' எனக் குறிப்பிடுவது தவறற்றதே யாயினும், 'புத்திக் கூர்மையுடன் காணப்பட்டார்' எனப்பட்டவரின் இளமைப் பருவத்தைச் 'சிறுவராக இருக்கும் போதே' என உயர்த்திக் கூறுவதுதானே தக்கது?

7.133 சென்னைக்குக் குடிநீர் வழங்குவதற்காகக் கிருட்டிணா நதி நீர்த் திட்டம் திட்ட மிடப்பட்டது.

இதனைச் 'சென்னைக்குக் குடிநீர் வழங்குவதற்காகக் கிருட்டிணா நதி நீர்த் திட்டம் வகுக்கப்பட்டது' என்றோ,

'சென்னைக்குக் குடிநீர் வழங்குவதற்காகக் கிருட்டிணா நதி நீரைக் கொணரத் திட்ட மிடப்பட்டது' என்றோ எழுதுவது சரியாயிராதா?

7.134 நெல்லை மனோன்மணியம் சுதந்தரனார் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக் கழகங்களின் முன்னாள் விரிவுரையாளர்...

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார், சென்னைப் பல்கலைக் கழகங்களின் முன்னாள் விரிவுரையாளர்... எனக்குறிப் பிடலாம். அதனிலும் சிறப்பாகப் பின்வருமாறு குறிப்பிடலாமே. நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் முன்னாள் விரிவுரையாளர்...

7.135 நமக்குத் தேவையான இந்த வாக்கு மூலத்தில் இடம் பெற்ற மிக முக்கியமான விசயத்தை அன்றைய முகமதியர்கள் வேண்டுமானால் மறந்திருக்கலாம்.

வாக்கு மூலத்தில் இடம் பெற்றுள்ள எனில் மிகச் சிறப்பாகக் கூறியதாகுமே. இவர், முகமதியர் என்றது முசுலிம்களை யன்று என்றும், முசுலிம்களில் முகமது நபியவர்களை இசுலாத்தின் கோட்பாடுகளுக்கு மாறாக மிகைப்பட மதிப்பவர்களையே என்றும் கருத இடமிருக்கிறது.

7.136 இதனால் ஓட்டப் பந்தயத்தின் போது வேகமாக ஓடி வந்த பெண்கள் சிலர் சகதியில் சிக்கிக் கீழே விழுந்து கால் வீங்கியது.

சகதி எனில் சேறு என்பதுதானே பொருள்? சகதியில் சிக்கிக் கீழே விழுந்தவர்களுக்குக் கால் வீங்கும் என்பது எமக்கு விளங்கவில்லை. இவ் வெழுத்தாளர் வேறு எதையோ எண்ணி இதனைச் சொல்லிவிட்டார் போலும்.

7.137 வாசகர்களே! உங்கள் பகுதிகளில் உள்ள குறை களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக் குக் கொண்டு செல்லக் கடிதம் மூலமாக எங்களுக் குப் புகார் அனுப்பலாம்.

வாசகர்கள், தங்கள் பகுதிகளில் உள்ள குறைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லக் கடிதம் மூலமாக அவற்றை எங்களுக்குத் தெரிவிக்கலாம் என்றோ,

வாசகர்களே! உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளைச் சம்பந்தப் பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லக் கடிதம் மூலமாக அவற்றை எங்களுக்குத் தெரிவியுங்கள் அல்லது எழுதுங்கள் என்றோ எழுதுவதே பொருத்த மானது.

7.138 காண முடியாத தெய்வீகத்தின் முடிவற்ற அந்தமிலா ஒரு பொருளின் குறியீடாகும் அது.

முடிவற்ற என்பதற்கும் அந்த மிலா என்பதற்கும் உள்ள வேறுபாடு முடிவு தமிழ்; அந்தம் சமற்கிருதம் என்பது தவிர வேறென்ன? காணமுடியாத தெய்வீகம், முடிவற்றதாய ஒரு பொருள் ஆகியவற்றின் குறியீடாகும் அது என்பது சாலப் பொருத்தமான தொடர் என எண்ணுகிறோம். படிக்கும் நுமது எண்ணம் யாதோ?

7.139 சுவாசப் புத்துணர்ச்சி மணிக்கணக்கிற்கு

இதனால் நம் சுவாசத்தில் ஏற்படும் புத்துணர்ச்சி மணிக்கணக்கில் நீடித்திருக்கும் என்பதை அடித்து, ஒடித்து, நசுக்கி, நொறுக்கி, பிழிந்து, 'சுவாசப் புத்துணர்ச்சி மணிக் கணக்கிற்கு' என்றாக்கி விட்டாரோ இவர்.

7.140 அ. எந்த நோய்க்கு எந்த எந்த மருத்துவர்கள் சிறந்தவர்கள்...

ஆ. எந்த எந்த நோய்க்கு எந்த எந்த மருத்துவர்கள் சிறந்தவர்கள்.

மேல் தரப்பட்டுள்ள அ, ஆ என்னும் இரண்டில் எச் சொற்றொடர் சரியாக உள்ளது என்று காண்க. இரண்டும் ஒரே பொருளைத் தருவனவா? இல்லை என்பதே எமது நினைப்பு. அ என்னும் முதல் தொடருக்கு,

எந்த ஒரு நோய்க்கு எந்த எந்த மருத்துவர்கள் சிறந்தவர்கள் எனப் பலரின் முகவரிகள் தரப்படும்.

'ஆ' என்னும் இரண்டாந் தொடருக்கு, இன்ன இன்ன (இத்தகைய) நோய்க்கு இந்த இந்த மருத்துவர்கள் சிறந்தவர்கள் எனப் பல நோய்களில் ஒவ்வொன்றுக்கும் பற்பலரின் முகவரிகள் தரப்படும்.

முதல் தொடரே நம் எழுத்தாள நண்பரால் எழுதப்பட்டது. இரண்டாந் தொடர் முதல் தொடரை விளக்க எம்மால் எழுதப்பட்டது. இரண்டாந் தொடர்ப் பொருளை நினைத்தே அவர் முதல் தொடரை உருவாக்கியிருப்பார் என யாம் கருதுகிறோம்.

7.141 காசி நகரில் கங்கையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

காசி நகரிலும் கங்கையிலும் வெள்ளம் பெருக் கெடுத்து ஓடுகிறது என்கிறாரா இவர்? காசி நகருக்குள் கங்கையாற்றின் வெள்ளம் பெருக் கெடுத்து ஓடுகிறது என்பதையே இவர், அப்படி எழுதித் தாமும் இடர்ப்பட்டு நம்மையும் இடர்ப்பட வைத்து விட்டார் போலும்.

7.142 அ. ஆயினும் நம்மிற் பலர் அப் பழம் பெரும் நூல் களின் பெருமைகளை அறியாதிருக்கிறோம்.

ஆ. ஆயினும் நம்மிற் பலர் அப் பழம் பெரும் நூல் களின் பெருமைகளை அறியாதிருக்கிறார்கள்.

மேலுள்ள இரு சொற்றொடர்களிலும் எது செம்மையானது என்று முடிவு செய்க. முதலில் உள்ளது வழுவற்றது என்பது தானே நுமது எண்ணமும். நம்மிற் பலர் என்னும் தன்மைப் பன்மை எழுவாய்க்கு அறியாதிருக்கிறோம் எனத் தன்மைப் பன்மைப் பயனிலையே சரியானது.

இரண்டாந் தொடரில் நம்மிற் பலர் என்னும் தன்மைப் பன்மை எழுவாய்க்கு அறியாதிருக்கிறார்கள் என படர்க்கைப் பன்மைப் பயனிலை தரப்பட்டுள்ளமை சரியானதாகாதே.

7.143 குடிப்பழக்க முடையவர்கள் முதலியோர் உச்சி வெயிலைத் தவிர்த்தல் நல்லது.

அ. குடிப்பழக்க முடையவர்கள் முதலியோர் உச்சி வெயிலைத் தவிர்த்தல் நல்லது.

ஆ. குடிப்பழக்கம் முதலியன உடையோர் உச்சி வெயிலைத் தவிர்த்தல் நல்லது.

மேலுள்ள இரண்டையும் ஒப்பிட்டும் உறழ்ந்தும் நோக்கு வதன் மூலம் நம் சிந்தனைக்கு வேலை தந்து மகிழ்வோமாக.

7.144 எண்ணெய்க் கணவனை இழந்து போனதால் வெந்நீர் வடிக்கும் விதவை விளக்குகள்.

எண்ணெய் ஊற்றி ஏற்றப்படும் விளக்குகளில் உள்ள எண்ணெய் தீர்ந்து விட்ட நிலை இங்கு இவ்வாறு வருணித்துப் பா நலம் தோன்ற புனையப் பட்டுள்ளது. விளக்கு (தீ) மனைவி; எண்ணெய் கணவன்; எண்ணெய் தீர்ந்த விளக்கு கணவனை யிழந்த கைம் பெண். அப்போது அதிலிருந்து சூடாக ஏதேனும் நழுவு மாயின் (சுடுநீர்) அது அக் கைம் பெண்ணின் கண்ணீர். உரைப்பாட்டு எனப்படும் இது பண்டைய உரைநடை. அது இன்று புதுக் கவிதை, வசன கவிதை எனப்படுகிறது.

அ. எண்ணெய்க் கணவனை இழந்து போனதால்

ஆ. எண்ணெய்க் கணவனை இழந்து விட்டதால்

என்னு மிவ் விரு தொடர்களிலும் விழுமிய தொடர் எது எனக் காண்க.

இ. எண்ணெய்க் கணவன் இழந்து போனதால் இது முற்றிலும் வேறானது.

7.145 அ. எந்த ஒரு வன்முறைச் செயலிலும் ஈடுபட்டு அதன் காரணமாகக் கைது செய்யப்பட்டார்கள் என்று இந்த அரசைக் கண்ணை மூடிக் கொண்டு ஆதரிக்கும் ஏடுகளில்கூட ஒருவரிச் செய்தி வரவில்லை என்பது தான் உண்மை.

ஆ. ...ஆதரிக்கும் ஏடுகளில் கூட ஒருவரிச் செய்தி யும் வரவில்லை என்பதுதான் உண்மை.

ஆ எனும் பிரிவில் விளையும் பொருளின் திட்பமும் நுட்பமும், அ எனும் பிரிவிலுள்ள அப் பகுதியில் விளைய வில்லையே. 'உம்' என்னும் இடைச் சொல்லின் பொருளாற்றல் நன்கு புலப்படுமிட மிது வன்றோ?

7.146 தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களில் ஒரு பகு தியினர் 2ந் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறு த்தத்தை அறிவித்துள்ளனர்.

ஆகியோர் எனும் இணைப்புச் சொல்லை உரிய இடத்தில் பொருத்துக. 2ந் (இரண்டுந்) என்பதை 2 ஆந் (இரண்டாந்) என மாற்றுக. இவ்விரு மாற்றங்களுக்கும் பிறகு இத் தொடர் நற்றொடராகுமாறு காண்க.

7.147 இரத்தம் கொடுக்கப்பட்டதால்தான் தான் பிழைத் தேன் என்பதை அறிந்து கொண்ட அண்ணாச்சி இரத்தம் கொடுத்த நபரைப் பார்க்க விரும்பினார்.

அண்ணாச்சி விரும்பினார் என உயர்த்தி யிருப்பதால், தாம் பிழைத்தோம் என்னும் மாற்றம் வேண்டியது தானே? இதன் பின் அத் தொடரின் எழில் நலம் பின் வருமாறு துலங்கக் காண்பீர்கள்.

இரத்தம் கொடுக்கப்பட்டதால்தான் தாம் பிழைத்தோம் என்பதை அறிந்து கொண்ட அண்ணாச்சி இரத்தம் கொடுத்த நபரைப் பார்க்க விரும்பினார்.

7.148 ஃச்டிரைக் நீடித்தால் மக்கள் என்னாவது?

மேலுள்ள வினாவுக்குச் சுவை ததும்பும் விடை யாதெனில், 'அஃறிணை யாவது' என்பதேயாகும். மக்கள் என்னும் உயர்திணை எழுவாய்க்கு, 'என்னாவர்' என உயர்திணைப் பயனிலையே தரப்படவேண்டுமென்பது நாமறிந்தது தானே.

7.149 அ. எங்கெங்கெல்லாமிருந்து கொண்டு என்னென்ன வெல்லாம் செய்கிறார்கள்.

ஆ. எங்கெல்லாமிருந்து கொண்டு என்னவெல்லாம் செய்கிறார்கள்.

இவ் விரு தொடர்களையும் ஒப்பிட்டு ஆராயும் அன்பர்கள், இதே போன்ற தொரு வேறுபாட்டை முன் ஆராய்ந்த நினைவு உடையவராயிருப்பின் (7.140) எமக்கு இங்கு வேலை சிறிதும் இல்லை.

7.150 அரசு ஊழியர்களை டிஸ்மிஸ் செய்தது மட்டும் அல்லாமல் அவர்களைக் குடியிருக்கும் வீட்டை ஏன் காலி செய்ய உத்தரவு பிறப்பித்து உள்ளீர்கள்?

மட்டும் என்பதோடு ஒரு ஏகார இடைச் சொல்லைச் சேர்த்து மட்டுமே யல்லாமல், என்று எழுதிப் பாருங்கள். இரண்டு இரண்டாம் வேற்றுமைத் தந்து அவர்களை வீட்டை என்பது நன்றன்று. 'அவர்கள் தாம் குடியிருக்கும் வீட்டை' என்று

எழுதினால், அக் குறையும் நீங்கி மாசு துடைக்கப்பட்ட மணியாக இச் சொற்றொடர் ஒளிரக் காண்பீர்.

7.151 ஒவ்வொரு அரசு அலுவலர்கள் ஆசிரியர்கள் உணர்வு பூர்வமான தலைவர்களாக நினைத்துப் பல்வேறு தியாகத்திற்கும் தயாராகத் தமது கோரிக் கைகளை...

போதிய தமிழ்ப் படிப்பறிவறி வின்மையாற் போலும் இந்த நல்ல எழுத்தாளர் இப்படிக் குழம்பியும், குழப்பியும் இடர் விளைத்து விட்டார்.

அரசு அலுவலர், ஆசிரியர் ஆகியோர் ஒவ்வொருவரும் தம்மை, உணர்வு பூர்வமான தலைவராக நினைத்துப் பல்வேறு தியாகத்திற்கும் தயாராகத் தமது கோரிக்கைகளை...

இதுபோன்ற தொரு முறையில் அத் தொடர் அமைக்கப் பட்டிருக்கலாமே.

7.152 நீதி மன்ற அறிவுரை ஏற்க மறுப்பு எதிரொலி.

இது செய்தித் தலைப் பாதலால் பெரிய வடிவில் எழுத்துகள் அமைக்கப்பட வேண்டும். அதனால் ஏற்படக் கூடிய இட நெருக்கடியைக் குறைக்கச் செய்தியாளர்கள் எழுத்துகளையும், சொற்களையும் ஈவு இரக்க மின்றிக் குறைத்துத் தள்ளிவிடு கின்றனர். ஆனாலும் படுகொலையை ஏற்க எம் மனம் இடந்தரவில்லை.

நீதிமன்ற அறிவுரை; ஏற்க மறுப்பு; எதிரொலி எனத் தகுந்த நிறுத்தக் குறிகளையேனும் போடக் கூடாதா?

மறுப்பின் எதிரொலி என்பது போன்ற பொருட் குறையும் குறைந்து, இடக் குறையும் குறைந்து, இரண்டையும் குறைந்த குறையுடையனவாக அமைக்க முயலலாமே.

7.153 பெங்களூரில் புதன் கிழமை நடைபெற்ற 'டைமெக்சு' கடிகார நிறுவனத்தின் 100 கோடியா வது கடிகார விற்பனையைக் கொண்டாடும் விழா வில் காதில் கைக்கடிகாரம் அணிந்து ஒயிலாக நடந்து வரும் மாடல் அழகி.

நூறு கோடியாம் கடிகார விற்பனை என்று எழுதுவதே சரி. கோடியாவது என்பது சரியன்று; என்பதே அறிஞர்களின் கருத்து. கையில் அணிவதே கைக் கடிகாரம். காதில் அணிந்து வருவது கைக் கடிகாரமாவது எங்ஙனம்? மேசை மீது வைப்பதும், சுவரில் மாட்டுவது மாகிய எல்லாம் கைக் கடிகாரங்களா? ஆகவே 'காதில் கடிகாரம்' அணிந்து ஒயிலாக....' என எழுதுவதே சரி.

7.154 தமிழக எல்லை கடந்து, இந்திய எல்லை விரிந்து, உலக வானில் சிறகு விரிக்கும் எங்கள் கவிதைக் குயில்.

எடையைக் குறைக்க வேண்டும் என்பதற்காக உடலின் உறுப்புகள் சிலவற்றை சீவித் தள்ளுவது போல் இங்கும் தொடரின் உறுப்புகள் சிலவற்றைக் களைந்துள்ளனர்.

தமிழக எல்லையைக் கடந்து, இந்திய எல்லையினும் விரிந்து, உலக வான் வரையில் சிறகை விரிக்கும் எங்கள் கவிதைக் குயில் என எழுதி அதை முன்னதோடு ஒப்பிட்டுத் தெளிவு பெறுக.

7.155 இவற்றைப் பற்றியெல்லாம் ஒரு துளிகூட அமைச்சரின் பேச்சில் இடம் பெறவில்லை.

இத் தொடரில் உள்ள எல்லாம் என்பது அசை, அல்லது முரண் என்பது அதனைக் களைந்து விட்டுப் பார்த்தால் தெரியும்.

இவற்றைப் பற்றியது ஒரு துளிகூட அமைச்சரின் பேச்சில் இடம் பெறவில்லை. மேலும் இதையே,

இவற்றைப் பற்றிய ஒரு துளியும் அமைச்சரின் பேச்சில் இடம் பெறவில்லை என எழுதுவது மிகவும் சிறப்பாகும். இவை பற்றிய செய்தியில் அல்லது கருத்தில் ஒரு துளியும் அமைச்சரின் பேச்சில் இடம் பெற வில்லை என்பது அதனினும் நன்கமைந்திருப்பதைக் காண்பீராக.

7.156 அவர்கள் அனைவரும் அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகளுக்குள் செல்ல அனுமதிக்கப் படுவார்களா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

அவர்கள் அனைவரும் அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றுக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார் களா? என்னும் கேள்வி எழுந்துள்ளது.

என அதனைச் செம்மையாக அமைத்துக் கொள்வோமா?

7.157 .....அரசு ஊழியர், ஆசிரியர், தொழிலாளர் என்போர் எந்தத் துறையை அல்லது எந்தப் பிரிவைச் சேர்ந்தவராயினும் அவர்கள் மீது ஓர் ஒவ்வாமையை (Allergy) மக்களில் ஒரு பகுதியினரிடம் ஏற்படுத்தி வைத்துள்ளனர்.

...எந்தப் பிரிவைச் சேர்ந்தவராயினும் மக்களின் ஒரு பகுதியினருக்கு அவர்கள் மீது ஓர் ஒவ்வாமையை ஏற்படுத்தி வைத்துள்ளனர்.

இதுதான் சரி என்பதை நீங்கள் ஏற்கிறீர்களா?

7.158 மெற்றிகுலேசன் பள்ளிகள் மீதுள்ள மோகத்திற்குக் காரணம், இங்கு வகுப்பிற்கு ஓராசிரியர் உண்டு; கிண்டர்கார்ட்டன் வகுப்புகள் உண்டு; ஆகியவையே.

இவை மற்ற பள்ளிகளில் இல்லை என்பது சிறப்பாக உணர்த்தப் படுகிறதோ? அங்குப் பல வகுப்புகளுக்கு ஒரு

ஆசிரியரே இருப்பார்; மேலும் மழலையர் வகுப்புகளும் அங்கில்லை; இவையே மக்களுக்கு மெற்றிகுலேசன் பள்ளிகள் மீதுள்ள மோகத்திற்குக் காரணம்,

என அக் குறிப்பை வெளிப்படை யாக்கி நன்கு விளங்கிக் கொள்வோமாக.

7.159 அவர்கள் ஒருவர் மற்றவரைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாமற் போகின்றனர்.

அவர்களால் அல்லது அவர்களுள் ஒருவர் மற்றவரைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாமற் போகின்றது என்பதைச் செம்மையாக எழுத நினைத்துப் போகின்றனர் என முடித்துக் காட்டியுள்ளார் இவர். அவர்களுள் ஒருவர் எங்காவது போகின்றனர் எனில் இம் முடிவு சரியாகலாம். புரிந்து கொள்வது தானே முடியாமற் போகின்றது. ஆகவே, முடியாமற் போகிறது அல்லது முடிய வில்லை என்றே முடிக்கலாமே.

7.160 எழுத்துச் சுகத்துக்காக எழுதாமல் வலி நிவாரணி யாக எழுதுகிறான்.

எழுத்துச் சுகத்துக்காக எழுதாமல் வலி நிவாரணத்துக்காக எழுதுகிறான் என்பது சரியா யிராதா? வலியைப் போக்குவது எழுத்தே யாயின், வலி நிவாரணியாக என்பது சரியாயிருக்கக் கூடும். எழுதுவதுதான் வலியைப் போக்குகிறது எனில், வலி நிவாரணத்துக்காக என்பது தானே சரியாக இருக்க முடியும்?

இவ்வாறெல்லாம் எண்ணி எண்ணி எழுதாவிடின் நம் அரும் பெறல் தமிழ் ஆற்றல் குறைந்து குறைந்து மழுங்கி மறைந் தொழியுமே. அத் திருப் பணிக்காகவா நாம் எழுது கோலைக் கையிலெடுத்துள்ளோம்?

7.161 ஆனால் அவளின் எழுத்துக்குள் உலகமே கூடு கட்டுகிறதே. நத்தையாய்ச் சுருள்கிறதே.

நத்தை சுருளுமா? சுருங்குமா? இவ் வெழுத்தாளர் சுருளுக்கும் சுருக்கத்துக்கும் வேறுபாடு தெரியாமல் எழுதி யிருப்பார் அல்லது நத்தைக்கும் மரவட்டைக்கும் வேறுபாடு தெரியாத வராயிருப்பார். அன்றி இவர் மரவட்டையையே நத்தை என்று நினைத்துக் கொண்டு இதை எழுதியிருப்பார். அவர் நிலை எதுவாயினும் நத்தையாய்ச் சுருள்கிறதே என அவர் எழுதியது சரியற்றதே.

7.162 இந்தச் சீசனில் பத்து கிலோ வாங்கிப் போட வேண்டும் என்ற நினைப்பை எரிக்க முடியுமா? தெரியவில்லை.

காலம் அல்லது பருவம் என்பன போன்ற தமிழ்ச் சொற்களை ஆளாமல், அவற்றை அழிய விட்டுவிட்டுச் சீசனுக்கு இவர் வாழ்வளித்துள்ளார். எரிக்க முடியுமா? என வினவி அத் தொடரை முடித்தபின், தெரியவில்லை என்று துண்டாகவும், மொட்டையாகவும் எழுதி யிருப்பதேனோ? அதை, 'எரிக்க முடியுமா என்பது தெரியவில்லை' என முன்னதோடு இணைத்திருக்கலாம். அல்லது ஒன்றும் தெரிய வில்லையே; அது தெரியவில்லை என்பன போன்ற தக்க தொரு வேறு எழுவாயுடன் சேர்த்து அதை எழுதியிருக்கலாம்.

7.163 அந்த ஊரிலிருந்த அந்தக் கிழவனுக்கு வாழ்க்கையின் பொருள் புரிந்து விட்டது.

முன் அறிமுகம் சிறிதும் இல்லாமல் 'அந்த ஊரிலிருந்த' என்பது போன்று தொடங்குவது, இக் கால எழுத்தாளர்களின் நாகரிகம் போலும்.

7.164 ஆணுக்கு அடிமைதான் என்னும் விடாப்பிடியாகக் கொள்கைகளாகக் கொண்டது நம்முடைய தேசந்தான்.

'என்னும் விடாப்பிடியைக் கொள்கையாகக் கொண்டது' என்றாலோ, 'விடாப் பிடியான கொள்கையாகக் கொண்டது' என்றாலோ அதைச் சரியான தொடராக ஏற்க முடியும். இங்கு, கொள்கைகளாக எனும் பன்மை வாய்பாடும் தேவையற்றதுதான். 'பெண் ஆணுக்கு அடிமைதான் என்னும் விடாப்பிடிக் கொள்கையைக் கொண்டது நம் நாடுதான்' என்று அத் தொடரை நன்கமைத்துக் கொள்வோமே.

7.165 இச் சாதனையை அவர்கள் எவ்வாறு சாதித்தனர்.

அ. இதனை அவர்கள் எவ்வாறு சாதித்தனர்?

ஆ. அவர்கள் இச் சாதனையை எவ்வாறு பெற்றனர்?.

இவை யிரண்டைப் போன்றதொரு நல்ல வடிவம் அதற்குத் தரப்படலாமே.

7.166 அரசூழியர், ஆசிரியர்களின் நலனுக்காக அரசியல் கட்சிகளின் தொழிற் சங்கங்கள் சார்பில் உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்ய உள்ளது.

அரசூழியர், ஆசிரியர் ஆகியோரின் அல்லது போன்றோரின் நலனுக்காக அரசியல் கட்சிகளின் தொழிற் சங்கங்கள் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்படும் ஏற்பாடு உள்ளது. எனில் இத் தொடரும் நற்றொடரே யாம்.

○○○

8. வேற்றுமை மயங்கியல்

கல்விக் கூடங்களில் கற்பிக்கப்படும் தமிழ்ப் பாடத் திட்டம் குறைபாடுடையதா? பாடங்கள் குறை உள்ளனவா? கற்பித்தலில் குறையுள்ளதா? கற்பதில் குறையுள்ளதா? இவை யாவும் குறை யற்றிருப்பினும் அதனை நெஞ்சில் நிறுத்திப் பயன்படுத்தாக் குறையா? அதுவுமில்லை எனில் எழுத்தாளர்கள், மொழி மரபு, இலக்கணம் போன்றவற்றைப் பொருட் படுத்துவதில்லையா? இப்படி மரபு பிறழ்ந்து எழுதுவதே சரி எனக் கருதி எழுதுவோர் எழுதுகின்றனரா? இவற்றில் எது உண்மை யாயினும் அல்லது எல்லாமே உண்மை யாயினும் தமிழ் உரைநடை பல் வகைக் குறையும் பாங்குற அமைந்தே காணப்படுகிறது.

இடைச் சொற்களைப் பெரும்பாலும் புறக்கணித்து ஒதுக்குகின்ற பழக்கம், செய்தியாளர் போன்றோரிடம் பரவலாக ஏற்பட்டுவிட்டது. வேற்றுமை உருபுகள் இப் போக்கிற்கு இரையாகி விட்டன. அவற்றை அரியவாக ஆள்வோரும் தவறாக ஆள்கின்றனர். அவ்வாறு வேற்றுமை உருபுகளை ஆள்வதில் உள்ள குறைகள் பதின் மூன்று இவ் வியலில் எடுத்துக் காட்டப் படுகின்றன. ஒரு வேற்றுமை உருபு இருக்க வேண்டிய இடத்தில் வேறொரு வேற்றுமை உருபு இடம் பெற்றிருப்பதால், அத் தகையன - வேற்றுமை மயக்கம் எனப்பட்டு இவ்வியலும் வேற்றுமை மயங்கியல் எனப் பெயர் பெறுவதாயிற்று.

வேற்றுமை இலக்கணத்தை அறிந்து கொள்ள விரும்புவோர் அதற்குரிய நூல்கள் பற்பல உள்ளன வாதலால் அவற்றைப் படித்து அறிந்து கொள்க. எந்த இலக்கணத்தையும் கற்பிப்பது இங்கு எமது நோக்க மன்று. உரை நடையில் ஏற்படும் முட்டுப்

பாடுகளைக் களைந்து தெளிவு ஏற்படுத்துதலே இங்கு எமது நோக்கமாகும்.

8.1 சதையை வெளிச்சம் போடும் உடையும்...

சதையைக் கூறுபோடும் என்றால் இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'அய்' அங்குப் பொருத்தமாக இருக்கும். சதைக்கு வெளிச்சம் போடும் உடையும் என்று நான்காம் உருபாகிய 'கு'வை பயன்படுத்துவதுதான் இங்குத் தக்கது என்பது, யாம் அதனை எடுத்துக் காட்டிய பிறகு யாவர்க்கும் புலப்பட்டிருக்கக் கூடும். சதையை வெளிச்சம் போட்டுக் காட்டும் உடை எனின் அதனை ஏற்கலாம்.

8.2 அ. குழந்தைகள் மகிழ்ச்சியில் பங்கேற்கலாம்.
ஆ. குழந்தைகளோடு கூடிக் களிக்கலாம்.

அ) இங்குக் குழந்தைகள் பிறர் மகிழ்ச்சியிற் பங்கேற்கலாம் என்றும் பொருள் கொள்ள இட மிருப்பதால், எழுதியவரின் கருத்து விளங்கக் குழந்தைகளது மகிழ்ச்சியில் பங்கேற்கலாம் என்பது பொருத்தமாகும். முதல் வேற்றுமையாக உள்ள இதனை ஆறாம் வேற்றுமையின் அது உருபைச் சேர்த்து மாற்ற வேண்டும்

ஆ) நாம் என்பது போன்ற ஏதோ ஒரு எழுவாய் இங்குத் தோன்றாமல் உள்ளது. ஆதலின் குழந்தைகளோடு (நாம்) கூடிக் களிக்கலாம் என்பது வழுவற்ற செந்தொடரே யாம்.

8.3 33 ஆயிரம் கிராமப் பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லா மல் மூடப்பட்டுள்ளன.

பள்ளிகளில் என்னும் ஏழாம் வேற்றுமையைப் பள்ளிகள் என முதல் வேற்றுமையாக மாற்ற வேண்டும். அஃதாவது, பள்ளிகள் எனும் எழுவாய் வேற்றுமை மயங்கிப் பள்ளிகளில் என ஏழாம் வேற்றுமை யுருபாகிய 'இல்' என்பதை அது ஏற்றுள்ளது. 'மூப்பத்து மூன்றாயிரம் கிராமப் பள்ளிகள் ஆசிரியர்க ளில்லாமையால் மூடப்பட்டுள்ளன' என்பது நன்றா யிருக்கிறதா?

8.4 துப்பாக்கி முனையில் மடக்கிப் பிடித்தனர்.

துப்பாக்கி முனையால் என்றோ, துப்பாக்கி முனையைக் காட்டி என்றோ எழுத வேண்டிய இதனை, எக் காரணத்தாலோ இவர் துப்பாக்கி முனையில் என்று எழுதியுள்ளார். மூன்று அல்லது இரண்டாம் வேற்றுமை இங்கு ஏழாம் வேற்றுமையாக மயங்கியுள்ளது.

8.5 தனது காரியத்தைச் சாதித்து நண்பரை மீண்டும் பட்டம் சூட்டிவிட்டனர்.

இங்கு நண்பருக்கு என்னும் நான்காம் வேற்றுமை யுருபு, நண்பரை என இரண்டாம் உருபாக மயங்கி விட்டது.

8.6 வீட்டுச் சிறையில் தப்பி கோவிலில் காதலனைத் திருமணம் செய்த பெண்.

இங்கு வீட்டுச் சிறையிலிருந்து தப்பி என அய்ந்தாம் வேற்றுமை யுருபு தரப்படவேண்டிய இடத்தில், சிறையில் என ஏழாம் வேற்றுமை யுருபு தரப்பட்டுள்ளது. பெண் வேறு யாருக்கேனும் திருமணம் செய்தாளா? அன்றித் தான் திருமணம் செய்து கொண்டாளா? 'வீட்டுச் சிறையிலிருந்து தப்பிக் கோவிலில் தன் காதலனைத் திருமணம் செய்து கொண்ட பெண்' என்பதுதானே நல்ல தமிழ்ச் சொற் றொடராகும்?

8.7 எச் முத்திரை பெறுவதற்குக் காலக்கெடு நாளை முதல் முடிகிறது.

நாளை முதல் முடிகிறது என்றால் அது, நாளை முதல் எத்தனை நாள்களில் முடியும் என்னும் அய்யம் தோன்றாதா? அதனை அகற்றும் வழி யாதோ? நாளையோடு முடிகிறது என மூன்றாம் வேற்றுமைப் பொருள் தரும் 'ஓடு' உருபே சாலப் பொருந்தும்.

8.8 பூமியிலிருந்து சக்தி வாய்ந்த தொலை நோக்கியால் தெரியக் கூடிய ஒரு பால் வெளி மண்டலத்தில்...

தொலை நோக்கியில் என ஏழாம் வேற்றுமை உருபே இங்கு இருக்கத் தக்கது. ஆனால் அக் காட்சி, தொலை நோக்கியில் இருக்கக் கூடிய தன்றே. ஆதலால் தொலை நோக்கியால் காணக் கூடிய என அதனை மாற்றி யமைத்து விட்டால், 'ஆல்' எனும் மூன்றனுருபு ஏற்புடையதாக அமைந்து விடும். தொலை நோக்கிக்குத் தெரியக் கூடிய என்னும் நான்காம் வேற்றுமைக்கும் சிறிது பொருத்தம் உள்ளது. ஆனால் அதற்குத் தெரியக் கூடிய என்பதன் உதவியும் தேவைப்படும்.

8.9 இதன் பிறகு சி.கே. வாசனுக்கும் சோ. பாவுக்குமே முட்டிக் கொள்ள ஆரம்பித்தது.

வாசனுக்கும், சோ. பாவுக்கும் இடையில் ஏதேனும் முட்டிக் கொண்டதா? வாசனும், சோ. பாவும் முட்டிக் கொண்டார்கள், மோதிக் கொண்டார்கள் என்பனவே சரியான தொடர்கள்.

8.10 அ. தலையில் அடித்தார்
ஆ. தலையை அடித்தார்.

ஈயை அடித்தார் என்பதற்கும், தலையை அடித்தார் என்பதற்கும் இடையில் உள்ள வேறுபாடு காணப்பட வேண்டியது. தலை ஒருவரது உறுப்பாயிருப்பதால் அவரை அவரது தலையில் அடித்தார் என்பதே செவ்விது.

8.11 அ. நிகழ்ச்சியில் குடும்பமாகக் கலந்து கொள்ளலாம்.
ஆ. நிகழ்ச்சியில் குடும்பத்தோடு கலந்து கொள்ளலாம்.

நிகழ்ச்சியில் குடும்பமாக ஆகிப் பிறகுதான் கலந்து கொள்ள வேண்டுமா? குடும்பத்தோடு என மூன்றாம் வேற்றுமை உருபு இருக்க வேண்டிய இடத்தில் ஆக என்பது மயங்கி வந்து

உட்கார்ந்து கொண்டதோ?

8.12 கோவில் திரிசூலத்தில் குத்தித் தொழிலாளி பிண மாகக் கிடந்தர்.

தொழிலாளியின் உடலைத் தூக்கிக் கோவில் சூலத்தில் குத்தியதால், அத் தொழிலாளி பிணமாகக் கிடந்தாரா?

சூலத்தில் குத்திக் கொண்டு அவர் பிணமானாரா?

சூலத்தால் குத்தப்பட்டுத் தொழிலாளி பிணமாகக் கிடந்தாரா?

இல், ஆல் எனும் உருபுகளும் குத்தி, குத்திக் கொண்டு, குத்தப்பட்டு ஆகியனவும் மயங்கி நம்மை மருட்டித் துன்புறுத்துகின்றன. உண்மையில் அத் தொழிலாளி மாண்டது எப்படி என்பது விளங்கவே யில்லை.

8.13 இளம் பெண் தூக்குப் போட்டுச் சாவு

இளம் பெண் தூக்குப் போட்டு எது செத்தது? அல்லது யார் செத்தார்? தூக்குப் போட்டுக் கொண்டு எனில் எது கெட்டுவிடும்.

8.14 சூலத்தில் குத்திக் கொண்டு முதியவர் தற்கொலை.

இதுவும் தொழிலாளி சாவு போலவே நம்மைக் குழப்பும் சாவாக உள்ளது.

சூலத்தின் மேல் பாய்ந்து முதியவர் தற்கொலை செய்து கொண்டாரா? சூலத்தால் தம்மைக் குத்திக் கொண்டு முதியவர் தற்கொலை செய்து கொண்டாரா?

○○○

9. முதற்குறிப்பு விளக்கம்

1.	கல்.	- கல்கி
2.	க.தொ.கா.செ.	- கதிர்த் தொலைக்காட்சிச் செய்தி
3.	குங்.	- குங்குமம்
4.	செ.மை.தொ.நி.	- சென்னை மையத் தொடர் நிலையம்
5.	தி.இ.ம.	- தினமணி இளைஞர் மணி
6.	தி.ணி.	- தினமணி
7.	தி.ன்.	- தினகரன்
8.	தி.ம.க.	- தினமணி கதிர்
9.	தெ.ஆ.செ.	- தென் ஆசியச் செய்தி
10.	தெ.த.	- தெளிதமிழ்
11.	ப.	- பக்கம்
12.	பு.அ.த.	- புத்தரும் அவர் தர்மமும்
13.	முர.	- முரசொலி
14.	வா.செ.	- வானொலிச் செய்தி

○○○

10. குறிப்புகள்

நூலாசிரியரே தந்தனவும், பிற வகையில் ஆதாரங்கள் தர இயலாதனவும் புள்ளியிடப்பட்டுள்ளன.

3. சொல்லியல்

3.1... 3.19... 3.37...
3.2... 3.20... 3.38...
3.3... 3.21... 3.39...
3.4... 3.22... 3.40...
3.5... 3.23... 3.41...
3.6... 3.24... 3.42...
3.7... 3.25... 3.43...
3.8... 3.26... 3.44...
3.9... 3.27... 3.45...
3.10... 3.28... 3.46 முர. 4.8.03 ப : 3
3.11... 3.29...
3.12... 3.30.... 3.47...
3.13... 3.31... 3.48...
3.14... 3.32... 3.49...
3.15... 3.33... 3.50...
3.16... 3.34... 3.51...
3.17... 3.35... 3.52...
3.18... 3.36... 3.53...

4. இடவியல்

4.1 தி.ன். 7.5.03 ப : 2
4.2 முர. 15.9.03 ப : 1
4.3. தி.ன். 23.3.03 ப : 1
4.4 தி.ன். 5.8.03 ப : 2
4.5 பேரா. இளவரசு மணி விழா மலர் ப : 19
4.6 முர. 11.9.03 ப : 4
4.7 க.தொ.கா. விளம்பரம் 21.7.03
4.8 தி.ணி. 24.7.03 ப : 6
4.9 தி.ன். 28.3.03 ப : 2
4.10 அன்பு வணக்கம் 2003 ஆக. ப : 2
4.11 தி.ன். 21.3.03 ப : 9
4.12 தி.ன். 28.10.03 ப : 3
4.13 முர. 30.6.03 ப : 1
4.14 முர. 20.5.03 ப : 5
4.15 முகம் மே. 2003 ப : 26
4.16 க.தொ.கா. செ. 10.7.03 நண்பகல்

4.17 தி.ன 12.7.03 ப : 9
4.18 .....
4.19 முர. 29.7.03 ப : 7
4.20 தி.ன். 25.8.03 ப : 2
4.21 முர. 10.10.03 ப : 3

5. உரிமையியல்

5.1 வாழ்க்கைத் துணை 2003 மே. ப : 8
5.2 தி.ன். 30.6.03 ப : 14
5.3 தி.ன். 16.5.03 ப : 3
5.4 தி.ன். 17-10-03 ப : 6
5.5 தி.ன். 8.5.03 ப : 6
5.6 தி.ன். 14.8.03 ப : 4
5.7 க.தொ.கா. செ. 10.6.03 இரவு.
5.8 க.தொ.கா. செ.
5.9 தி.ன். 17.6.03 ப : 1
5.10 க.தொ.க. செ. 31.7.03 காலை
5.11 தி.ன். 12.5.03 ப : 1
5.12 தி.ன். 7.5.03 ப : 6
5.13 .....
5.14 தி.ன். 29.4.03 ப : 5
5.15 முகம் மே. 2003 ப : 22
5.16 முர. 5.8.03 ப : 3
5.17 தி.ன். 24.8.03 ப : 9
5.18 தி.ணி. 28.10.03 ப : 2
5.19 புரட்சிப் பெரியார் முழக்கம் 30.10.03 ப : 1
5.20 முர. 26.9.03 ப : 3
5.21 க.தொ.கா. செ. 27.7.03 விளம்பரம்
5.22 முர. 8.9.03 ப : 3
5.23 தி.ன். 17.6.03 ப : 9
5.24 தி.ணி. 23.6.03 ப : 6
5.25 தி.ணி. 6.7.03 ப : 6
5.26 முர. 23.7.03 ப : 3
5.27 .... 7.7.03 ப : 11
5.28 தி.ன். 30.3.2003 ப : 2
5.29 தி.ன். 17.4.03 ப : 3
5.30 .....
5.31 தி.ன். 7.5.03 ப : 1
5.32 தி.ன். 6.7.03 ப : 3
5.33 தி.ன். 6.10.03 ப : 2
5.34 க.தொ.கா. செ. 4.10.03
5.35 தி.ணி. 6.6.03 ப : 1
5.36 முர. 10.6.03 ப : 7
5.37 தி.ணி. 3.9.03 ப : 6
5.38 தி.ணி. 4.8.03 ப : 10
5.39 தி.ன். 17.5.03 ப : 6
5.40 தி.ன். 19.3.03 ப : 3
5.41 தி.ன். 20.6.03 ப : 6
5.42 தி.ன். 4.8.03 ப : 2
5.43 .....
5.44 .....

6. விளக்கவியல்

6.1 - 6.11 .....
6.12 ஒரு துண்டறிக்கை 8.8.03
6.13 .....

6.14 க.தொ.கா. செ. 14.8.03 காலை விளம்பரம்.
6.15 .....
6.16 தி.ன். 16.9.03 ப : 1
6.17 .....
6.18 கல். 11.5.03 ப : 86
6.19 புதிய நினைவூட்டல் 03 ஆக. ப : 29
6.20 .....
6.21 தி.ன். 19.5.03 ப : 2
6.22 .....
6.23 .....
6.24 தி.ம.க. 23.3.03 ப : 8
6.25 முர. 31.7.03 ப : 3
6.26 க.தொ.கா. 5.8.03 காலை 8 மணி
6.27 .....
6.28 தி.ணி. 7.9.03 ப : 11
6.29 தி.ணி. 14.9.03 ப : 9
6.30 .....
6.31 தி.ணி. 3.9.03 ப : 5
6.32 .....
6.33 முர. 15.7.03 ப : 3
6.34 புரட்சிப் பெரியார் முழக்கம் 14.8.03 ப : 2
6.35 க.தொ.கா. செ. 12.6.03 8 மணி
6.36 .....
6.37 .....
6.38 தி.ணி. 22.5.03 ப : 10
6.39 முர. 23.10.03 ப : 4
6.40 பெண் எழுத்து ப : 9
6.41 .....
6.42 தி.ணி. 7.9.03 ப : 4
6.43 .....
6.44 தி.ன் 13.7.03 ப : 2
6.45 .....
6.46 தி.ன். 16.6.03 ப : 5
6.47 முர. 31.10.03; ப : 1
6.48 பெண் எழுத்து ப : 46
6.49 முர. 20.3.03 ப : 5
6.50 .....
6.51 .....
6.52 .....
6.53 க.தொ.கா. செ. 26.5.03 காலை 8 மணி
6.54 .....
6.55 சட்டக்கதிர் 2003 சூன், ப : 7
6.56 சட்டக்கதிர் 2003 சூன், பக் : 11
6.57 முர. 7.10.03 ப : 4
6.58 .....
6.59 .....
6.60 முர. 11.8.03 ப : 3
6.61 முர. 11.7.03 ப : 1
6.62 .....
6.63 .....
6.64 .....
6.65 க.தொ.கா. செ. 13.5.03

6.66 .....
6.67 முகம் 2003 ஆகஃச்டு ப : 13
6.68 முர. 28.7.03; ப : 3
6.69 முர. 9.8.03 ப : 2
6.70 கலைஞர் 80ஆம் பிறந்த நாள் மலர் 2003 முரசொலி. ப : 62
6.71 முர. 24.7.03 ப : 3
6.72 .....
6.73 .....
6.74 .....

7. தொடரியல்

7.1 தி.ன். 17.4.03 ப : 12
7.2 தி.ன். 10.5.03 ப : 4
7.3 தி.ன். 12.5.03 ப : 11
7.4 சட்டக்கதிர் 2003 சூலை ப : 45
7.5 பெண் எழுத்து ப : 14
7.6 பெண் எழுத்து ப : 15
7.7 தி.ணி. 20.7.03 ப : 1
7.8 சட்டக் கதிர் 2003 சூலை ப : 3
7.9 முர. 27.10.03 ப : 3
7.10 தி.ன். 26.10.03 ப : 6
7.11 தி.ணி. 16.5.03 ப : 1
7.12 தி.ன். 17.4.03 ப : 5
7.13 தி.ன். 25.4.03 ப : 2
7.14 தி.ன். 5.4.03 ப : 1
7.15 தி.ன். 11.4.03 ப : 6
7.16 தி.ன். 13.4.03 ப : 2
7.17 தி.ன். 3.4.03 ப : 13
7.18 முகம் 241 ப : 12
7.19 முர. 2.4.03 ப : 1
7.20 தி.ன். 3.4.03 ப : 1
7.21 முர. 27.3.03 ப : 1
7.22 முர. 26.3.03 ப : 1
7.23 தி.ன். 25.3.03 ப : 4
7.24 இந்துச் சாதியின் எழுச்சியும் வீழ்ச்சியும் ப : 41
7.25 இந்துச் சாதியின் எழுச்சியும் வீழ்ச்சியும். ப : 44
7.26 தி.ன். 16.3.03 ப : 7
7.27 க.தொ.கா. 14.3.03 காலை, அகல்விளக்குகள் நாடகம்
7.28 முர. 17.3.03 ப : 3
7.29 தி.ன். 17.3.03 ப : 6
7.30 தி.ன். 18.3.03 ப : 1
7.31 தி.ன். 25.4.03 ப : 3
7.32 தி.ன். 18.3.03 ப : 1
7.33 தி.ன். 17.3.03 ப : 6
7.34 தி.ன். 24.3.03 ப : 1
7.35 தி.ன். 25.3.03 ப : 3
7.36 முர. 21.7.03 ப : 5
7.37 தி.ன். 15.3.03 ப : 6
7.38 தி.ன். 21.4.03 ப : 1
7.39 தி.ன். 29.4.03 ப : 5

7.40 தி.ன். 25.4.03 ப : 3
7.41 க.தொ.கா. செ. 1.5.03 காலை
7.42 தி.ன். 4.5.03 ப : 1
7.43 முர. 6.5.03 ப : 1
7.44 தி.ன். 7.5.03 ப : 6
7.45 க.தொ.கா. செ. 1.5.03 காலை
7.46 முகம் 2003 மே. ப : 22
7.47 வாழ்க்கைத் துணை 2003 மே, ப : 8
7.48 முர. 16.4.03 ப : 6
7.49 தி.ன். 9.5.03 ப : 4
7.50 புதிய நினைவூட்டல் 2003 மே. ப : அட்டை
7.51 கல். 11.5.03 ப : 2
7.52 புதிய நினைவூட்டல் 2003 மே ப : 22
7.53 தி.ன். 12.5.03 ப : 8
7.54 தி.ன். 13.5.03 ப : 4
7.55 தி.ன். 15.5.03 ப : 5
7.56 க.தொ.கா. 16.5.03, காலை 8 மணி.
7.57 முர. 16.5.03 ப : 5
7.58 தி.ன். 20.5.03 ப : 6
7.59 தி.ன். 6.5.03 ப : 1
7.60 தி.ன். 24.5.03 ப : 10
7.61 தி.ன். 26.5.03 ப : 1
7.62 .....
7.63 முர. 18.5.03 ப : 1
7.64 முர : 28.5.03 ப : 5
7.65 முர. 19.8.03 ப : 3
7.66 தி.ன். 26.5.03 ப : 1
7.67 தி.ன். 30.6.03 ப : 2
7.68 பேரா. இளவரசு மணி விழா மலர் ப : 18
7.69 பேரா. இளவரசு மணி விழா மலர் ப : 19
7.70 பேரா. இளவரசு மணி விழா மலர் ப : 19
7.71 தி.ன். 21.8.03 ப : 9
7.72 தொல்காப்பிய நெறியில் திருக்குறளும் சிலப்பதிகாரமும் ப : 119
7.73 .....
7.74 முர. 26.8.03 ப : 3
7.75 முர. 26.8.03 ப : 8
7.76 தி.ன். 6.9.03 ப : 4
7.77 தொ.கா. விளம்பரம் 18.10.03 காலை
7.78 முர. 6.10.03 ப : 4
7.79 தி.ன். 16.10.03 ப : 2
7.80 .....
7.81 தி.ணி. 21.10.03 ப : 6
7.82 க.தொ.கா. செ. 22.10.03 இரவு 8.00
7.83 தி.ன். 28.4.03 ப : 4
7.84 .....
7.85 முர. 27.10.03 ப : 3
7.86 தி.ன். 27.10.03 ப : 1

7.87 முர. 29.10.03 ப : 6
7.88 தி.ன். 30.5.03 ப : 4
7.89 முர. 30.10.03 ப : 3
7.90 தி.ன். 3.11.03 ப : 2
7.91 தி.ன். 9.5.03 ப : 1
7.92 முர. 30-10-03 ப : 3
7.93 தி.ன். 28.5.03 ப : 4
7.94 முர. 29.5.03 ப : 2
7.95 முர. 29.5.03 ப : 3
7.96 க.தொ.கா. 29.5.03 1.30 செய்தி
7.97 தி.ணி. 31.5.03 ப : 1
7.98 தி.ன். 3.6.03 பக் : 12
7.99 முர. 5.6.03 ப : 4
7.100 முர. 6.6.03 ப : 4
7.101 தி.ன். 6.6.03 ப : 5
7.102 விளம்பரம் தாள் 5.6.03
7.103 தி.ணி. 1.6.03 ப : 1
7.104 முர. 8.6.03 ப : 1
7.105 க.தொ.கா. 7.6.03 இரவு 8 மணி
7.106 முர. 8.6.03 ப : 2
7.107 தி.ன். 10.6.03 ப : 3
7.108 முர. 8.6.03 ப : 7
7.109 புதிய நினைவூட்டல் 2003 சூன் ப : 20
7.110 க.தொ.கா. செ. 16.6.03 காலை
7.111 தி.ன். 18.6.03 ப : 6
7.112 தி.ன். 18.6.03 ப : 1
7.113 தி.ன். 19.6.03 ப : 6
7.114 க.தொ.கா. செ. 19.6.03 காலை.
7.115 காசி ஆனந்தன் நறுக்குகள்
7.116 முர. 29.6.03 ப : 3
7.117 முர. 29.6.03 ப : 4
7.118 தி.ன். 20.6.03 ப : 6
7.119 முர. 30.7.03 ப : 3
7.120 தி.ன். 1.8.03 ப : 6
7.121 தி.ணி. 31.7.03 ப : 6
7.122 சமரசம் 1-15 ஆகஃச்ட்டு ப : 38
7.123 முர. 4.8.03 ப : 1
7.124 தி.ணி. 4.8.03 ப : 5
7.125 தி.ன் 12.8.03 ப : 6
7.126 தி.ணி. 5.11.03 ப : 2
7.127 முர. 27.7.03 ப : 3
7.128 முர. 14.8.03 ப : 3
7.129 முர. 9.8.03 ப : 1
7.130 தென்றல் 2003 ஆக. ப : பி 22
7.131 தொல்காப்பிய நெறியில் திருக்குறளும், சிலப்பதிகாரமும், ப : 67
7.132 முர. 30.10.03 ப : 3
7.133 தி.ன். 1.8.03 ப : 8
7.134 முகம் 2003 ஆகஃச்டு
7.135 புதிய நினைவூட்டல் 2003 சூன் ப : 20

7.136 தி.ன். 5.8.03 ப : 9
7.137 தி.ன். 5.8.03 ப : 4
7.138 தென்றல் 2003 ஆக. ப : பி 23
7.139 க.தொ.கா. 14.7.03
7.140 க.தொ.கா. 1.8.03 விளம்பரம்
7.141 தி.ணி. 15.9.03 ப : 1
7.142 .....
7.143 க.தொ.கா. செ. 1.6.03 இரவு 8 மணி
7.144 முர. 18.7.03 ப : 3
7.145 முர. 29.7.03 ப : 1
7.146 தி.ன். 1.7.03 ப : 1
7.147 திராவிட சமயம் 2003 - 7 (சூலை) ப : 12
7.148 தி.ணி 6.7.03 ப : 2
7.149 .....
7.150 முர. 9.7.03 ப : 2
7.151 தி.ன். 6.7.03 ப : 6
7.152 தி.ன். 7.7.03 ப : 1
7.153 தி.ணி. 10.7.03 ப : 12
7.154 தி.ன். 13.7.03 ப : 14
7.155 தி.ணி. 13.7.03 ப : 9
7.156 தி.ன். 14.7.03 ப : 6
7.157 முர 15.7.03 ப : 1
7.158 தமிழ்ச் சான்றோர் பேரவைச் செய்திமடல் 2003 சூலை ப : 7
7.159 சமரசம் 2003 சூலை 16-31 ப : 20
7.160 பெண் எழுத்து ப : 9
7.161 பெண் எழுத்து ப : 13
7.162 பெண் எழுத்து ப : 42
7.163 முர. 20.7.03 ப : 3
7.164 பெண் எழுத்து ப : 48
7.165 முர. 26.9.03 ப : 3
7.166 முர. 15.7.03 ப : 1

8. வேற்றுமை மயங்கியல்

8.1 பெண் எழுத்து ப : 56
8.2 க.தொ.கா. 30.7.03 விளம்பரம்
8.3 தி.ன். 14.7.03 ப : 6
8.4 க.தொ.கா. 25.8.03 காலைச் செய்தி
8.5 தி.ன். 6.6.03 ப : 5
8.6 தி.ன். 4.9.03 ப : 5
8.7 க.தொ.கா. செ. 30.10.03 பகல் 1.30
8.8 முர. 30.7.03 ப : 3
8.9 சூனியர் விகடன் 22.6.03 ப : 38
8.10 தி.ன். 18.8.03 ப : 6
8.11 கல். 27.7.03 ப : 2
8.12 தி.ன். 31.7.03 ப : 5
8.13 .....
8.14 தி.ணி. 31.7.03 ப : 2

○○○

Graphics/Shravan

7.160

எழுத்துச் சுகத்துக்காக எழுதாமல் வலி நிவாரணியாக எழுதுகிறான்.

எழுத்துச் சுகத்துக்காக எழுதாமல் வலி நிவாரணத்துக்காக எழுதுகிறான் என்பது சரியா யிராதா? வலியைப் போக்குவது எழுத்தே யாயின் வலி நிவாரணியாக என்பது சரியா யிருக்கக்கூடும். எழுதுவதுதான் வலியைப் போக்குகிறது எனில் வலி நிவாரணதுக்காக என்பதுதானே சரியாக இருக்க முடியும்?

இவ்வாறெல்லாம் எண்ணி எண்ணி எழுதாவிடின் நம் அரும் பெறல் தமிழ் ஆற்றல் குறைந்து, குறைந்து, மழுங்கி, மழுங்கி மறைந் தொழியுமே. அத் திருப் பணிக்காகவா நாம் எழுது கோலைக் கையி லெடுத்துள்ளோம்?

ஏகம் பதிப்பகம்
தபால் பெட்டி எண் : 2964
3, பிள்ளையார் கோயில் 2ஆம் சந்து, முதல் மாடி,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
☎ 28529194, 31169283